அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 18-06-1993

### மகனை போராட்டத்திலிணைத்தார்

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த பூபாலசிங்கம் என்பவர் தனது மகனான பூலோகராசா என்பவரை வல்வெட்டித்துறையில் இருக்கும் கடற்புலிகளின் அரசியல் துறைச் செயலகத்தில் வைத்து போராட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காக கையளித்தார். அவர் அங்கு கூறுகையில், தான் நாட்டுக்குச் செய்ய முடியாதுபோன சேவையைச் செய்ய என்மகன் முன்வந்துள்ளார். எனவே பெற்றோராகிய எமது பூரண விருப்பத்துடன் என் மகனைப் போராட்டத்தில் இணைக்கிறேன் என்றார். இதேவேளை திருமதி ராஜேஸ்வரி திருச்செல்வம் என்பவர் 18 வயதான தனது மகள் நாளினாவை கடற்புலிகளின் யாழ் மாவட்ட அலுவலகத்தில் போராட்டத்தில் இணைந்துக் கொள்வதற்காக கையளித்துள்ளார். ●

# திரண்டு வரும் உலக அபிப்பிராயத்தை சிதைக்க ஸ்ரீலங்கா சதி

## – பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் புதிய அறிவிப்பு –

சிறீலங்காவில் உள்ள பிரச்சினை சிறுபான்மை -பெரும்பான்மை இனப்பிரச்சினை அல்ல. சிங்கள பௌத்த பேரினவாதிகளின் சதிக்கு அன்றைய தமிழ்த் தலைவர்கள் துணை போனதாலேயே இருதேசிய இனங்களுக்கு இடையேயான பிரச்சினை -இரு தேசிய இனங்களின் இறைமை மோதல் என்பது பெரும்பான்மை -சிறுபான்மை இனப்பிரச்சினை என்ற தவறான தலைப்பின்கீழ் சர்வதேச சமூகத்தின் முன் கொண்டு செல்லப்பட்டது. இதனாலேயே உள்விவகாரம், இனவாதம், பயங்கரவாதம் என்ற சொற்றொடர்களால் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்டது. அத்துடன் பிழையான முறையில், சர்வதேச சமூகத்திற்கு விளக்கமளிக்கப்பட்டதனால் சர்வதேச சட்டங்களுக்கு அமைய, இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை இது என பல நாடுகளும் ஐ.நா.வும் கருத வழிவகுக்கப்பட்டது.

#### தேசநிர்மாணப் போக்கு

இலங்கைத்தீவில் தனியான இறைமையுடனும் ஆட்சி உரிமையுடனும் இருந்து வந்த தமிழீழ மக்கள், குடியேற்ற ஆட்சியில் இருந்து விடுபட்டதும், தேச நிர்மாணப் போக்கினை (Nation Building Process) காட்டுகின்றனர். இது குடியேற்ற ஆட்சிக்குட்பட்டு விடுபட்ட ஆசிய ஆபிரிக்க நாடுகளில் காணப்படும் பொதுப்பண்பு. இந்த அரசியல் யதார்த்தத்தை புரிந்தும் புரியாததுபோல் நடிக்கும் சிறீலங்கா அரசு, ஆயுதப் படைகளைப் பயன்படுத்தி அரச பயங்கரவாதத்தைத் தோற்றுவித்து, தமிழீழ மக்களை அகதிகளாக்கி, இடம்பெயர் வாழ்வுக்கு வழி செய்து வருகிறது. இத்தகைய அப்பட்டமான ஆக்கிரமிப்பும் இன அழிப்பும் தொடர்கிறது.

#### 'தமிழர் தாயக முழுமை' அங்கீகரிக்கப்பட்டால்....

இந்நிலையில் தமிழர் தாயக முழுமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி முறை முன்வைக்கப்பட்டால் பரிசீலிக்கத் தயார் என்ற தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் பி.பி.சி. பேட்டி சர்வதேச சமூகத்தவரிடையே நல் அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால், தீர்வைக் காணும்படி சிறீலங்கா அரசை, பல நல்லெண்ண அமைப்புக்களும் சமாதானத்தை விரும்பும் நாடுகளும் வற்புறுத்துகின்றன.

#### தெரிவுக்குழுவின் சதி

ஆனால், எப்படியாவது கிழக்கை வடக்கோடு இணையவிடாது தடுத்து, தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டையே சிதைக்க சிறீலங்கா கங்கணம் கட்டி நிற்கின்றது. இதன் அடிப்படையில் சிங்கள -பௌத்த பேரினவாதக் கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றின் குரலொலியான 'பாராளுமன்றத் தெரிவுக்குழு' கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தி, கிழக்கை வடக்கோடு இணைப்பதுபற்றி முடிவெடுக்க வேண்டுமென அறிவித்துள்ளது.

#### எப்படி சர்வசன வாக்கெடுப்பை நடாத்துவது?

கிழக்கு மாகாணத்தில் 'கடற்காற்று' என்ற இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியுள்ள சிங்கள அரசு, பாரிய இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியில் வாகரை, பனிச்சங்கேணி, கதிரவெளி, காயங்கேணி, மாங்கேணி உட்பட்ட தென்தமிழீழத்தின் வடபகுதியில் தொடர்ச்சியான மூன்று நாள் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து செயலாற்றி வருகின்றது. இராணுவ அச்சுறுத்தலால் கிழக்கு மாகாண மக்களை நாள் நினைத்தபடி செயற்பட வைக்க

தொடர்ச்சி 14ம் பக்கம் .....

# தமிழீழ காவல்துறை 3வது அணி வெளியேறியது



பயிற்சியை முடித்துக்கொண்ட தமிழீழக் காவல்துறையின் 3வது அணியின் ஒரு பகுதியினர்

தமிழீழ காவல்துறையின் மூன்றாவது அணி தனது பயிற்சியை முடித்து வெளியேறும் மரியாதை அணிவகுப்பு அண்மையில் இடம்பெற்றது.

இம்மரியாதை அணிவகுப்பை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துணைத் தளபதி மாத்தையா ஏற்றுக்கொண்டார். தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசனும் இந்த மரியாதை ஏற்பில் கலந்துகொண்டார்.

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன், யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, மேலும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் கண்ணன், பாலகுமாரன், புரா, காவல்துறைத் துணைப் பொறுப்பாளர் இளங்கோ, துணை அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் ஜவான், யாழ் மாவட்டத் தளபதி அன்பு, மற்றும் பதுமன், செந்தாளன், ரேகா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பயிற்சியை முடித்துக் கொண்ட காவல்துறை உறுப்பினர்கள் யாழ் மாவட்டம், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் பணிக்காக அனுப்பி வைக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. ■

# சர்வதேச சமாதான தூதுக் குழு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை

- தாயக முழுமை
- யுத்த நிறுத்தம்
- "மடு"வில் யுத்த சூனியப் பிரதேசம்

இலங்கைத் தீவில் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினையில், அமைதியை ஏற்படுத்த வழிகாணும் நோக்குடன் யாழ் சென்ற சர்வதேச ஐவர் குழு விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளது. தாய்லாந்து அமைதிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வண. சன்சாய் குசலசித்தா என்ற பௌத்த துறவி தலைமையில், சிங்கப்பூர் பிரஜையைப் பிறப்பிடமாகக் கொண்ட மலேசியப் பினாங் நகர கத்தோலிக்க ஆயர் மேதகு செல்வநாயகம், பிலிப்பைன்ஸ் கத்தோலிக்க ஆயர் பிரூவல்லி, பிலிப்பைன்சைச் சேர்ந்த கோட்வின் செடிசோ, நைஜீரியாவைச் சேர்ந்த செல்வி கதரின் கசேர்ஸ் ஆகியோர் சர்வதேச ஐவர் குழுவில் இடம்பெற்றிருந்தனர். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று மக்களையும் சேதங்களையும் பார்வையிட்ட இவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆகியோரையும் சந்தித்து உரையாடினர்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# உலக அங்கீகாரம்

92/93ம் ஆண்டில் உலகமெங்கும் முக்கியத்துவம் பெற்றுள்ள ஒரு சொல் 'சுயநிர்ணய உரிமை'. சோவியத் ரஸ்யக் கூட்டமைப்பின் சிதறலும், யூகோஸ்லாவியா வின் நெகிழ்ச்சியும் 'சுயநிர்ணய உரிமை'யின் சக்தியை வெளிப்படுத்தியது மட்டுமல்லா மல் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு பற்றி புதிய பரிணாமங்களையும் புதிய விளக்கங்க ளையும் தோற்றுவித்துள்ளது. இதனால் ஐக்கிய நாடுகள் சபையின் ஆரம்ப காலத்தில் கொடுக்கப்பட்ட சுயநிர்ணய உரிமை பற்றிய விளக்கமும் இன்று மாறுபட்டு புதிய மாற்றங்களுக்கு இடமளிக்கக்கூடிய வகையில் புதுவடிவு எடுத்து வருகின்றது. இவைக ளின் விளைவாக உலகமெங்கும் குறிப்பாக, காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள்பெற்றுள்ளமை இயற்கையே. இவ்வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூலக்காரணிகளுள் ஒன்றாகத் திகழ்வதும் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையே. இதனால் யுத்த தந்திரோபாயங்கள் பற்றிய ஆய்வுக்கான சர்வதேச நிறுவனம் (The International Institute for strategic studies) வெளியிட்ட 1992-1993ம் ஆண்டுக்கான யுத்த தந்திரோபாயங்களின் விபரத்திரட்டில் (Stategic Survey 1992 -1993), தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய குறிப்புக்களை "சுயநிர்ணய உரிமைக்கான சவால்கள்" (The challenge of self Determination) என்ற தலைப்பின் கீழ் ஆராய்ந்துள்ளது. வேறுவழியில் சொல்வதனால் தமிழீழ விடுதலைப் போராட்டம், சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் என்பதற்கு உலக அங்கீகாரம் உறுதியாகியுள்ளதையே இது எடுத்துக் காட்டுகின்றது. இதனால், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம் எனவும், இனவாதம் எனவும் கூறிவந்த சிறிலங்கா அரசுக்குப் பலத்த அடி கிடைத்துள்ளது.

சுயநிர்ணய உரிமை என்றால், "மக்கள் தங்களுடைய எதிர்காலத்தை தாங்களே நிர்ணயித்தல்" என்பதே; இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து இது. இந்த வரைவிலக்கணம் இரண்டு கேள்விகளைத் தோற்றுவிக்கின்றது. ஒன்று மக்கள் என்றால் என்ன? (அதாவது எந்த சமூகம் சுயநிர்ணய உரிமையை கோரத் தகுதியுடை யது) மற்றையது, எப்படி அம் மக்கள் தமது எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகின்றார் கள்? இந்தக் கேள்விகளுக்கு அளிக்கப்படும் திருப்திகரமான பதிலைப் பொறுத்தே சுயநிர்ணய உரிமைக்கான சர்வதேச அங்கீகாரம் தங்கியுள்ளது.

தமிழீழ மக்களைப் பொறுத்தவரை அவர்களை காலனித்துவ சக்திகள் ஆக்கிரமித்த பின்பும் (போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்திலும்) தங்களுடைய பாரம்பரிய தாயகத் தில், தொடர்ச்சியான முறையில் கூடிவாழும் மனோநிலையுடன் வாழ்ந்து வந்துள்ளனர். எனவே அவர்கள் "மக்கள்" என்ற அரசியற்பதத்திற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்கின்றனர். அதே வேளை பிரித்தானியர், நிர்வாக வசதி என்ற பெயரில் தமிழர் தாயக நாட்டையும், சிங்கள நாட்டையும் இணைத்தாலும் அது காலனித்துவ ஆட்சியாள ரால் செய்யப்பட்ட செயற்கையான ஒன்றாக இருந்ததே அல்லாமல் தமிழ்-சிங்கள தேசிய இனங்கள் முற்றிலும் வெவ்வேறான, ஒன்றோடு ஒன்று கலப்புறாத மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களைத் தொடர்ந்து பேணியதுடன் கூடி வாழ்வதற்கான மனோநி லையை ஒரு பொழுதும் கொண்டிருக்கவில்லை. எனவே இலங்கைத் தேசியம் (Ceylon Nationalizam) என்ற ஒன்று ஒருபொழுதும் தோற்றம் பெறவில்லை. இதனைப் பிரித்தா னியர் நன்கு உணர்ந்த படியினாலேயே, தவறான முறையில் எண்ணிக்கையில் அதிக அளவினரான சிங்களவரிடம், இலங்கைத்தீவின் ஆட்சிப் பெரும்பான்மை செல்லக்கூடிய வகையில் ஒற்றையாட்சியின் கீழ் மட்டுப்படுத்தப் பட்ட சுதந்திரம் வழங்கியதுடன் அரசியல் சாசன பாதுகாப்பு எனும் 29வது உபபிரிவைச் சேர்த்தனர். இதன் படி, சிறுபான்மையினர் எனப்பட்ட தமிழர்களுக்கு எதிரான சட்டமூலங்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டால், அதனைத் தடுக்கும் உரிமை பிரித்தானிய மகாராணிக்கு கொடுக்கப்பட்டது. இதனால் இலங்கைப் பாராளுமன்றம் பூரண இறை மையைப் பெறவில்லை. இரட்டைத் தன்மை இறைமையில் காணப்பட்டது. பிரித்தானிய இறைமை அகற்றப்படாத மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரமே இலங்கைக்கு கொடுக்கப்பட் டது. இதனாலேயே ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை தனிநாடாக அங்கீகரிக்கப்படக் கூடாது என சோவியத் ஒன்றியம் தனது வீட்டோ அங்கீகாரத்தைப் பயன்படுத்தி தடைவிட்டு வந்தது. இவைகளையும், தமிழீழ மக்கள் தொடர்ச்சியான முறையில் ஒற்றையாட்சியின் கீழ் கூடிவாழ மறுத்து வந்தமையையும், சிங்கள பௌத்த பேரினவா தம் சட்ட பூர்வமற்ற முறையில் தமிழீழ மக்களின் மேல் திணித்த சிங்கள பௌத்த குடியாட்சி அரசியல் சாசனத்தையும், அதை ஜனநாயக வழிகளில் எதிர்த்த தமிழர்கள் மேல் ஆயுதப்படைகளின் மூலம் சிறிலங்கா அரசு அரச பயங்கரவாதத்தைத் தோற்றுவித் ததையும், இதனால் வாழ்வுக்கும் சொத்துக்கும் நாட்டின் மண்ணுக்கும் பாதுகாப்பு வேண்டி தமிழர்களால் சட்டபூர்வமான முறையில் ஆயுத எதிர்ப்பு தோற்றுவிக்கப்பட்ட தையும் கவனத்தில் எடுப்பவர்கள், தமிழீழ மக்கள் 'மக்கள்' என்பதையும், அவர்களது பிரச்சினை சிறுபான்மை-பெரும்பான்மை இனப்பிரச்சினையல்ல என்பதையும் ஏற்றுக் கொள்வர். இதனால் தமிழீழ மக்கள் "மக்கள்" எனும் அரசியற் பதத்தின் தகைமைகளை பூர்த்தி செய்கின்றனர்.

அடுத்ததாக, எப்படி மக்கள் தமது எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகின்றார்கள் என்பதற்கு ஒரேவிடை உயிர்த் தியாகங்களாலும், உயர்வழிகாட்டலாலும் தமிழீழ விடுதலைப் போரை நடாத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளே மக்கள் சார்பாக தீர்மானம் எடுக்க உரிமையுடையவர்கள் என்பதே. நமீபியாவில் (1989ல்), எரித்திரியாவில் (1993ல்), சகாராவில் (திகதி இன்னும் குறிப்பிடவில்லை), ஐக்கிய நாடுகள் சபை குடியொப்பம் மூலம் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி மக்கள் தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க வழிகாட்டியுள்ளது. இதற்கு முன்பு அவ்வெல்லாம் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற விடுதலை அமைப்புடன் கூடிக்கலந்து பேசியே ஐ.நா. இந்த முடிவை எடுத்தது. ஆகவே தற்பொழுது தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை நிர்ணயிக்கும் கடமை ஐ.நா. சபைக்கு உண்டு. 1966ல் 110 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குடியல், அரசியல் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச சாசனத்தின் 1வதுசரத்து "மக்கள் என்ற தகுதியுடையவர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள். இந்த உரிமையின் அடிப்படையில், சுதந்திரமான முறையில், தங்களது அரசியல் அந்தஸ்தைத் தீர்மானிக் கவும், கட்டுப்பாடற்ற முறையில் பொருளாதார, சமூக, கலை, பண்பாட்டு அபிவிருத்தி களை மேற்கொள்ளவும் அவர்களுக்கு உரித்துண்டு" என்கிறது. 1975ல் நடைபெற்ற ஐரோப்பாவின் பாதுகாப்புக்கும் ஒத்துழைப்புக்குமான மகாநாட்டு தீர்மானம் "மக்கள் என்ற பதத்திற்குரியவர்கள், தங்களுடைய உள்நாட்டு-வெளிநாட்டு அலுவல்களை தாங்களே கொண்டு நடாத்தத் தீர்மானிக்கலாம்" எனக் கூறுகின்றது. (CSCE Conference 1975 - Helsinki Final Act) புதிய ஐரோப்பாவுக்கான பாரிஸ் சாசனம் 1990ம் ஆண்டுக்கான (The charter of Paris for a new Europe -1990) மனிதாய பரிமாணம் என்ற பெ. மகாநாடும் (Copenhagen Conference on the Human Dimension 1990) ஒரு நாட்டுக்குள் அடைபட்டு சுதந்திரமற்ற நிலையில், வெளிச் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்க முடியாமல் இருக்கும், இனமக்களுக்கு அந்நாட்டுகளின் அரசாங்கத்தின் இறைமையைக் கடந்து சர்வதேச சமூகம் உதவலாம் என்ற கோட்பாட்டை உருவாக்கியுள்ளன.

இதற்கு பின், நடைமுறையில் பல உதாரணங்களும் நடைபெற்றுள்ளன.

எனவே ஐக்கிய நாடுகள் சபை, தமிழீழ மக்கள் மேலும் அவர்களது ஏகோபித்த அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் அக்கறை காட்டி, தமிழீழ மக்களின் உள்-வெளி சுயநிர்ணய உரிமைகளை நிர்ணயிக்கும் அவர்களின் போராட்டத்தை ஏற்றமுறையில் முடிவுக்கு கொண்டுவர உதவ வேண்டும். இது ஐ.நா. வின் கடமையும் கூட. ■

# நோயாளர் சைக்கிளில் செல்வதை பார்த்து செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் கவலை

யாழ். குடாநாட்டு மக்கள் போக்குவரத்து மற்றும் வசதிகள் இன்றி அவலமுறுவதை நேரில் காணமுடிந்தது. நோயாளர்களைக்கூட சைக்கிள்களிலேயே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் செல்லும் அவலநிலை வருந்தத்தக்கதாகும். பொதுமக்களின் இந்தக் கஸ்டங்களை ஓரளவாவது நீக்குவதற்குச் செஞ்சிலுவைச் சங்கம் உதவும். இந்த வகையில் என்னென்ன உதவிகளைச் செய்யலாம் என்று யாழ் கிளை இனம் கண்டால், அவற்றைச் செய்வதற்கு நாம் முழு ஒத்துழைப்பையும் நல்குவோம்.

இவ்வாறு, அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு வந்திருந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்புத் தலைமையகத் தலைவர் திரு.டி.டி. அபேசிங்கா செஞ்சிலுவைச் சங்க யாழ். தலைமையகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

டாக்டர் எஸ். சிங்கராயர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில், திரு. அபேசிங்கா மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளில் மிகவும் சிறப்பாக இயங்குவது வடமாகாண யாழ் கிளையே. இச்சங்கம் தயாரிக்கும் நல்ல திட்ட வேலைகளுக்கு நாம் பெரிதும் உதவுவோம்.

இந்து, பௌத்த மதங்கள் அன்பையும் சமாதானத்தையும் போதிக்கின்றன. இந்த மதங்களைச் சேர்ந்த நாம் எல்லோரும் சகோதரர்கள். அமைதியையும், சமாதானத்தையும் பேண வேண்டியது இரு சமூகங்களினதும் கடமையாகும் - என்றார்.

செஞ்சிலுவைச் சங்க கொழும்புக் கிளையைச் சேர்ந்த திரு.பி. தயானந்தே வாவும் உரையாற்றினார். ■

# தையிட்டியில் பெரும்பாலான வீடுகள் அழிந்த நிலையில்

## ■ விடுவிக்கப்பட்டவர் தகவல் ■

தையிட்டிப் பகுதியில் வீடு, வளவுகள், வீதிகள் எங்கும் பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றன. பயன்தரும் மரங்கள் எல்லாம் அழிந்து போய்விட்டன. அங்குள்ள பெரும்பாலான வீடுகளில் கூரைப்பகுதிகள் அகற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு தையிட்டிப் பகுதியின் அங்கிருந்து விடுவிக்கப்பட்ட யாழ் மணிக்கூட்டு ஒழுங்கையைச் சேர்ந்த இளையதம்பி தெய்வானை (வயது 69) என்பவர் விபரித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தையிட்டிப் பகுதியில் சுமார் 20 வீடுகள் வரையே எஞ்சியுள்ளன. ஏனைய வீடுகளில் பெரும்பாலானவற்றின் கூரை, யன்னல், கதவு, நிலை என்பன அகற்றப்பட்டும், வீடுகள் இடிந்த நிலையிலும் காணப்படுகின்றன. வயோதிபர்கள் தங்கியிருப்பதால் மட்டுமே எஞ்சிய வீடுகள் பாதுகாப்பாக இருக்கின்றன.

1990 அக்டோபர் மாதத்தில் அப்பகுதிக்கு இராணுவம் வந்தபோது வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. வயோதிபர்களிடம் இருந்த நகைகள் பறிக்கப்பட்டன.

அங்கு எஞ்சியுள்ளவர்கள் அங்கிருந்து வெளியேறவே விரும்புகின்றனர். சிலர் தங்கள் வீடுகளைப் பாதுகாப்பதற்காக அங்கு இருக்கின்றனர். 15 நாட்களுக்கு ஒரு தடவை சில உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. இரவில் விளக்கு ஏற்ற மண்ணெண்ணெய் கிடைப்பது இல்லை. இருள் சூழும் முன்பே வேலைகளை முடித்துக் கொண்டு விடுவோம் என்று அவர் தெரிவித்தார். ■

# யாழ் மருத்துவமனைக்கான உபகரணங்கள் கொழும்பில்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், பிரித்தானிய அரசினால் யாழ் பொது மருத்துவமனைக்கென நன்கொடையாக வழங்கப்பட்ட எக்ஸ்ரே உபகரணமும், ஸ்கானிங் உபகரணமும் கடந்த பெப்ரவரியில் கொழும்பை வந்தடைந்திருந்தன. ஆனால் இதுவரை இவற்றை யாழ் மருத்துவமனைக்கு, சிறீலங்கா அரசு அனுப்பி வைக்கவில்லை.

மருத்துவ உபகரணங்கள் யாழ் மருத்துவமனையைச் சென்றடையும் என்ற உறுதிமொழியை சிறீலங்கா அரசு பிரிட்டனுக்கு வழங்கியுள்ளபோதிலும் இன்னமும் அந்தக் கருவிகள் கொழும்பில்தான் இருக்கின்றன. இதுபற்றி கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகம் கருத்துத் தெரிவிக்கையில், யாழ் குடாநாட்டில் வாழும் அனைவருக்கும் இருக்கின்ற ஒரே ஒரு மருத்துவமனை யாழ் மருத்துவமனைதான். இந்த நிலையில், மருத்துவ உபகரணங்களை யாழ் அனுப்பும் பொறுப்பு சிறீலங்கா அரசுக்கே உள்ளது என்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், இம்மருத்துவ உபகரணங்களை போராளிகளும் பாவிக்கலாம் என்ற அச்சத்தால் பாதுகாப்புப் படை அதிகாரிகள் இவற்றை அனுப்பத் தயங்குகின்றனர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று கருத்துத் தெரிவித்துள்ளது. ■

# சிறீலங்கா யுத்தக் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்


தமிழீழ விடுதலைப் புலிகளினால் பிடிக்கப்பட்டு, அவர்களின் பாதுகாப்பில் உள்ள, 38 சிறீலங்கா யுத்தக்கைதிகள் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை கடந்த 13 ம் திகதி ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களில் 38 பொலிசாரும் ஒரு இராணுவத்தினரும் அடங்குவர். விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள சிறீலங்கா யுத்தக்கைதிகள் அரசுக்குக் கோரிக்கை விடுத்து உண்ணாவிரதத்தில் குதித்துள்ளமை, இதுவே முதற்தடவையாகும்.

விடுதலைப் புலிகளைச் சந்திக்க யாழ் சென்றிருந்த சர்வதேச சமாதானக்குழு வினருக்கு மேற்படி கைதிகள் தமது உண்ணாவிரதப் போராட்டம் பற்றி எடுத்துக் கூறியிருந்தனர். தமது விடுதலை குறித்து, சிறீலங்கா அரசு ஆக்கபூர்வமான முயற்சிகளில் இறங்கவேண்டுமென தெரிவித்துள்ளதுடன் தமது உண்ணாவிரதப் போராட்டம் குறித்து, சர்வதேச சமாதானக்குழு மூலம் சிறீலங்கா அரசுக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். ■

# தேசிய சுய உணர்வைத் தட்டி எழுப்பி போராட ஊக்குவிப்பவர்கள் கலைஞர்கள்

## தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன்

ஒரு தேசியத் விடுதலைப் போராட்டத்தில் கலை இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு மகத்தானது. தேசிய சுய உணர்வைத் தட்டி எழுப்பி, தேசிய போராட்டத்திற்கு ஊக்க சக்தியை ஊட்டுபவர்கள் கலைஞர்கள். தேசிய உருவாக்கத்திற்குச் செழுமையும் முழுமையும் கொடுப்பவர்களும் அவர்களே. இந்த இலக்கில், எமது தேசத்துக் கலை இலக்கிய படைப்பாளிகளும் கணிசமான பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.



இவ்வாறு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற 'இது எங்கள் தேசம்' வீடியோப் பட வெளியீட்டு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கலைஞர்களைப் பாராட்டி விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வீடியோப் படம் முல்லை மாவட்ட விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாராட்டுச் செய்தியின் முழுவிபரமும் வருமாறு:

உலக வரலாற்றின் புதிய அத்தியாயமாக இங்கு, எமது தாயக மண்ணில், ஒரு புரட்சிகர வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வரலாற்றின் கதாநாயகர்கள் பலர். அவர்களின் தனிமனித சரித்திரங்களின் தொகுப்பாகவே எமது வரலாற்றுக் காவியம் படைக்கப்படுகிறது.

எமது தேசத்தின் தியாக வரலாற்றில், அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தை வகிக்கிறார். அந்த அன்னையின் தனித்துவமான சரித்திரத்தை அற்புதமான கலை வடிவமாகத் தந்துள்ள முல்லை மாவட்டக் கலைஞர்களை நான் மெச்சுகின்றேன்.

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு மகத்தானது. தேசிய சுய உணர்வைத் தட்டி எழுப்பி, தேசிய போராட்டத்திற்கு ஊக்கசக்தியை ஊட்டுபவர்கள் அவர்களே. இந்த இலக்கில் எமது தேசத்து கலை, இலக்கிய படைப்பாளிகளும் கணிசமான பங்களிப்பைச் செய்துவருகின்றனர்.

போராட்ட வாழ்வைச் சித்தரிக்கும் கலைப் பணியில் முல்லை மாவட்டக் கலைஞர்கள் முன்னுதாரணமாக நிற்கின்றார்கள். முன்னரும் மாவீரர் நாளையொட்டி 'தமிழ்மோசை' என்ற கலைப்படைப்பை உருவாக்கி பலரின் பாராட்டுக்களைப் பெற்றிருந்தனர். இன்று 'இது எங்கள் தேசம்' என்ற அன்னை பூபதியின் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு இந்தக் கலைப்படைப்பை உருவாக்கியுள்ளனர். இயல்பாகவே கலைஞர்களுடன் மிக நெருக்கமான உறவை வழிவழியாகக் கொண்டிருக்கும் முல்லை மண்ணில் இருந்து வெளிவரும் இந்தப் படைப்பையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். அனைத்துக் கலைஞர்களையும் பாராட்டுகின்றோம். மேலும் மேலும் இவர்களது பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

காலத்தின் குரலாக, ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்புணர்வை யதார்த்தமாக சித்தரிக்கும் இந்தக் கலையாக்கம், எமது மக்களின் இதயங்களைப் பற்றிக்கொள்ளும் என்பது திண்ணம். ■

# இரு வார காலத்தில் சிறீலங்காப் படையினருக்கு அதிக ஆள்சேதம்

தென் தமிழீழம், வவுனியா போன்ற பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடாத்திய வெற்றிகரமான தாக்குதல்களில் சிறீலங்காப் படையினருக்கு அதிக ஆள்சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் மீண்டும் 'பயப்பீதி' சிறீலங்காப் படையினரை உளவியல் ரீதியாகத் தாக்கத் தொடங்கியுள்ளது. இதனைச் சமாளிக்கும் முகமாக சிறீலங்கா கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் வைகாசி இறுதி வாரம் முதல் ஆனி 3ம் திகதிக்கு இடைப்பட்ட ஒரு வார காலத்தில் மட்டும் 14 படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் சிலர் காயமடைந்துள்ளதாகவும் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார். ஆயினும் உண்மையில் கொல்லப்பட்ட படையினர் எண்ணிக்கை இதைவிட அதிகமென செய்திகள் தெரிவிக்கின்றன ■

# இறைச்சிக்கான கால்நடை குடாநாட்டில் தட்டுப்பாடு

குடாநாட்டுப் பகுதிகளில் இறைச்சி உணவுக்காகப் பயன்படுத்தும் கால்நடைகள் தட்டுப்பாட்டால் இறைச்சிக் கடைகள் பல மூடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுசம்பந்தமாக இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில், குடாநாட்டுக்கு அப்பால் வன்னிப் பிரதேசங்களில் இருந்து கடந்த காலங்களில் கால்நடைகளை கொணர்வது போல் இப்போது சாத்தியம் இன்மையாலேயே இறைச்சி உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாகவே இறைச்சிக் கடைகள் பல மூடப்பட்டிருக்கிறது என அவர் தெரிவித்தார். ■

# தேவையான வெண்கட்டி யாழ் வந்துசேரவில்லை.

யாழ். கல்வித் திணைக்களத்திற்கு நான்கு இலட்சம் வெண்கட்டிகள் கொழும்பிலிருந்து வந்தன்ன. இது இங்கு தேவையான தொகையில் மூன்றில் ஒன்றுகூட இல்லையென யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ் கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மொத்தம் 6792 ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள். அதே வேளை, ஒருவருடத்தில் 190 நாட்கள் பாடசாலை நாட்களாகும். ஒரு ஆசிரியருக்கு நாளொன்றுக்கு ஒரு வெண்கட்டி வீதம் வழங்கினாலும் மொத்தம் பன்னிரெண்டு இலட்சத்து தொண்ணூறாயிரத்து நானூற்றி எண்பது வெண்கட்டிகள் தேவை. இந்நிலையில் வந்துள்ள நான்கு இலட்சம் வெண்கட்டிகளும் சுமார் இரண்டு மாதங்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதேவேளை, 1992ஆம் ஆண்டுக்கான வெண்கட்டிகளே இப்போது வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை இவ்வெண்கட்டிகளை பகிர்ந்தளிப்பதில் முன்னணி பாடசாலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கிராமப்புறப் பாடசாலைகளில் சிலவற்றுக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இது இவ்வாறிருக்க 1993 ஆம் ஆண்டு முதலாம் தவணை முடிந்து இரண்டாம் தவணைக்கான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இவ்வாண்டுக்கான வெண்கட்டிகள் இதுவரை வந்துசேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# குப்பி விளக்கில் அரச அதிபர் செயலகம்

குப்பி விளக்கு வெளிச்சத்தில் யாழ் செயலகம் இயங்கி வருகிறது. இச்செயலகத்தில் உள்ள யாழ் அரசாங்க அதிபர் அலுவலகம் உட்பட பல்வேறு அலுவலகங்களும் குப்பி விளக்கு வெளிச்சத்திலேயே நீண்ட நாட்களாக இயங்கி வருகின்றன.

மழைகால நாட்களில் பகல் மப்பும் மந்தாரமுமாகக் காணப்படும் நேரங்களில் செயலகத்தின் பல அலுவலக மேசைகளில் குப்பி விளக்குகள் எரிந்துகொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகத் தெரியவருகிறது. இச்செயலகத்தின் மின்பிறப்பாக்கி பழுதடைந்து நீண்ட நாட்களாகிவிட்டதென்பது குறிப்பிடத்தக்கது ■

# போசாக்கின்மையால் கல்வியும் பாதிப்பு

"சிறீலங்கா அரசு மக்கள் மீது திணித்த தன்ன நெருக்குதலால், மாணவர்களுக்கு சத்துணவை வழங்கப் பெற்றோரால் இயலாதுள்ளது. போசாக்கின்மை காரணமாக மாணவர்களிடையே நோய்கள், சோர்வு என்பன போசாக்கின்மை காரணமாக தோற்றம் பெறுகின்றது. இதனாலேயே, இம்முறை நடைபெற்ற க.பொ.த (சாதாரணம்), க.பொ.த (உயர் தரம்) பரீட்சைகளில் மாணவர்கள் முன்புபோல் அதிவிசேட சித்திகளைப் பெற முடியாது போயிற்று."

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் [illegible] பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் 37 வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தலைமையுரை ஆற்றுகையில் கூறினார். அவர் மேலும் பேசுகையில், "சில ஆசிரியர்கள் வடபகுதியில் சேவையாற்றாது, கொழும்புக்கு வந்து சுய இலாபங்களுக்காக தங்கியிருக்கின்றனர். இதனால் இடைவெட்டம் ஏற்படுகிறது. [illegible] ஆசிரியர்கள் [illegible] ஆசிரியர்களும் மாணவர்களுக்குச் சேவை செய்ய முடியாதுள்ளது.

அத்துடன் இவ்வாறான ஆசிரியர்கள், கற்பித்தலைப் புனித தொழிலாகக் கருதாது, உழைப்பதற்கான ஒரு வாயிலாகக் கருதுகின்றனர். இதனால் பாடசாலைகளில் சரியான முறையில் கவனம் செலுத்துவதில்லை. மேலும் எரிபொருள், மின்சாரமின்மையால், தனியார் கல்வி நிறுவனங்களும் நடைபெறுவது அருகி வருகின்றது. இவற்றின் விளைவாக, கல்வித் தரமும் மாணவர்களின் சித்தி பெறும் ஆற்றலும் அழிந்து வருகின்றது. சுருக்கமாகச் சொன்னால், ஒரு இனம் சந்ததியை திட்டமிட்டு சிறீலங்கா அரசு அழித்து வருகின்றது என்றார். ■

# காங்கேசன் பாதை திறப்பதற்கு சிங்கள இராணுவம் முட்டுக்கட்டை

காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக யாழ். குடாநாட்டிற்கு உணவுப் பொருட்களை எடுத்துவருவதற்கான பாதையைத் திறந்துவிடுவதற்குச் சிங்கள இராணுவம் தொடர்ந்தும் முட்டுக்கட்டை போட்டுவருகிறது. இதன் காரணமாகவே இப்பாதை திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக உணவுப் பொருட்களையும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் கொண்டு வருவதற்கான பாதையைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே சம்மதம் தெரிவித்தமை யாவரும் அறிந்ததே. இதற்கென முன்னர் பயன்படுத்திய பாதையை பயன்படுத்துவதற்கும் புலிகள் சம்மதம் தெரிவித்திருந்தனர்.

ஆனால், இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றி அளித்ததாகத் தெரியவில்லை. இராணுவம் பாதையைத் திறப்பதற்கு முட்டுக்கட்டை போடும் விதத்தில், புதிய வழி ஒன்றைத் திறக்குமாறு தெரிவித்துள்ளதாகவும் அறியவருகின்றது. இந்நிலையில் காங்கேசன்துறைப்பாதை திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை விடுதலைப் புலிகள் அனுமதியளித்திருக்க இவ்வாளை, பண்டத்தரிப்பு வீதியை உள்ளடக்கிய பகுதியில் அண்மையில் இராணுவம் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது ■

# உலர் உணவு விநியோகம் வழங்குவதில் தாமதம்

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்து முகாம்களிலும் ஏனைய பிற இடங்களிலும், வசிக்கும் தீவக மக்களுக்கு சித்திரை மாதத்திற்கான நான்கு கட்ட இலவச உலர் உணவு நிவாரணமும், வைகாசி மாதத்திற்கான முதல் இரண்டு கட்ட நிவாரண விநியோகமும் இது வரை வழங்கப்படவில்லை.

இவ் உலர் உணவு நிவாரண விநியோகத்தில் உள்ள தாமதத்தால் இடம் பெயர்ந்த மக்கள் வறுமையின் பிடிக்குள் சிக்கி பெரிதும் கஷ்டப்படுகின்றனர். இதற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது ■

# மீண்டும் மலையகத்தில் கைதுகள்

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள தமிழ் மக்கள் திடீர் திடீர் எனக் கைது செய்யப்பட்டும், கடத்தப்பட்டும் வருகின்ற அதேவேளையில், மலையகத்திலும் இவ்வாறான கைதுகள், ஆட்கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் மலையகப் பகுதிகளில் பதட்டநிலைமை தோன்றியுள்ளது. சில மாதங்களாக இவ்வாறான சம்பவங்கள் ஓய்ந்திருந்த போதிலும் மீண்டும் பெருமளவு அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது ■

# ஐரோப்பிய சமூக நாடுகளும் வெளிநாட்டு அகதிகள் நிலையும்

**மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு கல்வி, வேலை வாய்ப்பு நிமித்தமாகவும், அகதிகளாகவும், குடியேற்றக்காரர்களாகவும் குடிபெயர்ந்து வாழ்கின்ற வெளிநாட்டவர்களை ஐரோப்பிய சமூகத்தின் ஒன்றிணைவு (European Community) எந்தவகையில் பாதிக்கிறது என்பதையும் ஐரோப்பிய நாடுகளில் பரவிவரும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான இனத்துவேசத்தின் தன்மை பற்றியும் இக்கட்டுரை ஆராய்கின்றது.**

சோமா

தற்பொழுது ஐரோப்பிய நாடுகளில் பெருமளவில் பேசப்படுவது நடைமுறைப்படுத்த இருப்பது ஐரோப்பிய சமூக, அல்லது ஐரோப்பிய ஐக்கியம் (EUROPEAN COMMUNITY) என்பதே.

ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, ஸ்பானியா, போர்த்துக்கல், இத்தாலி, டென்மார்க், பிரித்தானியா என்பன இதில் இணைந்திருக்கின்றன எனவும், சுவிற்சலாந்து, ஏனைய ஐரோப்பிய நாடுகள் இணைவதை ஆலோசிக்கின்றன என்பது பற்றியும் பேசப்படுகின்றது.

இந்த நாடுகள் இணைந்து ஐக்கியத்தை ஏற்படுத்த முனைவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. தாங்கள் உலகில் பலமாக இருப்பதற்காகவும், தங்களுக்குள் இருக்கும் பலப் பரீட்சைகள், விஞ்ஞான, கைத்தொழில் முன்னேற்றங்கள், பொருளாதார நெருக்கடிகள், சிக்கல்கள், முன்னேற்றங்கள், பாதுகாப்பு இவைகளை முக்கியமாகக் கருத்தில் கொண்டுதான் இணைந்து செயற்பட முற்படுகின்றன. ஐரோப்பாவிலேயே மூன்று நாடுகள் தான் பலம் பொருந்தியவையாக உள்ளன. அவை ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து. இவற்றில் ஜேர்மனியும் பிரான்சும் கொஞ்சம் பலங்கூடி இருக்கின்றன. முழு ஐரோப்பாவிலேயே தற்பொழுது ஜேர்மனிதான் முன்னணியில் நிற்கிறது. கிழக்கு, மேற்கு இணைப்பிற்குப் பின்னர் பொருளாதாரத்திலோ, சனத்தொகையிலோ ஐரோப்பாவில் முன்னிடத்தைக் கொண்டுள்ளது. ஜேர்மனியும், பிரான்சும் பொருளாதார இராணுவ ஒப்பந்தங்களை காலத்துக்காலம் செய்து கொள்கின்றன. காரணம் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று யார் பலம் பொருந்தியவர்கள் என்பதைத் தீர்மானிக்க முடியாத உள்பயம்தான்.

தற்பொழுது மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெருமளவில் வெளிநாட்டவர்கள் வந்து குடியேறி இருக்கிறார்கள். பெருந்தொகையான வெளிநாட்டவர்கள் மூன்றாம் உலக நாடுகளில் இருந்தும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும் அகதிகளாக வருகிறார்கள். இதனால் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வெளிநாட்டவர் பிரச்சினை தலைதூக்கியுள்ளது.

வெளிநாட்டவர்கள் வருகையால் நாட்டு மக்களிடையில் ஒரு கலப்பின வளர்ச்சி உருவாகிக் கொண்டு வருகிறதென்ற பயம் எழுந்துள்ளது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பல வேறுபட்ட நாட்டு மக்கள், பல இனமக்கள் பல மொழிகளைப் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். அத்துடன் பல வேறுபட்ட மதங்களைப் பின்பற்றும் மக்களும் பல வேறுபட்ட கலாச்சாரத்தினைக் கொண்ட மக்களும் வாழ்கிறார்கள். இதன் காரணமாக ஒரு, பல கலாச்சாரத்தினைக் கொண்ட கலப்புக் கூட்டுச் சமுதாய இனம் (Multi Cultuel, Multi Racism, Multi Society) மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்து கொண்டு வருகின்றது. இப்படியான ஒரு வளர்ச்சி) பரிணாமம் எதிர்காலத்தில் மேற்கு ஐரோப்பிய நாட்டு மக்களுக்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்று அந்தந்த நாட்டு மக்கள் கருதுகின்றார்கள். இது நாட்டு மக்களிடையே ஒரு உளரீதியான பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றது.

வெளிநாட்டுக் குடியேற்ற அகதிகள் பிரச்சினையானது, ஐரோப்பிய சமூக நாடுகளுக்கிடையில் இயற்கையான ஒரு மேலாதிக்க சமுதாய அரசியல் பொருளாதார வேறுபாடுகளை, பிரச்சினைகளை பொதுவாக மேற்கு ஐரோப்பிய நாடுகள் எதிர் கொள்ள வேண்டிய நிலையினை உருவாக்கியுள்ளது. ஏறத்தாள 10 மில்லியனுக்கு மேற்பட்ட ஐரோப்பிய சமூகமற்ற வெளிநாட்டு சமூகத்தினர் ஐரோப்பிய சமூக (European Community) நாடுகளில் குடியேறியோ, அகதிகளாகவோ வாழ்ந்து வருகிறார்கள். மூன்றுக்கு ஒன்றென்ற ரீதியில் வேற்று நாட்டு இன, மத, சமூகத்தவர்கள் தங்களது நாடுகளில் இருக்கின்றார்கள் என ஐரோப்பியர்கள் நம்புகிறார்கள். எதிர்காலத்தில் இவர்களது வரவு அதிகரித்து தொகை பெருகுமானால் தங்களது பாதுகாப்பு, பொருளாதாரம், சுயாதீனம், கலாச்சாரம் பாதிக்கப்படலாமெனப் பயப்படுகின்றார்கள்.

மேற்கு ஐரோப்பாவில், இரண்டாவது உலக யுத்தத்தினால் பெரும் பாதிப்புக்கள், அழிவுகள் ஏற்பட்டிருந்தன. இந்தக் காலகட்டத்தில் யுத்தத்தினால் ஏராளமான மக்கள் இறந்தும் காயப்பட்டும் மனோரீதியாகப் பாதிக்கப்பட்டும் இருந்தனர். யுத்தம் முடிவடைந்ததும், ஒவ்வொரு நாடும் தன்னை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் ஒவ்வொரு நாடும் கட்டிடங்களைக் கட்ட, தொழிற்சாலைகளைக் கட்ட, பொருளாதாரத்தை வளர்க்க தொழிற்திறன், மனித உழைப்புத் தேவைப்பட்டது. தங்களது நாடுகளில் கிடைத்த மனித உழைப்புப் போதாதிருந்த காரணத்தால் வேறு நாடுகளிலிருந்து தொழிலாளர்களை வரவழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இது தவிர்க்க முடியாததும் மிக அவசியமானதுமாக அந்தக் காலகட்டத்தில் இருந்தது. இந்த நிர்ப்பந்தத்தின் காரணமாக வெளிநாடுகளிலிருந்து மனித சக்தியைப் பெறவேண்டி தொழிலாளர்களை வரவழைத்தன மேற்கு ஐரோப்பிய நாடுகள். குறிப்பாக ஜேர்மன், பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற பெரிய வல்லரசு நாடுகள் தான் அதிகமாக வெளிநாட்டவர்களைத் தொழிலாளர்களாக வரவழைத்தன எனலாம்.

ஜேர்மனியைப் பொறுத்தவரை துருக்கியர், கிரீக் நாட்டவர், ஸ்பானியர், போர்த்துக்கீசர், இத்தாலியர் தொழிலாளர்களாக வரவழைக்கப்பட்டனர். பிரான்சைப் பொறுத்தவரை வட ஆபிரிக்கர்கள், துருக்கியர், ஸ்பானியர் தொழிலாளர்களாக வரவழைக்கப்பட்டனர். இதனால் இந்த நாடுகளில் வெளிநாட்டவர்கள் கணிசமான அளவு 1945 -50 ஆண்டுக்கிடைப்பட்ட காலத்தில் வந்து குடியேறினர். ஆரம்ப காலத்தில் தனியாக தொழிலாளர்களாக வந்தவர்கள் காலகதியில் தங்களது மனைவி, பிள்ளைகளென குடும்பத்தவர்களையும் கூப்பிட்டு தங்களுடன் சேர்த்துக் கொண்டனர். இப்படியாக வாழ்ந்து வந்த மக்கள் மத்தியில் இனப்பெருக்கம் ஏற்பட்டது. இதனால், ஒரு இனச் சமுதாயத்தின் சந்ததி அந்த நாட்டு மக்களுக்குள் உருவாகத் தொடங்கியது. அந்தந்த நாடுகளில் பிறந்த வெளிநாட்டவர்களின் பிள்ளைகள் வளர்ந்து பாடசாலை, கல்லூரிகளுக்குப் போகத் தொடங்கினர். இவர்கள் வளர வளர ஒரு புதிய வெளிநாட்டவரின் சந்ததி உருவாகத் தொடங்கியது. இவர்கள் தங்களது மொழி, இன, கலை, பண்பாடுகளுடன் தாங்கள் வளர்ந்த நாடுகளின் மொழி, இன, கலை, பண்பாடுகளையும் பின்பற்றத் தொடங்கினர். இது இளஞ்சந்ததியினருக்குத் தவிர்க்க முடியாததாகப் போய்விட்டது. இதனால் இவர்கள் ஒரு கலப்பு இனமாக மாறிவரும் நிலை உருவாக ஏதுவாகிறது. இதனால் [illegible] பிய [illegible] யினர் சிலரும் வேற்று நாட்டு மக்களின் கலை, பண்பாடுகளில் நாட்டம்கொண்டு மாறிவரும் நிலையும் ஏற்படுகிறது. இவர்களின் பரிணாம வளர்ச்சி மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாமென்ற அச்சம் மக்களிடையே உள்ளது. இந்தக் காரணம் வெளிநாட்டவர்களுக்கு எதிரான மனப்போக்கை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வளர்த்துக் கொண்டு வருகிறது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்துவரும் வெளிநாட்டுக் குடியேற்றக்காரர்களும் சரி, தொழிலாளர்களாக வந்தவர்களும் சரி, அகதிகளாக வந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் சரி தாங்கள் வாழுகின்ற நாடுகளில் தங்களுடைய மதம், மொழி, கலை, பண்பாடு இவைகளைப் பின்பற்றி கடைப்பிடித்து வருகிறார்கள். இது தங்களுடைய மதம், மொழி, கலை, பண்பாடுகளைப் பாதிக்கலாம் - பாதித்து வருகிறது என மேற்கு ஐரோப்பிய நாட்டு மக்கள் நம்புகிறார்கள். இதனால் தங்களது பாரம்பரியம், தனித்துவம் எதிர்காலத்தில் பெரிய மாற்றத்தைக் காண வேண்டிய நிலை உருவாகலாம் என்ற பயமும் இவர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. இந்த நிலைமையும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான மனப்போக்கை உருவாக்கக் காரணமாக அமைந்துள்ளது.

மேற்கு நாடுகளில் வாழ்ந்துவரும் வெளிநாட்டு மக்கள் அந்தந்த நாடுகளில் பெரும்பாலும் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். தொழிலாளர்களாக இருக்கின்றனர். இதனால் அவர்கள் தங்களது வாழ்க்கையை, குடும்பங்களை தாங்களே பராமரித்து வருகின்றனர். அத்துடன் அந்தந்த நாடுகளின் வரிமுறைகளிலும் பங்கு கொண்டு வரி செலுத்தி வருகின்றனர். இதன் காரணமாக இவர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் தங்களது தனித்துவத்தைப் பேணிக் கொண்டு வாழக்கூடியதாக இருக்கிறது. இந்த வெளிநாட்டு மக்களின் பொருளாதார வாழ்க்கை முறை வேறு, மேற்கு ஐரோப்பிய நாட்டு மக்களின் பொருளாதார வாழ்க்கை முறை வேறு. பொதுவாக ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலிருந்து வந்த மக்கள் பொருளாதாரத்தினை தேட்டப்படுத்தும் ஒரு பழக்கமுள்ளவர்கள். இது அவர்களால் பாரம்பரியமாக பின்பற்றப்படும் பழக்கமாகும். இது, அவர்கள் வீட்டுப் பொருட்கள், நிலையான சொத்துக்கள் அதாவது நகை, வீடு போன்றவைகளை வாங்கி தேட்டப்படுத்தும் வழக்கமாகும்.

ஆனால் மேற்கு நாட்டு மக்களது வாழ்க்கை முறையில் நன்றாக, சந்தோசமாக நாளைக் கழிக்கும் வழக்கமும் ஆடம்பரமான அதிக செலவீனங்களும், வெளிநாடுகளுக்கு உல்லாசப்பயணங்கள் போகும் பழக்கங்களும் இருக்கின்றன. இதனால் பெரும்பான்மையான மக்கள் பொருளாதாரத்தினைத் தேட்டப்படுத்தும் தன்மை அற்று வாழ்கின்றனர். இவர்கள் பொதுவாக வாழ்க்கையில் வசதிகளுடன் வாழ்கிறார்களோ இல்லையோ, நாடுகளின் நடைமுறை சமுதாய பொருளாதார முறைகள் மக்களுக்கு பல வசதிகளை சலுகைகளை அளிப்பதனால் அவர்கள் எதிர்காலத்தைப் பற்றி அதிகம் சிந்திக்காமல் வாழ்கிறார்கள். இதனால் இவர்களது பொருளாதார வாழ்க்கை முறை வேறுபட்டதாக அமைகிறது.

இந்த வேறுபாடானது மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்துவரும் அந்தந்த நாட்டு இளம் சந்ததியினருக்கு, வளர்ந்து வரும் இளம் சமுதாயத்திற்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதாவது வெளிநாட்டு மக்கள் வசதியாக வாழ்கின்றார்கள், நன்றாக இருக்கிறார்கள். ஆனால் தங்களால் அப்படி வாழ முடியவில்லையே என்ற மனோநிலை உருவாகின்றது. இந்த மனோநிலை நாளடைவில் வளர்ந்துகொண்டுவந்து தற்போது பெரும் வேறுபாட்டை மேற்கு நாட்டு இளம் சந்ததியினருக்கும் வெளிநாட்டு மக்களுக்கும் இடையே ஏற்படுத்தியுள்ளது.

மேற்கூறிய தன்மைகள், சூழ்நிலைகள், நடைமுறைகளின் காரணங்களால் மேற்கு ஐரோப்பிய மக்களிடையே வெளிநாட்டவர்களுக்கெதிரான மனோநிலை வளர்ந்து கொண்டு வருகின்றது. இளம் சந்ததியினர் மத்தியில் இந்த மனோநிலை அதிகரித்துக் காணப்படுகிறது. இதற்கு அவர்களது நாடுகளின் அரசியல், பொருளாதார உள்நாட்டுக் கொள்கைகளும் காரணமாகும். மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் கொள்கைகள், நடைமுறைகள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், வேலையில்லாத் திண்டாட்டங்கள், வீட்டுப் பிரச்சினைகள் போன்றவையும் காரணமாக அமைகின்றன.

வளர்ந்துவரும் மேற்கு நாட்டவர்களின் இந்த மனோ நிலை காரணமாக இனத்துவேசம், புதிய நாசிசம் தலைதூக்கி வன்முறைகள் தோன்றியுள்ளன. இந்த இனத்துவேசம், புதிய நாசிசச் செயற்பாடுகளால் மொட்டைத் தலையர்கள் (Skin Head's) முன்னணியில் நிற்கிறார்கள். இந்த இனத்துவேசச் செயற்பாடுகளின் வளர்ச்சி மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஒரு வலைப்பின்னல் ரீதியான (Network System) தன்மை கொண்டு காணப்படுகிறது. இதற்கு அந்தந்த நாடுகளில் இருக்கும் தீவிர வலதுசாரிக் கட்சிகள், வெளிநாட்டவர்களுக்கு எதிரான இயக்கங்கள், சக்திகள், இவைகளின் கொள்கைகள், செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுக்கின்றன.

ஜேர்மனி, பிரான்ஸ், ஒஸ்ரியா, இத்தாலி, சுவிற்சலாந்து, நெதர்லாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான இனத்துவேசம், புதிய நாசிசம் மேலோங்கி வளர்ச்சி பெற்றுவருகின்றது. இந்த வளர்ச்சியின் வெளிப்பாடாகவே கடந்த சில ஆண்டுகளாக, அந்தந்த நாடுகளில் நடைபெற்றுவரும் இனரீதியான வன்முறைகள், தாக்குதல் சம்பவங்கள் என்பன அமைந்துள்ளன.

ஜேர்மனியைப் பொறுத்தவரை வெளிநாட்டவர்களுக்கெதிரான இனத்துவேசம், புதிய நாசிசம் வளர்ந்துவிட்டதென்றே கூறலாம். ஜேர்மனியில் வலதுசாரி தீவிரவாதக் கட்சிகளான ஜேர்மன் மக்கள் கட்சி, DVU போன்றவை மிகத் தீவிரமான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளன. இவைகள் அரசியல் தேர்தல்களில் போட்டியிட்டு கணிசமான வீத வாக்குகளைப் பெற்றுள்ளன. மாநில தேர்தல்களில் வெற்றியும் பெற்றுள்ளன. இவர்களின் வளர்ச்சி வீதம் அதிகரித்துக்கொண்டே போகின்றது. ஜேர்மன் நாடு ஜேர்மனியர்களுக்கே. ஜேர்மன் எங்களது நாடு. வெளிநாட்டவனே வெளியேறு என்பன போன்ற கோசங்கள் எழுப்பப்படுகின்றன. சுலோகங்கள் சுவரொட்டிகளாக எழுதப்படுகின்றன. வெளிநாட்டவனே நீ எங்களது நிலத்தில், எங்களது வீடுகளில் வாழ்கின்றாய். எங்களது பொருளாதாரத்தைச் சுரண்டுகின்றாய். எங்களது தொழிலை எடுக்கின்றாய். எங்களது வேலையைப் பறிக்கின்றாய். நீ உடனே வெளியேறு என்று எழுதி சுவரொட்டிகளாக வெளிநாட்டவர் தங்குமிடங்களில் போடப்படுகிறது. துண்டுப் பிரசுரங்களாக வீதிகளில் விநியோகிக்கப்படுகின்றன. சுவரொட்டிகளாக ஒட்டப்படுகின்றன. முக்கிய இடங்கள், வெளிநாட்டவர் தொழில் பார்க்கும் இடங்கள், வியாபார நிலையங்கள், வீட்டு ஜன்னல்கள் ஆகியவற்றில் "அந்நியனே வெளியேறு" என எழுதி நாசிச் சின்னத்துடன் விளம்பரத் ஒட்டியாக (Sticker) ஒட்டப்படுகிறது.

ஜேர்மனியைப் பொறுத்தவரை 1990 இலும் பார்க்க 1991இல் தீவிர வலது சாரிகளின் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. 1991 இல் உள்துறை அமைச்சக காரியாலயத்தின் ஐப்பசி மாதக் கணக்கெடுப்பின், 271 வன்முறைச் செயல்களும் 134 தாக்குதல் சம்பவங்களும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக நடைபெற்றுள்ளன என்று கணிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

# காஷ்மீர்:

# இந்தியாவின் கொடுமையால் இரத்தம் சிந்தும் காஷ்மீர்

காஷ்மீரின் பனி மூடிய விடியற்காலைக்கு சற்றுமுன் பொழுது. நேரம் 2 மணி. சிறீநகரின், புறநகர்ப் பகுதியான "கசரத்பர்" எனுமிடத்தில் ஒவ்வொரு வீட்டுக் கதவும் உதைக்கப்படுகிறது. நித்திரைக் கலக்கத்தோடிருந்த -

ஒவ்வொரு குடும்பத்தினரும் வீதிக்குக் கொண்டு வரப்படுகின்றனர். பெண்கள், குழந்தைகள் ஒரு வரிசை, முதியோர் இன்னொரு வரிசை, மூன்றாம் வரிசை வாலியர், நடுவயதினர் என இவர்கள் வகையாகப் பிரிக்கப்பட்டு நிற்க வைக்கப்படுகின்றனர். இவர்களை நோக்கி நீள்கின்றது, இந்திய இராணுவத்தின் துப்பாக்கிகள். விடியும் மட்டும் இதே நிலை, விடியும் தறுவாயில் உறுமியபடி ஜீப் வண்டிகள் வருகின்றன. கறுப்புத் துணியால் முற்றிலும் மூடப்பட்ட நிலையில் பத்துப் பன்னிரண்டு "தலையாட்டிகள்" வந்திறங்குகின்றனர். மூன்றாம் நிரையிலிருந்த 16 ஆண்களை அடையாளம் காட்டுகின்றனர். அடையாளம் காட்டப்பட்டோர் இராணுவ வண்டிகளில் ஏற்றப்படுகின்றனர். வண்டிகள் விரைகின்றன. அவ்வளவுதான். பின் அவர்களைப் பற்றி எத்தகவலும் இல்லை. இவர்களின் அன்னையர், மனைவியர், சோதரியர் சிறீநகர் இராணுவ தங்ககங்களில் தவம் கிடக்கின்றனர். பலன் எதுவும் இல்லை. இது நடந்தது கடந்த வருடம் நவம்பர் 14ம் திகதி.

"ஒப்பரேசன் டைகர்" (Opperation Tig-



நிலை இன்று கேள்விக்குறியாக மாறி விட்டது. இவ்வறிக்கையில் தடுப்புக் காவல் வதைகள், மின் அதிர்ச்சியைப் பாய்ச்சுதல், பாலியல் வன்முறை போன்ற பல கொடுமைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் 'உருளை முறை' (Roller) எனப்படும் இந்திய இராணுவத்தின் நவீன வதை முறை பற்றி விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிக கனமுள்ள உருளைக்குழாய் அல்லது மரக்குற்றியின் இரண்டு பக்கங்களிலும் 2, 3 பேர் தொங்கி நிற்க அவ்வுருளையை வதை செய்யப்படுவோர் உடல் மேல் மாறி மாறி உருட்டல். இவ்வாறு உருட்டப்படும்போது வதைக்குட்

ளது. சுதந்திரம் என்கிற பெயரில் இந்தியத் துணைக்கண்டம் 1947 இல் மத அடிப்படையில் இரண்டு நாடாகியது. ஆனால் காஸ்மீரைப் பொறுத்தவரையில் கதை வேறாக இருந்தது.

மிகப் பெரும்பான்மை முஸ்லீம் மக்களைக் கொண்ட அப்போதைய காஸ்மீர்ப் பகுதியின் இந்து மகாராஜா நேருவின் தூண்டுதலால் முஸ்லீம் மக்களின் கருத்துக்கு மாறாக இந்தியாவோடு காஸ்மீரத்தை இணைத்தார். நேருவும் படையை அனுப்பி இணைப்பை ஏற்படுத்தினார். அன்று ஆரம்பித்த மோதல் பின்னர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்

கொன்றுவிட்டதாக இந்தியாவும் மாறி மாறி குற்றஞ்சாட்டி வருகின்றன. இறந்தோர் தொகை இன்னமும் சரிவரத் தெரியவில்லை. எது எப்படி இருப்பினும் இப்போது காஸ்மீரில் குருதியாறு ஓடத் தொடங்கிவிட்டது. அதுமட்டுமன்றி சிறீநகரின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இறந்த போராளிகள் புதைகுழிகளைக் கொண்டுள்ள அமைவிடங்கள் வீரவணக்கத்திற்குரிய திடல்கள் பூமியாக மாறி வருகின்றன. பத்து போராளிகள் இயக்கங்கள் இருந்தபோதும் இரண்டே இரண்டு தான் முக்கியமானவை. இவை இரண்டும் காஸ்மீர் விடுதலை என்கின்ற ஒன்றில் மட்டும் ஒற்றுமையாக இருக்கின்றன. ஜம்மு-காஸ்மீர் விடுதலை முன்னணியே (JK-LF) பெரியது. பிரபல்யம் மிக்கது. இம் முன்னணியினர் காஸ்மீர் விடுதலை பெற்று தனிநாடாகத் திகழ வேண்டும் என விரும்புபவர்கள். மற்றையது கிஸ்புல்-முஜாஹிதீன் (Hizbul Mujahedin) முஸ்லீம் பழமை வாத மதக் கோட்பாடை பின்பற்றும் இவர்கள், காஸ்மீர் விடுதலை பெற்று பாகிஸ்தானோடு இணைய வேண்டும் என்கிற நிலைப்பாட்டை கொண்டவர்கள். எனவே முன்னையதை விட பின்னையதற்கே பாகிஸ்தான் கூடிய உதவிகள் செய்வது வியப்பானதல்ல.

முன்னர் ஐ.நா மேற்கொண்ட தீர்மானம் ஒன்றின்படி இந்தியாவுடன் இருப்பதா? அல்லது பாகிஸ்தானுடன் இணைவதா? என்பதைத் தீர்மானிக்க காஸ்மீரில் 'நேரடி வாக்கெடுப்பு' (Referendum) நடாத்தப்பட வேண்டும் என பாகிஸ்தான் பிடிவாதமாக நிற்கின்றது. இருக்கும் நிலைமைகளை வைத்துப் பார்க்கும் இடத்து, பாகிஸ்தானுடன் இணைவதையே காஸ்மீர் மக்கள்

ர்) எனப் பெயரிடப்பட்டுக் கடந்த கோடையிலிருந்து மிகப் பெரிய இராணுவ அழுத்தம் ஒன்று காஸ்மீர் மக்கள் மேல் பிரயோகிக்கப்படுகின்றது. மேலே சொல்லப்பட்டது இதனொரு பகுதியே. நடுஇரவு கதவு தட்டல், வரிசையாக நிற்க வைத்தல், தலையாட்டிகள் அடையாளம் காட்டல், காட்டப்பட்டோர் காணாமல் போதல், பின்னர் உயிரற்ற உடல்களாக தெருவோரங்களில் காணப்பட, இவையே இந்திய இராணுவத்தின் வழமையான நிகழ்ச்சி நிரல் என மனித உரிமை அமைப்புக்கள் பட்டியலிடுகின்றன. அவர்களின் தகவலின்படி இப்படியான அதிரடி நடவடிக்கைகள் சிறீநகரில் தினம்தோறும் ஒன்றாவது நடக்கின்றது. சிறீநகருக்கு வெளியே பல இவ்வாறு நாள் தப்பாது நடக்கின்றன. ஒப்பரேசன் டைகருக்காக நான்கு இலட்சம் இராணுவத்தினரும், பொலிசாரும் காஸ்மீரை முற்றுகையிட்டுள்ளனர். இவர்கள் ஊரடங்கைப் பிறப்பித்து வீதித் தடைகளை ஏற்படுத்தி பெரும் தொகை கைதுகளைச் செய்து தடுப்புக்காவல் கைதிகளை சித்திரவதைக்கு உட்படுத்தி, நீதி விசாரணைக்கு புறம்பான பழிவாங்கல் கொலைகளை மேற்கொண்டு ....

இவ்வாறு பாரிய இராணுவ அடக்குமுறையை காஸ்மீர் மக்கள்மேல் இந்தியா கட்டவிழ்த்து விட்டுள்ளது. பஞ்சாப்பில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு காஸ்மீரில் இப்போது தொடரும் இவ் வடக்கு முறைகள் ஏனைய அசாம், திரிபுரா போன்ற பகுதிகளில் உள்ள பிரிவினை, கிளர்ச்சியாதிகளுக்கு விடப்படும் முன்னெச்சரிக்கையாக கருதப்பட வேண்டும் என்பதே இந்திய அரசின் நோக்கம். "நாங்கள் கடுமையாக நடக்கிறோம் என்பது உண்மை தான். காஸ்மீரில் பிரிவினைவாதிகள் வெற்றிபெற்றால் இந்தியாவின் கதி என்ன? அதோ கதிதான்" என்கிறார் இந்திய உயர் அரச அதிகாரி ஒருவர்.

"ஏசியா வோச்" (Asia Watch) என்கிற மனித உரிமை காப்பியக்கத்தின் பிரதிநிதியொருவர் காஸ்மீர் சென்று நேரடியாகத் தகவல்களைத் திரட்டியபின் வெளியிட்ட அறிக்கை இந்திய இராணுவத்தின் வெறியாட்டங்களை வெளிப்படுத்தியுள்ளது. மேற்குலகம் இதைக்கண்டு அதிர்ச்சியுற்றுள்ளது. மனித உரிமைகள் விடயத்தில் இந்தியாவின்

படுபவர் உடலின் தசைகள், திசுக்கள், இழையங்கள் போன்றவை நசுக்கப்படுகின்றன. இவ்வாறு நசுக்கப்படும்போது பிதுக்கப்படும் நச்சுப்பொருட்கள் வெள்ளமென சென்று சிறுநீரகங்களை நிரப்புகின்றன. பாரிய வாகன மோதலின் போதோ, பெரிய தொழிற்சாலை விபத்தொன்றின் போதோ மட்டும் காணக்கூடிய உருக்குலைந்த நிலையை இவ்வுருளை வதைக்குட்பட்டோரிடம் பார்த்ததாக வைத்தியர் ஒருவர் கூறுகிறார். உடனடி சிகிச்சை இன்றேல் மரணம் நிச்சயம் என்கிறார் இவர்.

ஒப்பரேசன் டைகரின் நோக்கமே பிடித்தலும் கொல்வதும் தான் (Catch and Kill). காஸ்மீர் போராளிக் குழுக்களின் தலைமைகளைக் கொன்றொழிப்பதே இந்திய அரசின் திட்டம். ஆனால் வதைகளைச் செய்து தலைமைகளை அழித்து வரலாற்றுப் போக்கினை மாற்ற முடியுமா? மிகக் கடுமையான இராணுவ நடவடிக்கைகள் நேர் எதிர்மாறான விளைவுகளையே காஸ்மீரில் ஏற்படுத்தியுள்ளன. கடந்த மூன்று வருடங்களுக்கு முன் ஆரம்ப நிலையில் இருந்த காஸ்மீர் மக்களின் எதிர்ப்புப் போராட்டம் இன்று நன்கு பலம் பொருந்திய நேர்த்தியான கெரில்லாப் போராட்டவடிவத்தைப் (Classic Guerrilla Campaign) பெற்றுவிட்டதாக "நியூஸ் வீக்" மதிப்பிடுகிறது. இன்று காஸ்மீர் முடக்கப்பட்டுவிட்டது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தொலைத் தொடர்பு நிலையங்கள், மின் உற்பத்தி நிலையங்கள், அரச நிர்வாக மையங்கள் தாக்கி அழிக்கப்படுகின்றன. மிக அண்மையில் இந்தியாவுக்கும் காஸ்மீருக்கும் தொடர்புகளை ஏற்படுத்தும் நிலையமே குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. அழகு கொழிக்கும் காஸ்மீர் பள்ளத்தாக்கு இப்போது குருதி வடியும் போர்க்களமாகி விட்டது. உல்லாசப்பயண விடுதிகள், உலகப் புகழ் பெற்ற கம்பளி தரை விரிப்பு நிறுவனங்கள் எல்லாமே மூடப்பட்டுவிட்டன. ஒரு கால கட்டத்தில் மிகப்பிரபல்யம் வாய்ந்த ஒபிராய் பலஸ் பயண விடுதி இன்று இராணுவப் புலனாய்வுத்துறையின் இருப்பிடமாகி விட்டது. காஸ்மீரில் இன்றுலவும் வதந்தியே இப்பயண விடுதிக்குள் 'முன் வழியால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படுவோர் பின் வழியால் பிணமாக வருகின்றனர்' என்பதுதான்.

இம்மோதலின் பின்னணி பழமையா

கும் இடையேயான பெரும் போர்க்களமாகியது. இம்மோதலின் விளைவாக காஸ்மீர் துண்டாடப்பட்டு இரண்டாகிய காஸ்மீரின் எல்லைப்பகுதியே நிரந்தர மோதலின் இருப்பிடமாயிற்று. நேரு முன்னர் காஸ்மீரின் தனித்துவம்

## பாலகுமார்

### தமிழீழம்

பேணப்படும் எனக்கொடுத்த வாக்குறுதி பின்னர் மீறப்பட்டது. இந்திய இராணுவத்தின் பிடியிலிருக்கும் காஸ்மீர் பகுதி இன்று 'ஜம்மு காஸ்மீர்' என இந்திய மாநிலமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் இந்த நயவஞ்சகத்தனத்தை பாகிஸ்தான் முறையாகப் பயன்படுத்தி வருகின்றது. அத்தோடு ஆப்கான் போர் முடிவடைந்தது பாகிஸ்தானுக்கு மேலும் வாய்ப்பாகியது. 1989 ஆம் ஆண்டிலிருந்தே ஆப்கான் கெரில்லாக்களுக்கு மேற்குலகு அனுப்பிய நவீன ஆயுதங்கள் காஸ்மீருக்குப் பாதை மாற்றப்பட்டன. இன்று ஆப்கான் போராளிக்குழுவினர் காஸ்மீரில் சண்டையிடுவதாக இந்தியா முறைப்படுகின்றது. 25 ஆயிரம் பொது மக்களை இந்தியா கொன்று விட்டதாக பாகிஸ்தானும், பாகிஸ்தான் உதவி பெறும் குழுக்கள் 400 இந்திய இராணுவத்தினரும் 2000 பொதுமக்களையும்

விரும்புவார்கள் என்பது மிகத் தெளிவு. ஆனால், பூரணமான மனமகிழ்வோடு அல்ல. ஏனென்றால் பாகிஸ்தானில் உள்ள பழமைவேண்வாதிகள் மிகத் தீவிரமான முஸ்லீம் சமய பழமைவாதத்தை தம்மீது திணிக்கக் கூடும் என இம்மக்கள் ஐயம் கொண்டுள்ளனர். இந்தியாவோ காஸ்மீருக்கு கூடிய சுயாட்சி வழங்கத் தயார் என பேச்சுக்கொருதரம் கூறினாலும் காஸ்மீர் மக்களைத் திருப்திப்படுத்தும் அளவிற்கு வழங்கத் தயாராய் இல்லை. இதுவே இன்றைய நிலை.

மிகக் கொந்தளிப்பாக இருக்கும் தமது எல்லையில் சிறிய புதிய நாடொன்று உருவாவதை இவ்விரு நாடுகளுமே இன்று விரும்பவில்லை. எல்லையுற்றும் பெரிதும் முரண்படும் இவ்விரு நாடுகளும், இவ்விடயத்தில் மட்டும் ஒரே கருத்தினைக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாடும் எந்தவொரு உதவியைச் செய்தாலும் அது தனது சொந்த நலனுக்கேயாகும் என்கிற அரசியல் யாப்பாட்டை முன்னர் தமிழீழ மக்கள் உணர்ந்தனர். இப்போது காஸ்மீர் மக்கள் உணர்கின்றனர். நேற்று தமிழீழம் இன்று காஸ்மீர் என நீளும் இந்தியக் கொடுங்கரங்கள் மடங்கும் காலம் விரைவில் வரும். எனவே விடுதலை நாட்டம் கொண்ட காஸ்மீர் மக்களுக்கு தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. அதைத்தான் அவர்கள் இன்று செய்கின்றார்கள் ■



# வாளேந்திய சிங்கக் கொடியின் தோற்றமும் பரிணாம வளர்ச்சியும்

இந்தியாவிலுள்ள காஞ்சி தூபியில் இலங்கையின் முதலாவது மன்னன் விஜயனின் வருகையைக் குறிப்பதாகக் கருதப்படும் சிற்பமொன்றுள்ளது. அதிலே சிங்க உருவத்தினையுடைய கொடியொன்று காணப்படுகின்றது. இது புராதன சிங்களவரின் சின்னமாக இருந்திருக்கலாம் என்பது சிலரது ஊகம். அதுவே இன்றைய தேசியக் கொடியின் சின்னமாகக் கைக்கொள்ளப்பட்டிருக்கக்கூடும்.

இவ்வாறு ஆண்டு 6 மாணவர்களுக்கு சமூகக் கல்விப் பாடப் புத்தகத்தில் தேசியக் கொடிபற்றி அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ளது. "கோட்டை இராசதானியாக விளங்கிய காலத்திலும், கண்டி இராசதானியாக விளங்கிய காலத்திலும் சிங்கக் கொடியே தேசியக் கொடியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்று நாம் கைக்கொள்ளும் தேசியக்கொடி கண்டியில் ஆட்சி புரிந்த சிறீவிக்ரமராஜசிங்கனின் கொடியை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது." இவ்வாறு அதில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. "இத்தேசியக் கொடியை மதிப்பது எமது அனைவரினதும் கடமையாகும்" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஒரு கொடியானது நாட்டு மக்களின் மதிப்பையும், பெருமையையும் தாராளமாகப் பெறுமாயின் அது வெறும் வெள்ளைத் துணியாக இருந்தாலும் பாதகமில்லை. அப்படி அது மக்களின் ஆர்வத்தைப் பெறின் ஒரு தேசியக் கொடிக்கு வேண்டிய முக்கிய தகைமையைப் பெற்றுவிடுகிறது" என தேசியக் கொடிக்கு இருக்க வேண்டிய இலக்கணத்தை அறிஞர் ஒருவர் கூறினார்.

> **படிப்படியாக சிறீலங்காவின் தேசியக் கொடிக்கு தமிழீழத்தில் இடமில்லாது போயிற்று. இன்று தமிழ் மாணவர்கள் புத்தகங்களில் மட்டும் அக்கொடியைப் பார்க்கிறார்கள்.**

இலங்கையின் சுதந்திரம் பற்றிய சிந்தனை எழுந்தபோது, தேசியக் கொடி பற்றிய கருத்துக்கள் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டன. பிரித்தானியரின் ஆட்சியிலிருந்து இலங்கை விடுபட முன்னர் 1947 ஆம் ஆண்டு முற்பகுதியில் டில்லியில் நடைபெற்ற ஆசிய நாடுகளின் மாநாட்டில் இலங்கையின் கொடியாகப் பறக்கவிடவென அப்போதைய சுகாதார அமைச்சர் எஸ். டி. சில்வா கொடியொன்றை எடுத்துச் சென்றார். அது செந்நிற பின்னணியில் அமைந்த பொன்னிற வாளேந்திய சிங்கத்தைக் கொண்ட கொடியாகும். இக்கொடிக்கு அப்பொழுதே தமிழர் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

அப்போதிருந்த பிரதிநிதிகள் சபையிலும், சபைக்கு வெளியேயும் தேசியக் கொடியின் அமைப்பு பற்றி பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அன்று "தேசிய வாதிகள்" என்றழைக்கப்பட்ட தமிழர்களாலும் வகுப்பு வாதிகள் என்றழைக்கப்பட்ட தமிழர்களாலும் தேசியக் கொடி குறித்துத் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் சிங்களவர் தரப்பினரால் தூக்கி வீசப்பட்டன.



திருமலை நடராசன்

யாழ்ப்பாணம் முற்ற வெளியிலே தமிழ் காங்கிரஸ் கட்சியினரால் தேசியக் கொடி பற்றிய கருத்துக்களை அறிய கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் பெரும்பாலும் நியாயவாதிகளே (சட்டத்தரணிகள்) கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் மஞ்சள், செந்நிறப்பின்னணியில் சிவனொளிபாதமலை தேசியக் கொடியாக அமைய வேண்டும் என்ற ஒரு கருத்தை திரு. கண்டி பேரின்பநாயகம் என்பவர் முன்வைத்தார். இக்கருத்து இவரால் 1945 ஆம் ஆண்டு முதல் முன்வைக்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சிவனொளிபாதமலை பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் அனைவராலும் போற்றப்படுவது. எனவே, இவ்வமைப்பு சகல மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது என்பது இவரது கருத்தாக இருந்தது.

இன்னுமொருவரின் கருத்து "சிங்களவர் வாளேந்திய சிங்கத்தை விரும்புவதால் மூவர்ணக்கொடியில் சிங்கம் அமைய வேண்டும்" என்பதாக இருந்தது. இங்கே இந்திய தேசியக் கொடியிலுள்ள அசோகச் சக்கரத்திற்குப் பதிலாக வாளேந்திய சிங்கத்தை அமைத்துக் கொள்ளலாம் என்பது இவரது கருத்து எனத் தெரிகிறது.

சிங்கத்தை தேசியக் கொடியில் பதிக்க ஒப்புக் கொண்டவர்களும் தாரபுத்திரனுடைய கொடியிலே சிங்கம் (வாளேந்திய சிங்கம் அல்ல) பொறிக்கப்பட்டிருந்தது என்றும், தாரபுத்திரன் ஒரு தமிழ் மன்னன் (இவனைத்தான் முருகப்பெருமான் வதம் செய்தார்) என்றும், சிங்கம் (வாளேந்திய சிங்கம் அல்ல) துர்க்கை அம்மனின் வாகனம் என்றும் கூறிக்கொண்டார்கள்.

சிலர் நந்தியையும் (யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியனின் சின்னம்) சிங்கத்தையும் ஒருமித்து கொடியில் பொறிக்க வேண்டும் என ஆலோசனை கூறினர். ஆனால், சிங்கம் நந்தியைச் சாப்பிட்டு விடும் என்று கூறி வேறு சிலர் அதனை ஆட்சேபித்தனர். தேசியக்கொடியில் யாழ் வாத்தியம் இடம்பெற வேண்டும் என யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அமைப்பொன்று தீர்மானம் நிறைவேற்றியது.

இதேவேளை சிங்கள அரசியல் வாதிகளின் கூட்டமொன்று காலிமுகத் திடலில் கூடி சிங்கக் கொடியை இலங்கை தேசியக் கொடியாகக் கொள்ள வேண்டும் என வற்புறுத்தினர்.

அப்போது எதிர்க்கட்சியாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியினர் மாறுபாடான கருத்தொன்றை முன்வைத்தனர். 'வகுப்பு வாதத் திற்குத் தேசியப் பூச்சுப் பூசி சிங்கக் கொடியை இலங்கை மீது திணிப்பதை' டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கண்டித்தார். "இன்றைய பாராளுமன்றம் சுதந்திர இலங்கையின் பாராளுமன்றம் அல்ல. நாடு இன்னும் விடுதலை பெறவில்லை. இதற்கென உழைத்துவரும் சக்திகளே சுதந்திரக் கொடியையும் ஆக்கும் உரிமையைக் கொண்டவர்கள்" எனக் கருத்துக் கூறினார்.

பின்னர் இவர், சுதந்திரம் பெற்று ஆக்கிய குடியரசு அரசியல் யாப்பில் தேசிய கொடியாக சிங்கக் கொடியே உள்ளது. அதில் உள்ளது சில வேளைகளில் பாட்டாளிச் சிங்கமாக இருந்ததோ அது எமக்குப் புரியவில்லை.

> **1972 மே 22ல் குடியரசு யாப்பு அமுல் செய்யப்பட்ட பின்னர் குடியரசு தினங்கள் எல்லாம் துக்க தினங்களாகின. அரச கட்டடங்களில் பறக்கவிடப்பட்ட கொடிகள் இளைஞர்களால் அறுத்தெறியப்பட்டன. 1978 பெப்ரவரியில் [illegible] இந்துக் கல்லூரியில் பறந்த சிங்கக் கொடியை அங்கு மாணவனாக இருந்த லெப். சீலன் எரித்தார்.**

16. 01. 1948 அன்று தேசியக் கொடிபற்றிய பிரேரணைகள் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. வாள் ஏந்திய சிங்கக் கொடியை ஜுவாப் ஏ. சின்னலெப்பை பிரேரித்தார்.

வருக்கு சிங்கக்கொடி, தமிழருக்கு நந்திக்கொடி, முஸ்லிம்களுக்கு பிறைக்கொடி என மூன்று தேசியக் கொடிகள் இருக்கவேண்டும் எனத் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரேரித்தார். மூவர்ணக்கொடியில் சிங்கம் அமைய வேண்டும் என ஜி. ஜி. பொன்னம்பலம் பிரேரித்தார். செம்மஞ்சள், வெண்ணிறப் பட்டைகளில் சிங்கம் அமையவேண்டும் என திரு. வி. சுந்தரலிங்கம் பிரேரித்தார். அப்போது உள்நாட்டு மந்திரியாக இருந்த சேர் ஒலிவர் குணதிலகா "இலங்கையின் கடைசிக்கோட்டையை பிரித்தானியர் கைப்பற்றிய போது சிங்கக் கொடி இறக்கப்பட்டது. இச்சிங்கக் கொடியைத் தவிர்த்த வேறொரு கொடியை ஏற்ற அரசாங்கம் தயாராயில்லை" என்றார். ஆனால், இலங்கையில் மூன்று இராச்சியங்கள் இருந்தன [illegible] 1815 இல் கண்டி இராச்சியத்தின் சிங்கக்கொடி இறக்கப்பட்டது. அதற்கு முன் [illegible] கொடியாக சிங்கக்கொடி இருந்ததே ஒழிய ஏனைய இரு இராச்சியங்களின் கொடியாக சிங்கக் கொடி இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


தொடர்ந்து அப்போதைய பிரதமர் டி. எஸ். சேனநாயக்க தேசியக்கொடி பற்றித்தீர்மானிக்கக் குழு ஒன்று நியமிக்கப்படும் என்று அறிவித்தார்.

இதற்கிடையில் 50,000 சிங்கக் கொடிகள் பிரித்தானியாவில் இருந்து சேனைக்காக தருவிக்கப்பட்டதாகவும், அவை தேசியக் கொடிகள் அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் சிறீலங்காவின் முதலாவது சுதந்திர தினத்தன்று "நூதனக் கொடி" யாக செந்நிறப் பின்னணியில் மஞ்சள் நிற வாளேந்திய சிங்கக்கொடி, சுதந்திர சிறீலங்காவின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவினால் ஏற்றி வைக்கப்பட்டது.

பின்னர் 1948 மார்ச்சில் தேசியக் கொடி பற்றி ஆராயவென நியமிக்கப்பட்ட குழு தமிழருக்கு செம்மஞ்சள் பட்டையையும், முஸ்லிம்களுக்கு பச்சை நிறப்பட்டையையும் வழங்கியது. சிறுபான்மையினர் கொடி முழுவதும் கிடையாக வர்ணப்பட்டையைக் கேட்டார்கள் ஆனால், கிடைத்ததோ இரண்டு நிலைக்குத்துப் பட்டைகள். 'கொடியின் ஓரத்தில் கொடிக்கம்பத்தில் இந்த இரு நிறப்பட்டைகள் இருக்கும் பகுதியைச் சுற்றி மறைத்துவிட்டால்' எனச் சிலர் சந்தேகித்தார்கள். ஆனால், 'கலவரமாக வெட்டி எடுத்துவிடலாம்' என சிலர் எண்ணினார்கள்.

பின்னர் 1978 செப்டெம்பர் 7 இல் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பில் நான்கு புதிய வெள்ளரசு இலைகள் பொறிக்கப்பட்டு, சிறீலங்காவின் தேசியக் கொடி இன்றைய வடிவத்தை அடைந்தது. இதுவே சிறீலங்காவின் தேசியக் கொடியின் வரலாறாக உள்ளது.

இதேவேளை 1948 ம் ஆண்டு சிறீலங்காவின் சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியுடன் நந்திக்கொடி பறக்கவிடப்பட்டது.



லெப். சீலன்

எனினும் சுதந்திர தினத்தைக் கொண்டாடவில்லை, கொடியேற்றவில்லை [illegible] மக்கள் ஆர்வம் காட்டவில்லை. இந்திய சுதந்திர தினமாகிய 1947 ஆகஸ்ட் 15ம் திகதி [illegible] என்று இந்திய தேசியக் கொடி யாழ்ப்பாணத்தில் [illegible] ஏற்றப்பட்டு சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. ஆனால், இவை 45 வருடங்களின் பின் இன்று [illegible] எரிக்கப்பட்டன.

பின்னர் கறுப்புக்கொடிகளுடனேயே தமிழர்கள் சிறீலங்காவின் ஒவ்வொரு சுதந்திர தினத்திலும் காணப்பட்டனர். 1956 ல் திருக் கோணமலையில் சிறீலங்காவின் சுதந்திர தினத்தன்று கறுப்புக் கொடி ஏற்ற முயன்ற திரு. நடராசன் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1972 மே 22 ல் குடியரசு யாப்பு அமுல் செய்யப்பட்ட பின்னர் குடியரசு தினங்கள் எல்லாம் துக்க தினங்கள் ஆகின. அரச கட்டடங்களில் பறக்கவிடப்பட்ட கொடிகள் இளைஞர்களால் அறுத்தெறியப்பட்டன. 1978 பெப்ரவரி 4ல் திகதி திருகோணமலை இந்துக் கல்லூரியில் பறந்த சிங்கக் கொடியை அங்கு மாணவனாக இருந்த லெப். சீலன் எரித்தார். 1978ல் புதிய

> **கறுப்புக் கொடியுடனேயே தமிழர்கள் சிறீலங்காவின் ஒவ்வொரு சுதந்திர தினத்திலும் காணப்பட்டனர். 1956 ல் திரு. கோணமலையில் சிறீலங்காவின் சுதந்திர தினத்தன்று கறுப்புக் கொடி ஏற்றமுயன்ற திரு. நடராசன் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.**

மாற்றத்துடனான சிங்கக் கொடி பறக்கவிடப்பட்டபோது அவ்ரோ விமானம் ஒன்று வெடித்துச் சிதறியது.

படிப்படியாக சிறீலங்காவின் தேசியக் கொடிக்கு தமிழீழத்தில் இடமில்லாது போயிற்று. இன்று தமிழ் மாணவர்கள் புத்தகங்களில் மட்டும் அக்கொடியைப் பார்க்கிறார்கள்.

**— சிவபாலன் —**

**தமிழீழம்**

கடந்த சில வருடங்களாக சிறீலங்காவின் பிரதமராக இருந்த டி. பி. விஜேதுங்க தேசியக் கொடியினைப்பற்றியும், அதனை ஒவ்வொரு வீட்டிலும் [illegible] சுதந்திர தின காலத்தில் ஏற்றும்படியும் சகல இலங்கையிலும், இடங்களிலும் பறக்கவிடும்படியும் தொடர்பு சாதனங்கள் மூலம் மக்களை வேண்டிக் கொண்டார்.

மலிவு விலையிலும் இலவசமாகவும் தேசியக் கொடிகள் விநியோகிக்கப்பட்டன. மறுதினம் அவை தெருத்தெருவாக குப்பைத் தொட்டிகளில் காணப்பட்டன என சிறீலங்காப் பத்திரிகைகள் குற்றம் சாட்டின. 1948ல் 'அலங்காரத்திற்கு' பயன்படுத்தப்பட்ட கொடி இன்றும் அலங்காரப் பொருளாகவே பயன்படுத்தப்பட்டு வருவதுபோல் தெரிகிறது. ஒரு நாட்டின் தேசியக்கொடி வெறும் அலங்காரப் பொருள் அல்ல. அந்த நாட்டின் அதிபதிகளினதும் நாட்டின் அதிமேலாதிக்கத்தினதும் பொருள் தேசியக் கொடிதான். அதற்குரிய மரியாதை வழங்கப்பட வேண்டிய கௌரவம் வழங்கப்பட வேண்டும். ஆகவேண்டும், ஒரு நாட்டின் தேசியக் கொடி மதிக்கப்படவில்லையானால் அந்நாடு மதிக்கப்படவில்லை என்பதே கருத்தாகும். ■

# உலக சனத்தொகையில் அரைப்பங்கினரான பெண்களுக்கு சம நீதி கிட்டவில்லை

## ஐ.நா. கணிப்பீடு தரும் தகவல்

தரவுகளும் கணிப்பீடுகளும் உலகின் எல்லாப்பகுதிகளிலும் பெண்கள் புதிய பொருளாதாரச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்களென்பதையும், பொருளாதார ரீதியில் புதிய பங்களிப்புக்களைச் செய்கிறார்களென்பதையும் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், அவர்களது பொருளாதார ரீதியிலான தொழிலீடுபாடு, ஆண்களிலிருந்து வேறுபட்டதாகவும் சமத்துவமற்றதாகவும் காணப்படுகிறது. இவற்றிற்கெல்லாம் மோசமானது பெண்களின் தொழிலீடுபாடு, பொருளாதாரப் பெறுமதியற்றதென்று கூறப்பட்டு அவர்களின் பங்களிப்பு அளவுக்கு உட்படுத்தப்படாமையாகும். கடைசியாகப் பார்க்கப்போனால் ஒட்டுமொத்தமான பொருளாதார அரசியல் தீர்மானமெடுக்கும் வகையிலான அவர்களது பங்களிப்பு ஓரளவுக்கு அதிகரித்துள்ளதாயினும் மிகக் குறைந்தளவிலேயே இருக்கிறது.

பெண்கள் ஆண்களிலும் பார்க்க கூடிய காலம் வாழ்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியுமானாலும், 1990 ஆம் ஆண்டளவில் உலகில் உள்ள சனத்தொகையான 5.33 பில்லியனில் 2.63 பில்லியன் பெண்கள் என்பது அநேகருக்குத் தெரியாது. பல பிரதேசங்களில் பெண்கள் ஆண்களை விடக் கூடுதலாக வசிக்கிறார்கள். பெண்குழந்தைகளிலும் பார்க்க ஆண்குழந்தைகளே உலகில் அதிகமாகப் பிறந்தாலும் எல்லா வயதுகளிலும் பெண்களின் இறப்பு வீதம் ஆண்களிலும் பார்க்கக் குறைந்ததாகும். எது எவ்விதமானாலும், சிலநாடுகளில் இப்பொழுதும் கைம்பெண்கள் எரிபடுவதும், சீதனக் கொலைகள் நடைபெறுவதையும், சில கிராமங்களில் பெண் சிசுக்கள் கொல்லப்படுவதும் யதார்த்தத்தில் இருக்கிறது. அதுவுமல்லாமல் ஆண் குழந்தைகளின் மேல் உள்ள விருப்பத்தின் அடிப்படையில் கருச்சிதைவுகளும் உண்டாக்கப்படுகின்றன. இச்சந்தர்ப்பங்களில் பெண்களின் இறப்பு அதிகமாகிறது.

அனேக வளர்முக நாடுகளில் பெண்கள் மிக இளமையிலேயே விவாகம் செய்கிறார்கள். ஆபிரிக்கப் பெண்களில் 50 வீதத்தினரும், ஆசியப் பெண்களில் 40 வீதத்தினரும், லத்தின் அமெரிக்க நாட்டுப் பெண்களில் 30 வீதத்தினரும் பதினெட்டு வயதிலேயே விவாகம் செய்துவிடுகிறார்கள். ஆண்கள் வயது அதிகரித்த பின்னரே விவாகம் செய்கிறார்கள். வங்காள தேசத்திலும், சூடானிலும் ஆண்கள் தங்கள் முதலாவது விவாகத்தை பெண்கள் விவாகம் செய்யும் வயதிலும் பார்க்க சராசரி ஏழு ஆண்டுகளுக்குப் பின்னரேசெய்கிறார்கள். இவ் வயது இடைவெளி பெண்களை அனுபவம் அற்றவர்களாகவும் ஆண்களில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கும் தள்ளுகிறது. அதுவும் அவள் குடும்பத்தின் பொருளாதாரத்திற்கு தன் பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கும் நிலையிலேயே நடைபெறுகிறது. இவ் விடைவெளி ஆண்களிலும் பார்க்க பெண்களே அதிக அளவில் விதவைகளாக வேண்டிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்துகிறது.

குடும்ப வாழ்வின் இருண்ட பக்கமான வன்முறைப்பிரயோகம் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், ஊனமுற்றோர் மீது நடத்தப்படுகிறது. ஆஸ்திரிய நாட்டில் 1985 ஆம் ஆண்டு ஏற்பட்ட 1500 விவாகரத்துக்களில் 59% திற்கு மனைவியர் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறையே காரணமாக இருந்தது. இந்தியாவில் முறையே 1985 இல் 999 பெண்களும், 1986 இல் 1319 பெண்களும், 1987 இல் 1786 பெண்களும் சீதனக் கொடுமை காரணமாக இறந்தார்கள்.





அனேகமாக எல்லா நாடுகளிலும் பெண்கள் வாக்குரிமை பெற்றவர்களாயிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளுக்கும், அரசியல் வாழ்விற்கும் அனுமதிக்கப்படுவதில்லை. தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள உயர் உத்தியோகங்களிலிருந்தும் இவர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர். ஐ.நாவில் அங்கம் வகிக்கும் 159 நாடுகளில் (1990ம் ஆண்டு கணக்குப்படி) ஆறு நாடுகளின் தலைமை மாத்திரம் பெண்களிடம் இருந்தது. உலக நாடுகளில் உள்ள அமைச்சரவைகளில் ஆக 3.9 வீதம் தான் பெண்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள். உலகில் 93 நாடுகளில் பெண் அமைச்சர்களே இல்லை. ஆகக் கூடிய மாற்றமடையாத அளவில் பெண்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பது நோர்டிக் நாடுகளான ஸ்கண்டிநேவிய நாடுகளில் தான். மேற்கு ஐரோப்பாவில் தொழிற்சங்கங்களில் 30 வீத அங்கத்துவத்தைக் கொண்டுள்ள பெண்கள் அச்சங்கங்களின் உயர்பீடங்களுக்குத் தெரிவு செய்யப்படுவதில்லை. சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் 25-லிருந்து 45 வீத அளவுக்குப் பெண்கள் அரசியல் கட்சிகளில் அங்கத்தவர்களாக இருந்தபோதும் கட்சிகளின் உயர்பீடங்களுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. அரசியல் தலைமைத்துவத்திலிருந்து பெண்கள் ஒதுக்கப்பட்டாலும் அரச சார்பற்ற சமூகஸ்தாபனங்களில் அதிகாரமுள்ள உயர்ஸ்தானங்களில் அவர்கள் இருப்பதைக் காணலாம். தமது குடும்பங்களின் நலன்களில் அவர்கள் காட்டும் அக்கறை இவ் அடிமட்ட ஸ்தாபனங்களின் உயர்பீடங்களை இவர்கள் கைப்பற்றுவதற்கு உதவியாயிருக்கிறது. அதிகாரக்குவியல் கொண்ட நிறுவனங்களின் அடிமட்ட நிலைகளில் பெண்கள் தொழில் புரிகின்றனரேயாயினும் படிநிலை உயர உயர அவர்களின் தொகையும் வீழ்ந்து கொண்டு செல்கிறது. இதற்கு ஐ.நா. ஸ்தாபனமே நல்ல எடுத்துக்காட்டாகும். அதில் உள்ள உயர் முகாமைத்துவ நிலைகளில் மிகக் குறைந்தளவு அதாவது 3.6 பெண்களே கடமை புரிகிறார்கள்.

போர்களின் போது பொது மக்களே கூடுதலாக பாதிக்கப்பட்டு இறக்கவும் செய்கிறார்கள். அப்பொது மக்களில் பெண்களும், சிறார்களும் தான் பாதிப்புக்குக் கூடுதலாக ஆளாகுகிறார்கள். பல பெண்கள் பார்வையாளராக இல்லாமல் சமாதான முயற்சிகளில் அரசியல் சார்பற்ற முறையில் ஈடுபட்டுள்ளனரேயாயினும் மிகக் குறைவான அளவினரே சமாதானத்துக்குப் பங்களித்தவர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

ஆண், பெண் பாலாரிடையே எழுத்தறிவைப் பொறுத்தவரையில் சம அந்தஸ்து நிலை ஏற்படுவதற்கு வரலாற்று ரீதியாக பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட பற்றாக்குறைக்கல்வி தடையாக இருந்தபோதும் பாடசாலைகளில் இருபாலாரும் சேர்ந்து கொள்ளும் சம நிலை சிறார்களின் பிறப்பு வேகத்துக்குச் சமமாக கல்வி வளங்களின் பெருக்கமும் இருப்பதால் விரைவில் ஏற்பட்டுவிடும்.

1970 களில் இருந்து தொழிலாளர்களின் தொகையில் பெண்களின் அளவு அதிகரித்து வந்துள்ளது. எங்கும் பெண்கள் முன்னையதை விட வீட்டுவேலைகளுக்கு அப்பால் வேலை செய்கிறார்கள். இதற்கு மாறாக ஆண்கள் முன்னையதை விட குறைவாக வெளி வேலைகளிலும், வட அமெரிக்கா, அவுஸ்ரேலியா, மேற்கு ஐரோப்பா போன்ற இடங்களில் ஓரளவுக்கு கூடியளவில் வீட்டு வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள்.

1990 ம் ஆண்டில் வருமானம் தரும் தொழில்களில் ஈடுபட்டிருந்த 8.8 மில்லியன் பெண்களில் அரைவாசிக்கு அதிகமானோர் ஆசியப் பெண்களாகவும், வளர்ச்சியடைந்த நாடுகளில் 29 வீதத்தினராகவும், 9 வீதத்தினர் ஆபிரிக்காவிலும் 5 வீதத்தினர் லத்தின் அமெரிக்காவிலும் வாழ்ந்தனர்.

வளர்ச்சியடைந்துவரும் பிரதேசங்களிலும் சமீபகாலங்களில் வளர்ச்சியடைந்த பிரதேசங்களிலும் கூட அண்மையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியானமாக பெண்களின் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தொழில் விரிவாக்கம் அல்லது தொழில் அபிவிருத்திகளால் பெண்கள் மிகவும் காலம் தாழ்த்தியே இலாபம் அடைபவர்கள். ஆனால் தொழிற் சுருக்கம் அல்லது வீழ்ச்சியால் முதலில் பாதிப்படைபவர்கள் பெண்களே.

ஆபிரிக்கா, ஆசியா போன்ற நாடுகளில் இப்பொழுதும் கூடுதலான பிரதேசங்களில் விவசாயம், காணி போன்றவற்றில் அதிகம் வேலை செய்வோரும் பெண்களேயாகும். உலகம் பூராவும் பார்க்கும் போது கைத்தொழில்களில் குறைவான தொகையில் பெண்கள் வேலை செய்கிறார்கள். ■

# தொழிலாளர்களும் ஆயுதம் ஏந்தி போராட்டத்தில் இணையவேண்டும்

## மே தினக்கூட்டத்தில் கரிகாலன் அறைகூவல்

"தமிழீழத்தின் தொழிலாளர் வர்க்கம் இன்று, சிறீலங்கா அரசினது இராணுவ, பொருளாதார ரீதியான அடக்கு முறைகள் உட்பட பல்வேறு அடக்குமுறைகளுக்கும் அட்டூழியங்களுக்கும் உள்ளாகி வருகின்றது. இவ்வாறான அடக்குமுறைகளில் இருந்து விடுதலை பெறுவதாயின் அனைத்துத் தொழிலாளர்களும் ஆயுதம் ஏந்த வேண்டும். ஆயுதம் ஏந்தித் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைய வேண்டும்." இவ்வாறு, யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெற்ற மே தினப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், சிறீலங்கா இனவாத அரசு தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்காக அன்று முதல் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் மீது பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைப் படுகொலை செய்துள்ளது என்றார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் பேசும்போது, தமிழீழத்தின் தொழிலாளர் வர்க்கம் யுகம் யுகமாக பல்வேறு அடக்குமுறைகளுக்கு உள்ளாகி வந்துள்ளது. இதனால், எமது தொழிலாளர் வர்க்கம் இன்று தமது தொழில்களையே இழந்துள்ளது.

இவ்வாறான நிலைமைகளை நீக்குவதற்கு அனைத்துத் தொழிலாளர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

விடுதலைப் புலிகளின் நீதித்துறைப் பொறுப்பாளர் திரு. பரா உரை நிகழ்த்தும்போது, தமிழீழத்தின் எதிரியான சிறீலங்கா இனவாத அரசு நாட்டின் வளங்கள் அனைத்தையும் திரட்டி தமிழினத்தை அழித்தொழிக்க முயல்கிறது.

இவ்வாறு இன்று நேற்றல்ல, பல தசாப்தங்களின் முன்பிருந்தே தொழிலாளர் வர்க்கம் மீது கட்டுமிராண்டித் தனமான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இவ்வாறான இனவெறி பிடித்த சிங்கள அரசு ஒருபோதும் தொழிலாளர்களது உரிமைகளை வழங்கப் போவதில்லை. இவ்வுரிமைகளைப் பெறுவதாயின் அனைத்துத் தொழிலாளர்களும் ஆயுதம் தாங்கி போராட முன்வரவேண்டும் என்றார்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் பேசும்போது, தமிழ் மக்கள் மீது இனவாத சிங்கள அரசு பல்வேறு அடக்குமுறைகளையும், அட்டூழியங்களையும் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. அத்துடன் பொருளாதாரத் தடைகளையும் [illegible] நடாத்திக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தமிழீழத்தின் தொழிலாளர் வர்க்கம் தமது தொழில்களையே இழந்துள்ளனர். இவ் விழப்புக்களில் இருந்து தொழிலாளர்கள் விடுபடுவதற்கு ஒரேயொரு வழி நாம் அனைவரும் இணைந்துபோராடி எமது மண்ணை மீட்டெடுத்து தொழில் வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதி உரையாற்றும்போது:
இன்று உலகில் சரி பாதியினர் பெண்கள். ஆனால் அவர்கள் மூன்றில் இரண்டு பங்கு வேலையைச் செய்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஊதியமாகக் கிடைப்பதோ பத்தில் ஒரு வீதமே. அதேவேளை உலகத்தில் நூறில் ஒரு வீதச் சொத்துக்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....



# பனிப் ...

# இந்திய உ...

இரண்டாவது உலக மகா யுத்தத்தை அடுத்து, சோவியத் ஒன்றியமும் அமெரிக்காவும் உலகின் இரு தனித்தனியான சக்திகளாகத் தலை தூக்கின. இதனால் உலக நாடுகளிடையே, இரு முனையான முனைவாக்கம் (Bi-poloraisation) ஏற்பட்டது. அதேவேளை, சோவியத் ஒன்றியமும் அமெரிக்காவும் நேரடியாகத் தெரியாத கருத்துருவ யுத்தமொன்றை தங்களுக்குள் நடாத்திக் கொண்டிருந்தன. இதனையே பனிப்போர் (Cold War) என்ற அரசியல் பதம் குறித்து நிற்கின்றது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தை அடுத்து குடியேற்ற ஆட்சியில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்ட இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற இந்திய உப கண்ட நாடுகளும் இந்தப் பனிப்போரின் தன்மைக் கேற்பவே தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளாகின.

இந்தியாவுக்கும் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையிலான உறவு பழமை வாய்ந்த ஒன்றாகக் கருதப்பட்டது. இன்று மத்திய ஆசியா என அழைக்கப்படும் சோவியத் பிரதேசத்தில் இருந்தே நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆரியர்கள் இந்திய உபகண்டத்தில் குடியேறி, அங்கு வாழ்ந்த பழங்குடி மக்களை வெற்றி கொண்டு, நவீன இந்திய உப கண்டத்தின் ஆரிய வரலாற்றை ஆரம்பித்தனர் என்பது சில வரலாற்றாசிரியர்களின் கருத்து. இருந்தபோதிலும் பதினைந்தாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு விஜயம் செய்த அவான்சி நிக்கிட்டின் என்கின்ற சோவியத் பயணியின் குறிப்புக்களிலேயே வட இந்தியா பற்றிய தகவல்கள் முதன் முதலில் வெளியாகின. பதினேழாம் நூற்றாண்டில் இந்தியர்கள் அஸ்ராகானில் குடியேறி அங்கிருந்து மொஸ்கோவுடன் வியாபாரம் செய்து வந்துள்ளனர். 1857ல் இந்தியர்களின், பிரித்தானிய ஆட்சிக்கெதிரான கலகம் ஒன்று தோல்வி கண்டதை அடுத்து, சில கிளர்ச்சிக்காரர்கள் சோவியத்தில் அரசியல் அடைக்கலம் பெற்றனர். 1855 இல் இந்திய தேசிய காங்கிரஸ் உருவான கூட்டத்தில், ரஸ்ய கீழைத்தேய நிபுணர் இவான் மினாவா பங்குபற்றியுள்ளார். அவ்வாறே காந்தியின் அகிம்சைக் கோட்பாடு, டால்ஸ்ரோயின் ஆக்கங்களுள் ஆதிக்கம் செலுத்துவதைக் காணலாம். இவ்வாறாக இந்தியாவிற்கும் ரஸ்யாவிற்கும் இடையிலான தொடர்புகள் காணப்பட்டபோதும், அதை உறவாக, பாலமாக வளர்த்த பெருமை ஜவகர்லால் நேருவுக்கே உரியது. நேரு, ஆரம்பம் முதல் ரஸ்ய புரட்சியின் அபிமானியாகவே காணப்பட்டார். ஆயினும் ஸ்டாலின், நேருவின் அரசாங்கத்தை பிரித்தானியர் சார்பான ஒன்றாகவே கருதினார். இதில் உண்மையும் உண்டு. ஏனெனில் இக்காலத்தில், இந்தியாவின் பாதுகாப்பு தேவைகளை பிரிட்டன், அமெரிக்கா போன்ற வலதுசாரி நாடுகளே கவனித்து வந்தன. ஆயினும், சுதந்திர இந்தியாவின் தலைமைப் பீடத்தில் இருந்து இந்தியாவுக்கு விஜயம் செய்தனர். இதன் பின்பு சோவியத் இந்திய உறவு நெருக்கமடையத் தொடங்கியது.

இதேபோல் 1954 ல் பாகிஸ்தானுடன் அமெரிக்கா செய்த ஒப்பந்தம், பாகிஸ்தானுக்கு தாராளமாக ஆயுதம் கிடைக்க வழி செய்தது. இதையடுத்து SEATO, CENTO இராணுவக் கூட்டமைப்புக்களுள் அமெரிக்கா பாகிஸ்தானைச் சேர்த்துக் கொண்டது. இவ்வாறு பாகிஸ்தான் அமெரிக்காவின் சார்பாக மாறியதும்,



கைத்தொழில் வளர்ச்சி, மேற்கத்திய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் காலப்போக்கில், தமது சந்தைக்கு வீழ்ச்சியைக் கொடுத்துவிடுமோ என்ற அச்சத்தை ஊட்டியது. எனவே, இந்தியாவின் வளர்ச்சி நிலைக்கு முட்டுக்கட்டை இடத் தொடங்கின. டச் - இந்தோசீன யுத்தம் (1948 - 1950), கொரிய யுத்தம் (1950) ஆகியவற்றில் இந்தியாவின் நடுநிலைப் போக்கு, அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகளுக்கு சினம் ஊட்டியது. 1955 ஆம் ஆண்டில் பிலாயில் ஒரு உருக்காலையைக் கட்டுவதற்கு பிரிட்டனிடமும், ஜேர்மனியிடமும் உதவி கோரியது. ஆனால், மேற்கத்திய நாடுகள் இந்தியாவுக்கு தண்ணி காட்டத் தொடங்கின. இந்த இக்கட்டான நேரத்தில் ஆபத்து உதவியாக சோவியத் ஒன்றியம் இந்த உருக்கு ஆலையைக் கட்டிக் கொடுக்க முன் வந்தது. இதே ஆண்டு மார்கழி மாதத்தில் நிக்கிட்டா குருசேவும், நிக்கலோய் பல்கனினும் சோவியத் சோவியத் இந்தியாவுடன் கூட்டுறவை வளர்த்துக் கொண்டது.


இக்கால கட்டத்தில், இலங்கை சாதுரியமான செயல்கள் ஊடாக தன்னை தக்கவைத்துக் கொண்டது. டி. எஸ். சேனநாயக்கா அமெரிக்க ஆதரவாளராக இருந்தபோதிலும் ஜோன் கொத்தலாவலையே அமெரிக்காவின் சார்பு நாடாக இலங்கை மாற வித்திட்டார். டச் - இந்தோசீன யுத்தத்தில் டச்சுக் கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களை பயன்படுத்தக்கூடாது என விதித்த தடை, இலங்கைக்கும் இந்தோனேசிய நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வளர்க்க உதவியது. அதேவேளை கொரிய யுத்தத்தில் சீனாவுக்கு இறப்பர் விற்பனைத் தடையை அமெரிக்கா ஏற்படுத்திய நேரத்தில் இலங்கை, சீனாவுக்கு இறப்பரை இனாமாக அளித்து அதற்குப் பதிலாக சீன அரிசியைப் பண்டமாற்றாகப் பெற்றது. இதன் காரணமாக சீனா இலங்கை அரசாங்கத்தின் ஆப்த நண்பனாயிற்று.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# போரும்
# பகண்டமும்

ஆயினும் சோவியத் ஒன்றியம், இலங்கைக்கு பூரண சுதந்திரம் வழங்கப்படவில்லை என்றும், மட்டுப்படுத்தப்பட்ட இறைமையே உண்டு எனவும் வாதாடி, ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை தனி நாடாக இடம்பெறுவதை தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி இருமுறை தடுத்தது. ஆயினும் 1955 இல் சோவியத் ஒன்றியம் இலங்கை ஐ. நா. வில் இடம்பெறுவதை அனுமதித்தது. இருப்பினும் இலங்கை, அமெரிக்க -சீன -பாகிஸ்தான் சார்பான நாடாக வெளிப்படுத்தி தனது இந்திய எதிர்ப்பை



வெளிக்காட்டிக் கொண்டது. சோல்பரி அரசியல் சாசனத்தில் அளிக்கப்பட்ட காப்பு விதி எனப்படும் 29ம் பிரிவில், இலங்கையின் சிறுபான்மை இனத்தவருக்கு எதிரான சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அதனைத் தடுக்கும் சக்தியை பிரித்தானிய மகாராணிக்குக் கொடுத்தது. இதனாலேயே தமிழர்களை சிங்களவர்கள் ஆட்சி கொள்ள முடியவில்லை. தமிழர்களின் இறைமை அவர்களை அடிமை கொண்ட குடியேற்ற சக்தியான பிரித்தானியரிடமே இருந்தது. 1972ல் தமிழர்களின் அனுமதியின்றி இயற்றப்பட்ட சிறீலங்காக் குடியரசு அரசியலமைப்பு, தமிழர்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தியது. 1972 முதல் தமிழர் நாடற்ற தேசிய இனமாக மாறினர் என்ற கருத்துக்கள் அழுத்தம் பெறுகின்றன.

இதற்கிடையே, நேரு தனது பஞ்சசீலக் கொள்கையை அறிவித்து, இந்தியாவை ஒரு நடுநிலமை நாடாகக் கொண்டு செல்ல முயன்றார். ஆயினும், பாகிஸ்தானின் இராணுவக் கூட்டமைப்புக்களும் 1962ஆம் ஆண்டு நடைபெற்ற சீன யுத்தமும் நேருவின் பஞ்ச சீலக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தன. யுத்தம் முடிந்து இருவருட காலத்துள் சீனா தனது முதலாவது அணுகுண்டை பரீட்சித்தது. இதனால், விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்கென 1954 இல் அணு உலை அமைத்த இந்தியா படிப்படியாக தானும் அணுவாயுத உற்பத்தியை தொடங்க முயற்சித்து 1974 இல் தனது முதலாவது அணுத்திரியைத் பரீட்சித்தது. பாகிஸ்தானும் பூட்டோவின் ஆசியுடன் 1972 தை 20 இல் "இஸ்லாமிய அணுகுண்டு" என வர்ணிக்கப்பட்ட அணுவாயுதம் தயாரிக்கும் நிலையை அடைந்தது. இந்தியா இதற்குப் போட்டியாக "அக்னி" ஏவுகணைத் தயாரிக்கும் நிலைக்கு முன்னேறியது. இவ்வாறு ஆயுதப் போட்டி இந்தியா-பாகிஸ்தானை ஆட்டிப்படைக்கத் தொடங்கியது.

இதேவேளை இலங்கை 1956 வரை அமெரிக்க சார்பாளராக நின்றது. 1956 இல் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா இடது சாரி சார்பாளராக மாறியதன் பின்னர், சோவியத் ஒன்றியம் இலங்கைக்கு அதிகளவில் கடன்கொடுத்த நாடாகத் திகழ்ந்துள்ளது. திருமதி. பண்டாரநாயக்காவின் காலத்தில் சீன - சோவியத் உதவிகள் தாராளமாகக் கிடைத்தன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆயினும் 1977 தேர்தலில் ஜெயவர்த்தனா வெற்றி பெற்றபின்னர், முன்னரை விட மிகவேகமாக இலங்கை வலது சாரிகள் பக்கம் சரிந்துகொண்டது. திருகோணமலை எண்ணைக்கொள்கல குத்தகைகள் அமெரிக்க சார்பாளருக்கே வழங்கப்பட்டன. இதனால் 1970 களின் நடுப்பகுதிகளில் இலங்கையூடாக, அதுவும் திருகோணமலை துறைமுகம் வழியாக, அமெரிக்க ஊடுருவல் ஏற்படலாம் என்ற அச்சத்திற்கு இந்தியா ஆளாகியது. இதுவே தமிழர் பிரச்சினைமேல் இந்தியாவிற்கு அதிகளவு அக்கறை ஏற்படக் காரணமாயிற்று.

1986 வரை இந்திய தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அதிக அக்கறை காட்டியமை, பனிப்போரின் பின்னணியிலேயே என்பதை நன்கு உணர்ந்த ஜே. ஆர்., இந்தியாவுடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்தார். இதன் மூலம் இந்திய தமிழீழப் பிரச்சினையில் தமிழர்களுக்குப் பாதகமாக திசை திரும்பும் என நன்கு திட்டமிட்டார். இதுவே இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் இரகசியம்.

இந்தியாவும் இக்கால கட்டத்தில் பனிப்போர் முடிவடைவதற்கான அறிகுறிகள் தென்பட்டதை இனங்கண்டது. ஆகவே அமெரிக்க ஊடு



ருவல் என்ற அச்சம் விலகியதும் தமிழீழ போராட்டத்திற்கு எதிராக மாறியது.

இக்கால கட்டத்தில் இந்தியாவுக்கு மற்றொரு இராணுவத் தேவை ஏற்பட்டது. தனது கடற்படையை இந்து சமுத்திரத்தில் வலுவுடைய வைப்பதே அத்தேவை.

இதற்கு இலங்கையின் உதவி இந்தியாவிற்கு எந்நேரமும் தேவை. ஆகவே, இலங்கை அரசை கவர இந்திய அமைதிப் படை கவசப்படையாக மாறியது. ஆயினும், ஆய்வாளர் சூரியநாராயண கூறுவதுபோல் இது சிங்களவருக்கு நன்றியுணர்வைக் கொடுக்கவில்லை. புலிகளிடமும் செம்மையாக அடி வேண்டி, கெரில்லா யுத்தத்தை எதிர்கொள்ள முடியாத இராணுவம் என்ற அவப் பெயரையும் அது சுமந்து கொண்டது.

1990 கார்த்திகையை அடுத்து சோவியத் கூட்டமைப்பின் சிதறல் பனிப்போரை முடிவாக்கிவிட்டது. அதேவேளை சோவியத்தின் கலைவு சுயநிர்ணய உரிமை பற்றிய கருத்தில் புதிய பரிமாணங்களை விதைத்துவிட்டது. எனவே, தமிழீழப் போராட்டம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற பனிப்போரின் முடிவு வித்திட்டுள்ளது. அதே வேளை சோவியத் உதவி குன்றிய நிலையில் உள்ள இந்தியாவும் அமெரிக்க உதவி மறுக்கப்படும் நிலையில் உள்ள பாகிஸ்தானும் புதிய போக்குகளை அவாவி நிற்கின்றன. அமெரிக்க -இந்திய "தேனிலவு" இடையில் தலைதூக்கியது. ஆனால் அணுவாயுத ஒழிப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இந்தியா மறுப்பது அமெரிக்கா, பிரான்ஸ் உட்பட மேல்கத்திய நாடுகளுக்கு இந்தியா மேல் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், எரிசக்தி உட்கட்டிய விருத்தில் ரஸ்ய ஜனாதிபதி இந்தியாவிற்கு விஜயம் செய்து நட்புறவு ஒப்பந்தத்தை நீடித்துள்ளார். ஏவுகணை வளர்ச்சிக்கான உதவிகளுக்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இவைகள் அமெரிக்க -இந்திய ஒட்டுறவைக்குறைத்துள்ளன. அதே வேளை இஸ்ரேல் இந்தியாவுடன் நெருக்கமடையத் தொடங்கியுள்ளது. ஏனெனில், இஸ்லாமிய மேலாட்டம் (Islamic Threat) என்பது இரு நாடுகளுக்கும் பொதுவாக உள்ளது. இவ்விதமாக பனிப்போரின் முடிவு இந்திய உபகண்டத்தில் மாறுதல்களை ஏற்படுத்தி வருகிறது. இம் மாறுதல்களை உன்னிப்பாக அவதானித்தால் "தமிழீழம்" என்றொரு நாடு உருவாவதற்கான தார்மீக சூழலை பனிப்போரின் முடிவு பிரசவித்துவிட்டது எனலாம். ■






பன்குளம்,
அழகான தமிழ்க் கிராமம். முக்காலமும் நீர் நிறைந்து நிற்கும் குளம். குளத்திற்கு கீழாகப் பரந்து விரியும் வயல் நிலங்கள். வறுமைக்கு அங்கு என்ன வேலை.

தமிழர் பகுதியான பன்குளத்திலும் சிங்களக் குடிகள் பரவத் தொடங்கின. காணி இல்லாத சிங்களவர்களுக்கு நிலம் வழங்க தமிழர் கிராமமான பன்குளத்திற்குள் சிங்கள அரசு இடம் கண்டுபிடித்தது.

தமிழர்களுக்கு நடுவில் சிங்களவர்களும் அங்கு குடியமர்த்தப்பட்டார்கள்.

பன்குளத்தில் நடுத்தர வசதி வாய்ப்புக்களைக் கொண்ட குடும்பமொன்றைச் சேர்ந்தவள்தான் ஜஸ்மின். அப்பா, அம்மா, அக்கா, அண்ணா என்ற சிறிய வட்டத்தினுள் அவள் ஒரு சிறுமி. வீடு அழகான கிராமத்தின் வீதிகள், வயல்கள் எங்கள் சொந்த ஊரில் நாங்கள் வாழ்கின்றோம். இந்த வாழ்வு நிரந்தரமானதென்றுதான் அங்கு எல்லோரும் நினைத்தார்கள்.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழு. இலங்கை முழுமைக்குமான தேர்தல் முடிவுற்று ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு கட்டிலேறி இருந்தது. தமிழர்கள் தங்கள் தேசம் சிறீலங்காவிலிருந்து விலகிச் செல்வதற்காக வாக்களித்திருந்தார்கள்.

தமிழர்களின் ஒன்றிணைவைக் கண்ட சிங்கள ஆட்சியாளர்கள் சினம் கொண்டார்கள்.

நள்ளிரவு பன்குளம் கிராமம் தீப்பற்றி எரிந்தது. நெருப்பினூடாக சிங்களக் காடையர்கள் தமிழர்கள் மீது பாய்ந்தனர். அப்போதெல்லாம் ஜஸ்மினுக்கு நான்கு வயதுதான் நிறைந்திருந்தது.

கிராமம் தீப்பற்றி எரிந்ததும் அவளை அணைத்தபடி வயல்களிலும், காடுகளிலும் அம்மா ஓடியதும் அவளுக்கு சிலகாலம் நினைவலைகளில் நின்றன. பின்பு மறந்து போனாள்.

எண்பத்தி மூன்று. அப்போது ஜஸ்மினுக்கு பத்து வயது. தந்தையை இழந்த பின், அவர்கள் நால்வரையும் வளர்க்க அம்மா போராடிக்கொண்டிருந்த காலம்.

அன்றும் அப்படித்தான். இரவு வானொலிச் செய்தியைத் தொடர்ந்து பன்குளம் சந்தியின் மத்தியில் தமிழர் கடைகளில் தீ எழுந்தது.

சிங்களக் காடையர்களின் வெறிக் கூச்சல்கள்.. தமிழ் மக்களின் அவலக்குரல். பன்குளம் கிராமத்தில் படர்ந்தது. இளைஞர்களில் சிலர் எதிர்த்தனர்.

ஆனால், காடையரின் துணைக்கு அரச காவலர்களும். தமிழர்களின் இரத்தம் எங்கும் சிந்தியது.

அம்மா ஜஸ்மினையும் இழுத்துக் கொண்டு காட்டுக்குள் ஓடினாள். பசியுடனும் பட்டினியுடனும் நாட்கள் கடந்தன. மீண்டும் கிராமத்திற்கு வந்தபோது எங்கும் சாம்பல் மேடுகள். பலரை அந்த மண் பறிகொடுத்திருந்தது.

ஜஸ்மின் சிறுமி. அவளுக்கு எதுவும் விளங்கவில்லை. ஆனால், சிங்களவர்கள், சிங்கள அரசின் காவலர்கள் என்றால் வெறுப்பும், கோபமும் அந்த சின்ன வயதிலே மனதில் குடிகொண்டு விட்டது.

எண்பத்தி ஆறு. இப்போது ஜஸ்மினுக்கு பதின்மூன்று வயது. பன்குளத்தில் சிங்களவரின் தொகை பெருகியிருந்தது. தமிழரின் நிலங்களும் வயல்களும் அடாத்தாகப் பறிக்கப்பட்டிருந்தன. அவை, இப்போது சிங்களவருக்கு சொந்தமாகி இருந்தன.
இம்முறை தமிழர்கள் மீது சிங்களவர் பாய்ந்து ஓய்ந்த பொழுது ஜஸ்மின் நிலைமைகளை ஓரளவு புரிந்து கொண்டாள்.

சிந்தப்படும் இரத்தத்தினதும் கண்ணீரினதும் பெறுமதி அவளுக்கு நன்றாகவே விளங்கியது. அந்த மண்ணில் தமிழர்களின் வாழ்வு நிச்சயமற்றதொன்றாகிப் போனது. சிங்களவர் சினங்கொள்ளும் போதெல்லாம் தமிழர்கள் அழிந்தனர்.

இதற்கிடையில் ஜஸ்மினின் அண்ணன் புலிகளுடன் இணைந்து கொண்டான். அண்ணனை சில நிமிடம் காணாது விட்டாலும் தவிக்கும் அம்மா அந்தச் செய்தியை கேட்ட பின்பும் அமைதியாக இருந்தாள். சொல்லப் போனால், அவன் சென்றதை அவளும் விரும்பினாள்.

அவர்கள் வாழ்வதாக இருந்தால் [illegible] போராடியே வேண்டி வரும் என்பதை அம்மா அனுபவத்தில் தெரிந்திருந்தாள்.
அழிவுகள் அடாவடித்தனங்கள் இறுதியாக பன்குளத்திலிருந்து தமிழ் மக்கள் ஒரேயடியாக விரட்டப்பட்டனர் :

ஜஸ்மின் குடும்பத்தினருடன் ஆலங்கேணி கிராமத்தில் தங்கி இருந்தாள் :

1990 இந்தியப்படை வெளியேறி சில நாட்கள் கடந்திருந்தன :

சிங்கள அரசு பேச்சு வார்த்தை என்று நாடகமாடிக் கொண்டிருந்தது. தமிழர்களின் சுதந்திர வாழ்வுக்கு தாயகத்தின் விடுதலை அவசியமானது என்பதை ஜஸ்மின் உணர்ந்து கொண்டாள். அவளும், அவளின் தோழிகளில் சிலரும் கிராமத்திலிருந்து புறப்பட்டார்கள்.

ஜஸ்மின் அவளின் கைகளில் தேசத்தை மீட்பதற்கான ஆயுதம். அவளும், அவளது கிராமத்தவர்களும் கண்டு விட்டு ஓடிய 'அரச காவலர்களின் கைகளில் இருந்த ஆயுதம்' இன்று அவளின் கைகளிலும் இருந்தது.

களங்களில் அவள் வீரமுடன் போரிட்டாள். சண்டை நடைபெறும் ஒவ்வொரு களத்திற்கும் போகவேண்டும் என்று அவாவி நின்றாள். சிறுவயது தொடக்கம் சிங்களவர்களின் அட்டூழியங்களையும், அடாவடித்தனங்க


வீரவேங்கை
ஜஸ்மின்

ளையும் காலத்திற்குக் காலம் அனுபவித்த அவளுக்குள் கடினமான போராட்ட வாழ்க்கையை இலகுவாக எடுக்கும் மனவுறுதி குடிகொண்டு விட்டது. அதனால் தான், முகாமிலும் சண்டைகளின் போதும் அவளால் சிரித்துக் கொண்டு உலாவ முடிந்தது.

ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கையை புலிகள் தொடங்கிய போது, அதில் ஜஸ்மினும் ஒருத்தியாகக் கலந்து கொண்டாள்.
வெவ்வேறு முனைகளால் ஆனையிறவு தளம் மீதான தாக்குதல்கள் ஆரம்பமாகின. தேவைப்படும் போதெல்லாம் ஜஸ்மினின் துப்பாக்கியும் எதிரிகளை அகற்றப் போராடியது.

அதே நேரம் திருகோணமலை காட்டுப் பகுதிக்குள் நடந்துகொண்டிருந்த புலிகளின் ஒரு அணி மீது இராணுவத்தினர் பதுங்கி இருந்து தாக்கினார்கள்.

ஜஸ்மினின் அண்ணன் சபேசன் அதில் காயமடைந்திருந்தான். சில நாட்களின் பின்பு யாழ். மாவட்டத்தின் ஓர் வைத்திய சாலையில் அவன் சேர்க்கப்பட்டிருந்தான். அவனைப் பார்ப்பதற்காக வன்னிப் பகுதியில் ஏதோ ஓர் அகதிமுகாமில் தங்கியிருந்த அம்மா வந்திருந்தாள்.

மகளைப் பார்த்த பின் மகனைப் பார்க்க அவள் விரும்பினாள். சண்டை கடுமையாக நடந்து கொண்டிருந்தது. தாய் நிலத்தை காக்கும் போரிலிருந்து சிறு பொழுதென்றாலும் விலகிவர ஜஸ்மினால் முடியவில்லை.

உணவற்று, உறக்கமற்ற நிலையில் ரவை மழைக்குள் நின்று அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஜஸ்மின் வழமை போல் சிரித்தாள். மகிழ்ச்சியாக இருந்தாள். எதிரிகளைக் கண்ட போது மட்டும் ஆவேசத்துடன் போரிட்டாள்.

மகளைப் பார்த்து விட்டு திரும்பிய தாய் அகதி முகாம் வாசலில் காலடி வைத்த பொழுது அவளுக்கு துயரம் நிறைந்த அந்தச் செய்தி கிடைத்தது.

ஜஸ்மின் வீரச்சாவடைந்து விட்டாள். மகளின் இழப்பு அம்மாவின் இதயத்தை சோகமாக அழுத்தினாலும் ஜஸ்மினின் உன்னதமான வாழ்வை நினைத்து அவளால் அழ முடியவில்லை. ஆனையிறவின் உப்புக் காற்று அவளின் வீரம் நிறைந்த வரலாற்றை என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் என்பது அம்மாவுக்கு நன்றாகவே தெரியும். ■

— தமிழன்

# ஒரு சந்ததியின் பிரச்சினையல்ல

விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்கும் இராணுவ யுக்திகள் மிகவும் முன்னேற்றகரமானவை. இராணுவ ஆய்வாளர்களுக்கு அதிர்ச்சியை அளிக்கக் கூடியவை. ஆனால், போரில் கிடைக்கும் வெற்றிகளுக்குத் தனியாக இராணுவத் தந்திரோபாயங்கள் மட்டும் காரணமல்ல. விடுதலைப் புலிகளின் இலட்சியப்பற்றும் மன உறுதியும் சேர்ந்தே வெற்றியை உறுதிப்படுத்துகின்றன. இதுவே சிங்கள இராணுவத்துடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த போராளிகளையும் இராணுவத் தளபாடங்களையும் வைத்துக்கொண்டு விடுதலைப் புலிகளால் உயர்வான சாதனைகள் பலவற்றைச் சாதிக்க முடிகின்றது. சிறீலங்கா இராணுவத்தை, தமது குறிக்கோள்கள் எய்த முடியாதபடி பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றன.

இந்த வகையிலேயே, இப்போது மன்னார்த் தீவில் இடம்பெறும் தாக்குதல்களும் உள்ளன. மன்னார்த்தீவு நாலாபுறமும் கடலால் சூழப்பட்டதோடு, பிரதான நிலப்பரப்பில் இருந்து மன்னார்த் தீவை தொடுக்கும் வீதியும் இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டிலேயே இருப்பதாக சிறீலங்கா இராணுவம் தெரிவித்துவந்தது. ஆனால், அண்மையில் மன்னார்த் தீவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பல தாக்குதல்கள் மன்னார்த்தீவு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. மறு வழமாகக் கூறின், விடுதலைப் புலிகளின் இத்தாக்குதல்கள் தீவை இராணுவத்தினரால் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியுமா? என்ற வினாவை எழுப்பியுள்ளது என்றும் தெரிவிக்கலாம்.

மன்னார்த்தீவில், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதல்கள் ஒப்பீட்டு ரீதியில் சிறிய தாக்குதல்களாக இருப்பினும், இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பின் அடிப்படையில் இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டவை என்பதே முக்கியமானதாகும். இத்தாக்குதலின் தாக்கம் மன்னார் தீவை இராணுவம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க நடைமுறைப்படுத்திவரும் திட்டத்தினை மீள்பரிசீலனை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தை இராணுவத்திற்கு ஏற்படுத்தியுள்ளது எனக் கூறுவதில் தவறில்லை.

ஆனால், இது விடுதலைப் புலிகளைப் பொறுத்து புதியதொன்றல்ல. அவர்களின் பல்வேறு சாதனைகளில் இதுவும் ஒன்று. ஆனால், பெரும் ஆட்பலத்துடனும் ஆயுத பலத்துடனும் மோதலுக்குத் தயாராக உள்ள இராணுவத்தின் சில பகுதிகளில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் சில தாக்குதல்களால் இராணுவத் திட்டங்களையே மீள்பரிசீலனை செய்ய வைக்கும் நிலை உருவாக்கப்படுகின்றது. இந்நிலையே இன்று மன்னாரிலும் உருவாகியுள்ளது. இது இராணுவத்தைப் பொறுத்து பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும்.

ஆனால், விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் இவ்வாறான தாக்குதல் குறித்தும், அவற்றின் சிறப்புக் குறித்தும், விடுதலைப் புலிகளுடன் மோதிய சிறீலங்கா, இந்தியத் இராணுவத் தலைமைகளே வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர். தற்போது அரசியல்வாதிகளும் விடுதலைப் புலிகளின் அந்த [illegible] பேசத் தொடங்கியுள்ளனர்.

அண்மையில், சிறீலங்கா பாராளுமன்றத்தில் விடுதலைப் புலிகள் பற்றி பிரஸ்தாபித்த அனுரா பண்டாரநாயக்கா விடுதலைப் புலிகள் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எந்த மாதிரியும் தாக்குதல்கள் நடத்தக்கூடியவர்கள் எனக் குறிப்பிட்டிருந்தார். இவர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது நிலைப்பாட்டை வெளிக்காட்டவே இதனைத் தெரிவித்திருப்பினும், புலிகளின் பலம் பற்றிக் கூறாமல் அவரால் கடந்து செல்ல இயலவில்லை.

ஆனால், இன்று சிறீலங்கா அரசாங்கமும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணாது இராணுவத் தீர்வொன்றை காணமுற்படுவது நிலைமையைச் சரியாகக் கணிப்பிடாமையினால் உருவானதொரு நிலை அல்ல. இதே கட்சி தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க வேண்டுமானால் யுத்தத்தை தொடர்ந்து நடத்தவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் காரணத்தினாலேயே எழுந்ததாகும்.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது தற்போதைக்குச் சாத்தியமானதொன்றல்ல. ஆனால், இனப்பிரச்சினையை இராணுவ அணுகுமுறையால் தீர்த்துவைக்க அரசாங்கம் விரும்புமானால், அதில் ஒருபோதும் வெற்றிபெறப் போவதில்லை. ஏனெனில், இது ஒருவரின் அல்லது ஒரு சந்ததியின் பிரச்சினையல்ல. ஒரு இனத்தின், அதுவும் மண்ணுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இந்தே சிய இனம் சுதந்திரம் பெறும் வரை இப்போர் தொடர்ந்து நடைபெறும். இவ்வாறான படிப்பினைகள் உலகின் பல பாகங்களிலும் போதியளவுண்டு. ■

-நன்றி: ஈழநாதம்-

# சிறு கதை

# எழுந்தான்

பு.சத்தியமூர்த்தி
தமிழீழம்

பாடசாலை மணி அடித்து ஓய்ந்தது. அவிழ்ந்த நெல்லிக்காய் மூடைபோல மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறுகின்றனர். சத்தியன் மிதி வண்டியை உருட்டியபடி வெளியே வந்தான்.

கே. கே. எஸ். வீதியூடாகப்போய், கோட்டையைக் கடந்து பண்ணைத் தாம்போதியின் இருமருங்கும் பார்த்தபடியே மிதிவண்டியை மிதித்தான். மதகுகளின் அருகில் மீன்குஞ்சுகள் ஆயிரக்கணக்கில் நீந்திக் கொண்டிருந்தன. சற்றுத்தூரத்தில் "களங்கண்டி" வலையில் கருமையும் வெண்மையுமாய் கடற்பறவைகள் மீன்தின்னுவதற்காகக் கூடியிருந்து சிறகடித்தன. கடலைத் தழுவிவரும் காற்று சுகமாக உடலைத் தழுவிச் சென்றது. ஏழுகண்பாலத்தடியில் மீனவர்கள் வீச்சுவலையை வீசி மீன்பிடித்துக் கொண்டிருக்க, இளைஞர்கள் சிலர் கடலில் நீந்தியவாறே தண்ணீரால் ஒருவருக்கொருவர் எற்றிக் கூச்சலிட்டுச் சிரித்தனர்.

'றேடியோ சிலோன்' வெளியினுள் புகும்போது தெருவோரம் அமர்ந்திருக்கும் வழிப்பிள்ளையாரைக் கும்பிட்டுவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தான். வெளியில் ஏராளமான மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுவர்களோ ஈச்சம்பழம் பிடுங்கித் தின்றபடி. கண்ணுக்கெட்டிய தூரத்தில் "பிசறிஸ் பக்ரறி"யின் புகை போக்கியால் கருமேகமென பெரும் புகைத்திரள் வானத்தில் பரவிக் கொண்டிருந்தது.

வரி வயல்வெளியைக் கடந்து செல்லும்போது சூடடிப்பதற்காகக் குவிக்கப்பட்டிருந்த நெற்போர்களைக் கண்ட சத்தியனுக்கு மனம் பூரித்தது.

அடர்ந்து, பரந்த பனை வெளிகளிற்கூடாக குடிமனைக்குள் புகுந்து பிள்ளையார் கோயிலடியில் இருக்கும் தனது வீட்டிற்குள் வந்தான். முற்றத்தில், அப்பா ஆக்ரோசத்துடன் கத்தியபடி நிற்பதைக்கண்டவனுக்கு திக்கென்றது. எதிர் வளவினுள் அவனது மாமாவும் வேறு சிலரும் அவ்வாறே. கோபத்தால் கம்மிய குரலில் அப்பா கத்துகிறார். "என்ரை உயிருள்ளவரை இந்த நிலத்தில் ஒரு துண்டை எண்டாலும் நீ பிடிக்க விடமாட்டன்."

சத்தியனும் அவனது மாமாவினதும் காணிகள் அருகருகே உள்ளன. வேலியை மாமாதான் அடைப்பது வழக்கம். மாமா வேலி அடைக்கும் போது கதிகால்களை சற்று வெளிப்புறமாக நட்டு அடைத்துவிடுவார். இதை, அப்பா நயமாக சொல்லித் தடுக்க முற்பட மாமா பயமுறுத்தி அவரை விரட்டிவிடுவார். இது அப்பாவுக்கு சினத்தைக் கிளறவே உருத்திரமூர்த்தியாக முற்றத்தில் இன்று நிற்கிறார்.

• • •

1990 யூன் யுத்தம் வெடித்தது. சத்தியன் பாடசாலைக்குச் செல்லவில்லை. தீவுகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் பிரதான பாதை துண்டிக்கப்பட்டது. அராலியால் பயணம். பாடசாலைகள், அலுவலகங்கள் எதுவுமே இயங்கவில்லை.

தினமும் இயந்திரத் தும்பிகளும், இயந்திரப் பறவைகளும் எந்த வேளையிலும் எச்சமிட்டுத் திரிந்தன. ஒருநாள் பட்.. படீர் என பெரும் ஓசைகள் தென் திசையில் கேட்கத் தொடங்கின. "நெருஞ்சி முனையில் ஆமி இறங்கிவிட்டானாம்." ஊரவர்களிடையே பதட்டம். உயிருக்கான நடுக்கம். இப்போது சத்தியனது மாமாவும், அப்பாவும் வேலிக்கு மேலால் பதற்றத்துடன் கதைக்கிறார்கள்; இருவரது முகங்களும் வெளுத்திருக்க,

அதிகாலை இரண்டு மணி. கடலிலிருந்து வாணங்கள் வருவதுபோல மழையெனக் குண்டுகள் ஊருக்குள் விழுந்து வெடிக்கத் தொடங்கின. அனைவரும் உயிரைக் கையில் பிடித்தபடி பங்கருக்குள் பதுங்கிக் கொள்ள, அம்மா எல்லாக் கடவுள்களையும் அழைத்துக் கும்பிடுகிறாள். வானில் வல்லூறுகளும், தும்பிகளும் தம் கீதத்தைப் பாடத்தொடங்கின. மரங்கள் முறிய, நிலம் அதிர, வீடுகள் சரிய எல்லோரும் கோயிலை நோக்கிப் படையெடுக்கின்றனர். கோயிலுக்கு மேல் தும்பி ஒன்று தாழப்பறந்தபடியே சடசடக்க கோயிலுக்குள் சனத்திரளின் கூக்குரல்கள், அலறல்கள்.



சத்தியனின் சிந்தனைகள் ஊரில் இருக்கும் போராளிகளையே சுற்றி வந்தது. இவ்வளவு குண்டுகளுக்கும் நடுவில் என்னதான் செய்கிறார்களோ? அவனுடன் ஒன்றாகப் படித்து, உண்டு, உறங்கி, விளையாடிய பலரும் அவ்வகையில்...

"டுடொம்..." திடீரென மிக அருகில் பெரும் ஓசை. காதுகள் அடைத்து உடல் பதறப் புகையும், கந்தக நெடியும் எங்கும் பரவுகிறது.

"கோயில் வீதியில் விழுந்து வெடித்தது." அனைவரும் சுவர்களோடு ஒருவருக்குள் ஒருவர் பதுங்கியபடி.

பச்சை உடைகளும், பயங்கர முகங்களும் கோயிலுக்குள் பிரசன்னமாக எங்கும் விபரீதமான அமைதி. இராணுவச் சப்பாத்துக்களின் ஒலியும் சிங்கள உறுமல்களும் துப்பாக்கிகளை அசைக்கும் ஒலியையும் தவிர வேறு சத்தமே கிடையாது. குழந்தைகள் கூட மூச்சின்றி இருக்க அனைவரும் உயிரைக் கையில் பிடித்தபடி கோயிலுக்கு முன் அநுமான் வாலென நைலோன் கயிற்றால் கைகள் பிணைக்கப்பட்ட இளைஞர்கள் வரிசை. பரிதாபமான முகங்கள். சட்டைகள் கிழிந்து தொங்க இரத்தக் கோடுகளுடன் வெளியே ஒருவன், பெரிய நைலோன் கயிற்றுச் சுருளுடன் நின்றான். பாசக் கயிற்றுடன் நிற்கும் யமகிங்கரனோ...?

பிள்ளைகள் அம்மாவை நெருக்கி அவளுடன் ஒண்டியிருக்க தாம் அவர்களை நடுங்கும் கரங்களால் அணைத்துக் கொண்டிருந்தாள். அனைவரும் இதே நிலையில். பச்சைத் தலைகள் தாடியுடன். பின் தொடரும் ஏவல் பேய்களுடன் வருகின்றன. சுழன்று உருளும் ஆந்தை விழிகள் இளைஞர்களின் முன்னே நின்று முகத்திற்கு எதிரே "ம்" என்ற உறுமலுடன் கையை சுண்டுகிறான். அவர்கள் நடுங்கியபடி எழுந்துநிற்க தாய்மார் துப்பாக்கி முனையில் அமர்த்தப்படுகின்றனர். அதையும் மீறுபவர்கள் ஆக்ரோசமாகத் தாக்கப்படுகின்றனர். இளைஞர்கள் அவர்களால் அழைத்துச் செல்லப்பட எங்கும் ஓலம். வெடித்துடிப்பு இரத்தங்களை இழந்த பரிதவிப்பு.

• • •

"அங்கை பாரணை அம்மா" சத்தியன் தாயைச் சுரண்ட அங்கு சற்றுமுன் அழைத்துச் செல்லப்பட்ட சிலர் இரத்தவிளாறாக ரத்தம் சொட்டச் சொட்ட நிறுத்தப்பட்டிருக்க அம்மா தலையிலே கையை வைத்துக் கதறுகிறாள். குழந்தைகள் பசியால் அலறின. சில மணித்துளிகளின் பின் களைத்துச் சோர்ந்து தாய்மாரின் மடியில் சுருண்டு கிடக்கின்றன.

இரண்டாம் நாள் இரவு ஒருவன் கொச்சைத் தமிழில் "நாளைக்கு காலை நீங்க எல்லோரும் இந்த கமத்தை விட்டு போறது. ஒரு மணிதாங் நாங் தாறது" எனக்கூறிச் சென்றான்.

விடிந்தது. சத்தியன் தனது வீட்டுக்குப் போனான். அங்கே ஒரு மண்மேடு சிதலமடைந்து கிடக்கின்றது. அவனுக்கு இந்த வரிகள் மனதில் ஓடின.

'மண்மேடாய்க் கிடக்கின்ற வீடுகளைப் பாரும் - இது முன்னாளில் தமிழர்களின் குடியிருப்பு ஆகும்.'

நேற்று முன்தினம் வரை அது சத்தியனின் குடியிருப்பு. இன்று மண்மேடு. உடுத்த துணியுடன் காலுக்கடியாகவே பரவைக் கடலைக் கடந்து போனால் அங்கும் அதே கொடூர முகங்கள். கூடவே சில கோடரிக் காம்புகள். ஒரு ஈச்சம்புதரின் ஓரத்தில் நீட்டி நிமிர்ந்து வானத்தைப் பார்த்தபடி ஒருவர். அவர்மேல் காகம் அமர்ந்து...

ஓ... சொந்த ஊரை விட்டு வந்து தமக்கு தஞ்சமென அடுத்த ஊர் அம்மன் கோயிலில் அடைந்து அமர்ந்தனர். மூன்று நாள் பட்டினி. வயிற்றைக்கரந்துகிறது.

• • •

இரவு. மூன்று நாள் பட்டினிக்கு கஞ்சி குடித்த அசதியில் அம்மா அடித்துப் போட்டதுபோல் தூங்கிவிட்டாள். அப்பாவும் அதேபோல. சத்தியனின் உடல் தளர்ந்திருந்தாலும் மனம் உறங்க மறுத்தது. சிந்தனை வேகமாகச் சுழன்றது. அவனோடு ஒன்றாகப் படித்து விளையாடி வளர்ந்தவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட விதமும், சற்று நேரத்தில் ரத்தம் சொட்டச் சொட்ட கொண்டுவந்து நிறுத்தப்பட்ட முகங்களும், பசியால் சுருண்டு விழுந்த குழந்தைகளும், "என்ரை உயிருள்ளவரை இந்த நிலத்தில் ஒரு துண்டையெண்டாலும் நீ பிடிக்க விடமாட்டன்" என்று மாமாவுக்கு அப்பா சொன்ன சொற்களும். ஆனால் இன்று ஒரு மணி நேரத்தில் தங்கள் மண் பறிபோன விதமும் ஒன்றன் பின் ஒன்றாக. அவனது வீடு, அவன் பிறந்து வளர்ந்து விளையாடிய வீடு இன்று மண்மேடாக... அவனால் தாங்க முடியவில்லை. அசதியுடன் எழுந்தான். அவ்வளவு குண்டுகளுக்கும் இடையில் திடமான மன உறுதியுடன் நிற்கும் போராளிகளின் நினைவு வந்தது. நடக்கத் தொடங்கினான். ■

## மூச்சு

'இப்படிக் கத்துகிறீர்களே. உங்கள் குரலைக் கேட்டுப் பாம்பு உங்களைப் பிடித்துவிட்டால் உங்கள் நிலை என்ன ஆவது?'

தவளைகள் சிரித்தன.

'நாங்கள் கொஞ்சமும் கவலைப்படமாட்டோம்' என்றது கூட்டத்தில் ஒருதவளை.

இன்னொரு தவளை சொன்னது-

'மூச்சை இழக்கலாம்
பேச்சை இழக்கலாமோ?' ■

# மேற்கு சகாரா விடுதலைப் போராட்டம்




**மேற்கு சகாராவிற்கும் அதனைப் பதினெட்டு ஆண்டுகளாக ஆக்கிரமித்திருக்கும் மொரோக்கோவுக்கும் இடையே உருவான குடியேற்றத்திட்டத்தையும், போர் நிறுத்தத்தையும் மொரோக்கோ தவறிவிட்டது. சகாரா மக்கள் மொரோக்கோ இராணுவத்தால் சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டு நீதி விசாரணை எதுவுமின்றி பலகாலமாக -சிலர் 16 ஆண்டுகளுக்கும் மேலாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அறுபத்திநான்கு நாடுகளால் அங்கீகரிக்கப் பட்ட மேற்கு சகாராவிற்கு நீதி கிடைக்கும் வகையில் வலுவான எதனையும் செய்ய முடியாத நிலையில் ஐக்கிய நாடுகள் சபை இன்னமும் இருக்கின்றது. மேற்கு சகாராவின் விடுதலைப் போராட்ட வரலாற்றை அறிந்து கொள்வதற்காக 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையை இங்கு தருகின்றோம்.**

**வடமேற்கு ஆபிரிக்காவில் காலனித்துவ ஆதிக்கத்திடமிருந்தும் அண்டை அமைப்பாளர்களிடமிருந்தும் அடிமைச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தனது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டியவாறு புதிய நாடொன்று உருவாகிவருகின்றது. அதுதான் மேற்கு சகாரா. கஷ்டமும், துயரமும் நிறைந்த சூழ்நிலையில், பாலை மணலில் விடுதலைக் கனலை எழுப்பி கெரில்லாப் போர் முறைமூலம் வெற்றிகளைக்குவித்து வரும் சகாரன் மக்களின் தியாகம் நிறைந்த போராட்டம், வரலாறு காணாத அதிசயமாகும். பூரண விடுதலையை நோக்கி வீறுநடைபோடும் சகாரன் மக்கள் விடுதலை என்னும் பாலைவனச் சோலையை விரைவில் அடைவது நிச்சயம்.**

வடமேற்கு ஆபிரிக்காவில் உள்ள சகாராப் பாலைவனப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு நாடுதான் மேற்கு சகாரா எனப் படும் சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசாகும். இன்று 63 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மேற்கு சகாராவின் நிர்ணயிக்கப் பட்டுள்ள பிரதேசம் 2,86,000 ச.கி.மீற்றர் பரப்பளவாகும். இக் குடியரசு மேற்கு எல்லையாக அட்லாண்டிக் சமுத்திரத்தையும், வடக்கு எல்லையாக மொரோக்கோவையும், தெற்கு கிழக்கு எல்லைகளாக மொரிட்டானியாவையும் கொண்டுள்ளது. மேற்கு சகாராவின் பெரும்பகுதி பாலைவனப் பிரதேசமாக இருக்கின்றபோதிலும், இங்கு காணப் படும் கனிவளங்கள் கணக்கிலடங்காதவையாகும். "உலகத்தின் பொஸ்பேற் பொக்கிசம்" என்று வர்ணிக்கப்படும் இப்பிரதேசத்தில்தான் உலகத்தின் மொத்த பொஸ்பேற் உற்பத்தியின் 50% பெறப்படுகின்றது. இங்கு மீன் வளமும் நிறைந்திருக்கின்றது. சுமார் 1000 கி.மீற்றர் நீளமுள்ள கடற்கரைப் பிரதேசத்தைக் கொண்டுள்ள மேற்கு சகாராவில் வருடாந்தம் பிடிக்கப்படும் மீனின் அளவு 2 மில்லியன் தொன்னாகும். மேலும் சிறியளவில் இரும்பு, செம்பு, டைட்டேனியம் போன்ற கனிமங்களும் காணப்படுகின்றன. இங்கு வாழ்கின்ற மக்கள் "சகாரவிஸ்" அல்லது "சகாரன்கள்" என அழைக்கப்படுகின்றனர். இனகலாச்சார ரீதியாக சகார விஸ் மக்களை ஆராய்ந்தால் இவர்கள் "பெய்டன்" (BEIDAN) அல்லது மூர்ஸ் (MOORS) இனமக்களின் ஒரு குழுவினராவர். இக்குழு (Mixed Berber) நாடோடிகளினதும், அரபு மற்றும் கறுப்பு ஆபிரிக்கர்களினதும் வழித் தோன்றல்களாவர். இவர்கள் கசானியா (Hassaniya) எனப்படும் அரபு மொழியைப் பேசுகிறார்கள். இச்சமூகத்திற்குள் பல்வேறுபட்ட சாதிப்பிரிவுகளும் காணப்படுகின்றன.

### ஸ்பானிய காலனியாதிக்கம்

ஸ்பெயினின் காலனியாதிக்கத்திற்குள் சிக்கிக் கொண்ட சகார மக்கள் நீண்ட காலமாக (1976 வரை) ஸ்பானியரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே தமது வாழ்க்கையைத் தொடர்ந்தனர். கல்வியறிவு குறைந்த, வெளியுலகம் தெரியாத, மிக மோசமான நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த இம்மக்களை ஸ்பானிய காலனித்துவம் படுமோசமான சுரண்டலுக்குள்ளாக்கியது. தமது சொந்தப் பிரதேசத்திலேயே தமது உரிமைகளை, செல்வங்களை அனுபவிக்கமுடியாது தமது அபிலாசைகளை வெளிக்காட்ட முடியாது, அன்னியருக்கு அடிமைகளாக ஸ்பானிய காலனித்துவத்துக்குள் கட்டுண்டு கிடந்தார்கள். சகாரன் மக்கள் நீண்ட கால அடிமை வாழ்க்கையின் பின்னரேயே, மிகவும் காலம் தாழ்த்தியே தமது சுதந்திரத்திற்கான தேவையை உணர ஆரம்பித்தனர். குறிப்பாக 1960 களின் பின்னரேயே அங்கொன்றும், இங்கொன்றுமாக ஸ்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எதிர்ப்புகள் தோன்றின.



1975 ஆம் ஆண்டு கசன் நடத்திய 'கிறீன் மார்ச்'

### முதல் தேசிய விடுதலை இயக்கம்

பலவருடகால போராட்டங்களினதும், எதிர்ப்புக்களினதும் பின்னணியில் 1973 ம் ஆண்டு மே மாதம் 10 ம் திகதி பொலிசாறியோ முன்னணி (Polisario Front) என்ற சகாரன் மக்களின் தேசிய விடுதலை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் இயக்கமான இப் பொலிசாறியோ முன்னணி ஸ்பானியரிடமிருந்து மேற்கு சகாராவை விடுவித்துக் கொள்வதற்காக ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டது. பொலிசாறியோ முன்னணி அமைக்கப்பட்ட 10 வது நாளிலேயே ஸ்பானியருக்கு எதிரான ஆயுத நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எல் ஜங்கா (El Janga) என்ற இடத்தில் உள்ள இராணுவப் படைக்கு எதிராக இத் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் பலம் பொருந்திய ஸ்பானிய இராணுவத்தால் இந் நடவடிக்கை முறியடிக்கப்பட்டது. பொலிசாறியோவின் முதல் நடவடிக்கை தோல்வியுற்றபோதிலும் சகாராவின் பல்வேறு பாகங்களிலும் ஸ்பானிய எதிர்ப்புக்கள் அதிகரித்தன. விடுதலை முன்னணிக்கு மக்களின் ஆதரவு பெருகியது. 1975 வரை முன்னணி ஸ்பானிய ஆதிக்கத்திற்கு எதிராக வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதலை நடத்தியது. இதற்குத் தேவையான ஆயுதங்கள் லிபியாவினால் வழங்கப்பட்டன. இதனால், சகாராவில் ஸ்பானிய ஆதிக்கம் ஆட்டம் காணத் தொடங்கியது. மேலும் 1975ல் மேற்கு சகாராவிற்கு பயணம் செய்த ஐக்கிய நாடுகள் குழு பொலிசாறியோவின் சுதந்திரப் போராட்டத்தை நியாயப் படுத்தியதுடன் [illegible] பொலிசாறியோ முன்னணிக்கு [illegible] வழங்குவதாகக் கூறியது. இத்னையடுத்து ஸ்பானியர் மேற்கு சகாராவை விட்டு வெளியேறவேண்டிய நிலை உருவானது.

### புதிய ஆக்கிரமிப்பாளர்கள்

மேற்கு சகாராவில் ஸ்பானிய ஆதிக்கத்திற்கு ஏற்பட்ட இக்கட்டான நிலையைத் தொடர்ந்து மேற்கு சகாராவின் எல்லையோர நாடுகளான மொரோக்கோவும், மொரிட்டானியாவும் வளம் மிக்க சகாராவை ஆக்கிரமிக்கும் இரகசிய சூழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டன. இதன் ஒரு நடவடிக்கையாக 1975 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ம் திகதி மொரோக்கோ மன்னர் 2ம் கசனின் திட்டப்படி மொரோக்கோ மக்கள் மேற்கு சகாராவிற்குள் ஊடுருவுமாறு செய்யப்பட்டனர். இவ்வாறு பாதயாத்திரை (Green March) என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆக்கிரமிப்பு ஊடுருவலில் 3 இலட்சம் மொரோக்கோ மக்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக ஆயிரக்கணக்கான மொரோக்கோ றோயல் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப் பட்டனர். இந்தப் பாதயாத்திரையின் மூலம் மொரோக்கோ மேற்கு சகாராவின் மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றது. இச்சம்பவங்களையடுத்து மொரோக்கோத் துருப்புக்கள் தனது எல்லையோடு இருந்த மேற்கு சகாராவின் வட பிரதேசத்திற்குள் படிப்படியாக ஊடுருவி நிலைகொள்ள ஆரம்பித்தன. இதேபோல மேற்கு சகாராவின் தென்பகுதியை மொரிட்டானியத் துருப்புக்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கின. இவ்விரு நாடுகளினதும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஸ்பெயின் மறைமுகமாகத் தனது ஆதரவை வழங்கியது. இதனால் சுதந்திரத்திற்காகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொலிசாறியோ முன்னணிக்கு புதிய தாக்கங்களும் நெருக்கடிகளும் ஏற்பட்டன.

### மாட்றிட் முக்கூட்டு உடன்படிக்கை

மேலும் 1975 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் திகதி மேற்கு சகாரா சம்பந்தமாக ஸ்பெயினும், புதிய ஆக்கிரமிப்பாளர்களான மொரோக்கோவும் மொரிட்டானியாவும் மாட்றிட் நகரில் செய்து கொண்ட மாட்றிட் முக்கூட்டு உடன்படிக்கை புதிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு சாதகமாக அமைந்ததுடன் மொரோக்கோவும், மொரிட்டானியாவும் மேற்கு சகாராவை தம்மிடையே பங்கிடவும் வழிவகுத்தது. இவ்வுடன்படிக்கையில் மக்களின் உரிமைகளும், அபிலாசைகளும், விருப்பங்களும் புறக்கணிக்கப்பட்டன. இவ்வுடன்படிக்கையை அடுத்து மொரோக்கோவும், மொரிட்டானியாவும் மேற்கு சகாராவை பங்கிட ஆரம்பித்தன. ஸ்பானிய காலனித்துவம் தனது துருப்புக்களை அங்கிருந்து வாபஸ் பெறத் தொடங்கியது.

### சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசின் தோற்றம்

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொலிசாறியோ முன்னணி, ஸ்பானியத் துருப்புக்கள் வெளியேறத் தொடங்கியதும் 1976ம் ஆண்டு பெப்ரவரி 27ம் திகதி 266,000 ச.கி.மீற்றர் பரப்பளவுக்கு நிர்ணயிக்கப்பட்ட மேற்கு சகாராவை சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசாக (Saharan Arab Democratic Republic) பிரகடனப்படுத்தியது. சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசு தன்னாதிக்கமுடைய, சுதந்திரமான, இறைமையுடைய நாடு என அறிவித்த பொலிசாறியோ, சகாராவை அங்கீகரிக்குமாறு உலகநாடுகளிடம் வேண்டுகோள் விடுத்தது. மேற்கு சகாரா பிரகடனப்படுத்தப்பட்ட 1976ம் ஆண்டில் 10 உலக நாடுகள் அதனை அங்கீகரித்தன. S.A.D.R. இன் முதலாவது பிரதமராக முகமட் லாமின் உல்ட் அகமட் (Mohammad Lamine Ould Ahamad) தேர்ந்தெடுக்கப்பட்டார். 1976 மார்ச் 4ம் திகதி S.A.D.R. க்கான மந்திரி சபையும் அமைக்கப்பட்டது. ஸ்பெயினும் தனது துருப்புக்களை முற்றாக வாபஸ் பெற்றுக் கொண்டது. எனினும், சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசின் ஆட்சி நீடிக்கவில்லை.

### அண்டை நாடுகளின் படையெடுப்பு

மொரோக்கோவும், மொரிட்டானியாவும் மாட்றிட் உடன்படிக்கையைக் காரணம் காட்டி சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசு மீது படையெடுப்பை நடாத்தின. மொரோக்கோ தனது நாட்டுடன் இணைந்த மேற்கு சகாராவின் 2/3 பகுதியை (178,000 ச.கி.மீற்றர்) கைப்பற்றியது. அப்பிரதேசங்களில் இருந்த பழைய ஸ்பானிய தளங்களைத் தன்வசமாக்கிக் கொண்ட மொரோக்கோ றோயல் இராணுவம் அங்கிருந்துகொண்டு மேற்கு சகாராவிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதேபோல மொரிட்டானியாவும், மேற்கு சகாராவின் தென்பிரதேசத்தை ஆக்கிரமித்து அங்குள்ள பழைய ஸ்பானிய தளங்களை தன்வசமாக்கிக் கொண்டது. மேற்கு சகாராவின் 1/3 பகுதியை (100,000 ச.கி.மீற்றர்) மொரிட்டானியா தனது நாட்டுடன் இணைத்தது. சட்டவிரோதமான இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் திரண்டெழுந்த சகாரன் ஜனநாயகக் குடியரசின் மீதும், சகாரன் மக்கள் மீதும் புதிய ஆக்கிரமிப்பாளர்கள் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். குறிப்பாக மொரோக்கோவின் மோசமான நடவடிக்கைகளால் சகாரன் மக்களில் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டதுடன், ஆயிரக்கணக்கானோர் தமது வீடுகளை விட்டு வெளியேறி பாலைவனங்களில் புகலிடம் தேடினர். மொரோக்கோவின் விமானக் குண்டுத் தாக்குதல்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மேற்கு சகாராவின் முக்கிய நகரங்களான எல் அயூன் (ELAYOUN), சமாரா (S-AMARA) போன்ற இடங்களிலிருந்து பெருமளவு மக்கள் அகதிகளாக வெளியேறி அல்ஜீரியாவின் எல்லையோரமாக அமைந்திருந்த நகரங்களில் தஞ்சமடைந்தனர். எல் அயூனிலிருந்த சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசின் தலைமையகத்தை ஆக்கிரமிக்கப்படாத பிரதேசத்திற்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசின் செயற்பாடுகள் வலுவிழந்தன. எனினும் மேற்கு சகாரா ஆக்கிரமிக்கப்பட்டதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்த அல்ஜீரியா, பொலிசாறியோ முன்னணிக்கு தனது ஆதரவை வழங்கியது. பொலிசாறியோ முன்னணியின் இராணுவ அமைப்பான சகாரன் மக்கள் விடுதலை இராணுவத்திற்கு (SAHARAN PEOPLE'S LIBERATION ARMY) தளம், ஆயுதம், பயிற்சி, உணவு, எரிபொருள் போன்ற உதவிகளை அல்ஜீரியா வழங்கியது. இக்காலகட்டத்தில் சகாரன் மக்கள் விடுதலை இராணுவத்தில் 20,000 திற்கு மேற்பட்ட வீரர்கள் இருந்தனர்.

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# மேற்கு சகாரா ....



## பொலிசாரியோ பெண் கெரில்லாக்கள்

### பொலிசாரியோவின் தாக்குதல்

சகாரன் மக்கள் பாலைவனங்களிலும், அகதிமுகாம்களிலும் வாழவேண்டிய கடினநிலை ஏற்பட்டபோதிலும் புதிய ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான தமது விடுதலைப் போரிலிருந்து பின்வாங்கிவிடவில்லை. பதிலுக்கு சகாரன் மக்கள் மத்தியில் சுதந்திர உணர்வு அதிகரித்தது. 1976 ஜூன் 9ம் திகதி பொலிசாரியோவின் கெரில்லா அணியொன்று மொரிட்டானியாவின் தலைநகருக்குள் ஊடுருவி ஜனாதிபதி மாளிகை மீது பலமான தாக்குதலொன்றை மேற்கொண்டது. மேலும் தொடர்ச்சியாக பல இடங்களில் மொரிட்டானிய இராணுவத்திற்கு எதிராக, கெரில்லாத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கெரில்லாக்களால் ஏராளமான நாசவேலைகள் செய்யப்பட்டன. இந்நடவடிக்கைகளால் மொரிட்டானியாவில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டதுடன், மொரிட்டானியா அரசும் ஆட்டங்காணத் தொடங்கியது. 1979இல் மொரிட்டானியா அதிபர் மொக்தார் உல்ட்டட்டாவின் (M-oktar Ouldadah) ஆட்சி புரட்சிவாதிகளால் கவிழ்க்கப்பட்டு புதிய நிர்வாகம் மொரிட்டானிய ஆட்சிப்பொறுப்பை ஏற்றது. இப்புதிய நிர்வாகமும், பொலிசாரியோ முன்னணியும் செய்து கொண்ட ஓர் சமாதான உடன்பாட்டையடுத்து மேற்கு சகாராவில் ஆக்கிரமித்த பிரதேசத்திலிருந்து மொரிட்டானியா வெளியேறியது. இதேநேரம் 1979 இல் நடைபெற்ற 34 வது ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கூட்டத்தில் சகாரா மக்களின் சுயநிர்ணய உரிமையும், சுதந்திரமும் அவர்களின் மறுக்க முடியாத உரிமையென உறுதிப்படுத்தப்பட்டது.

### மொறோக்கோவுடன் போராட்டம்

மொரிட்டானியா தனது ஆக்கிரமிப்பை கைவிட்டபோதிலும், மொறோக்கோ தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையைக் கைவிடவில்லை. இதற்கு பிரதான காரணம், மேற்குசகாராவின் வளம்மிக்க பிரதேசங்கள் மொறோக்கோவின் ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் இருந்தமையே. மொரிட்டானியாவின் விலகல், பொலிசாறியோவின் போராட்டத்தை மொறோக்கோவிற்கு எதிராக ஒருமுகப்படுத்துவதற்கு சாதகமாக அமைந்தது. பொலிசாறியோ கெரில்லாக்களின் பெரும்பாலான நடவடிக்கைகள் நாசவேலைகளாகவே (SABOT-AGE) இருந்தன. எனினும் குறிப்பிடக்கூடியளவு மொறோக்கோத் துருப்புக்கள் பொலிசாறியோ கெரில்லாக்களின் தாக்குதலுக்குள்ளாகினர். இக்காரணங்களால் மொறோக்கோவுக்கு பெரும் லாபத்தை ஈட்டிக்கொடுத்த பொஸ்பேற் உற்பத்தி (இது மேற்கு சகாராவிலிருந்தே உற்பத்தியாக்கப்படுகிறது) படுமோசமாக வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியை சரிப்படுத்தவும் பொலிசாறியோவின் கெரில்லாத் தாக்குதல்களை முறியடிக்கவும், புதிய முயற்சியில் மொறோக்கோ இறங்கியது. இப்புதிய முயற்சியாக ஆக்கிரமிக்கப்பட்ட, வளம் மிக்க பிரதேசங்களைச் சுற்றி பெரும் மதில்கள் மண் அணைகளால் அமைக்கப்பட்டன.

1978 இல் ஆரம்பிக்கப்பட்ட மதில் அமைக்கும் வேலை 5 கட்டங்களாக 1985 வரை தொடர்ந்தது. மொத்தம் 25,000 கி.மீ நீளத்திற்கு மதில்கள் அமைக்கப்பட்டன. சுமார் 25 அடி உயரம் கொண்ட இந்த மதிலின் ஒவ்வொரு 5 கி.மீ தூரத்திலும் சக்திவாய்ந்த இயந்திரத்துப்பாக்கிகள் பொருத்தப்பட்டன. மதிலின் அருகிலுள்ள பிரதேசங்களில் தரைக்கண்ணிகள் புதைக்கப்பட்டன. 60 கி.மீற்றர் தூரத்திலேயே வரும் எதிரியை கண்டுபிடித்து விடக்கூடிய மின்னியக்க உபகரணங்கள் இம்மதில்களில் பொருத்தப்பட்டன. 1 இலட்சம் மொறோக்கோப் படைவீரர்கள் மதில் ஓரப்பகுதிகளில் காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மொறோக்கோ இம்மாதிரியான மதில் கட்டும் தந்திரத்தின்மூலம் மேற்கு சகாராப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டது. எனினும் 1981 ம் ஆண்டு அக்டோபர் மாதம் கெல்ற்றா சேம்மூர் (GUELTAZ-EMMUR) என்ற இடத்தில் மொறோக்கோ இராணுவத்திற்கும் பொலிசாறியோ முன்னணிக்கும் இடையில் இடம்பெற்ற சண்டையில் அதிநவீன இராணுவ தளபாடங்களையும், தந்திரோபாய வசதிகளையும் கொண்ட மொறோக்கோ இராணுவத்திற்கு பலத்த அடி கொடுக்கப்பட்டதுடன், ஒருவார காலத்திற்குள் மட்டும் மொறோக்கோவின் 4 விமானங்களும் ஒரு கெலிக்கப்டரும் சுட்டுவீழ்த்தப்பட்டன.

### ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் OAU

மொறோக்கோவுடனான போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டு, அதேவேளை அரசியல் ரீதியாகவும் தன்னை வளர்த்துக்கொண்டது. பொலிசாறியோவின் அரசியல் ரீதியான செயல்பாடுகள் சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசை ஏராளமான உலகநாடுகள் குறிப்பாக ஆபிரிக்க நாடுகள் அங்கீகரிக்கும்படி செய்ததுடன், ஆபிரிக்காவின் சக்திவாய்ந்த அமைப்பான ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தை (ORGANIZATION OF AFRICAN UNITY) மேற்கு சகாரா பிரச்சினையில் தீவிரமாக தலையிடவேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளாக்கியது. ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தில் அங்கம் வகித்த 50 நாடுகளில் அரைவாசிக்கு மேற்பட்டவை, சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசை அங்கீகரித்ததுடன், அதற்கு ஆதரவாக குரலும் கொடுத்தன. அத்துடன் சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசு தன்னையும் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தில் அங்கத்தவராக இணைக்க வேண்டுமென்று ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தை நெருக்கிக்கொண்டிருந்தது. சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசின் இந்தக்கோரிக்கையை ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தால் தட்டிக்கழிக்க முடியவில்லை. 1976 ம் ஆண்டு சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒரு சமாதான முடிவிற்காக ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் பலமுறை முயன்றும் அம்முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. மீண்டும் 1981 ல் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் வருடாந்த மகாநாட்டில் ஒருதீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத்தீர்மானத்தில் மொறோக்கோவும், பொலிசாறியோவும் போர் நிறுத்தத்திற்கு உடன்பட வேண்டும் என்றும், சகாரன் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும், சுதந்திரத்துக்குமான ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. ஆனால், மொறோக்கோ மன்னர் இரண்டாம் கசன் பொலிசாறியோவுடனான எந்தவித பேச்சுவார்த்தைக்கும் உடன்படவில்லை.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து 1982 ம் ஆண்டு மாசி மாதம் எத்தியோப்பியாவின் தலை நகரான அடிஸ் அபாபாவில் நடைபெற்ற ஆபிரிக்க வெளியுறவு மந்திரிகளின் கூட்டத்தில் சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசு ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் 51 வது உறுப்பு நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசிற்கு ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தில் [illegible] கூடாது என வாதிட்டுவந்த மொறோக்கோ, இந்நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்ததுடன் கூட்டத்தொடரில் இருந்தும் வெளியேறியது. மொறோக்கோவுக்கு ஆதரவாக சயீர் நாடும் வெளியேறியது.

எனினும் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் சமாதானத் தீர்வுக்கான தனது முயற்சியை தொடர்ந்தது. 1983 யூனில் முன்னர் வைத்த கோரிக்கையை மீண்டும் இரு நாடுகளுக்குமிடையே வைத்தது. ஆனால் மொறோக்கோ சகாரன் மக்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பேச்சுவார்த்தை மேற்கொள்ள மறுத்தது.

### உலக நாடுகளின் அங்கீகாரம்

1976 பெப்ரவரி 27 இல் சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசு நிறுவப்பட்டதில் இருந்து உலக நாடுகள் சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசை அங்கீகரிக்கத் தொடங்கின. 1976 ம் ஆண்டு வேலே அல்ஜீரியா, அங்கோலா, மொசாம்பிக் உட்பட 10 நாடுகள் அங்கீகாரம் வழங்கின. 1986 ம் ஆண்டு வரையான காலகட்டத்தில் மொத்தம் 63 நாடுகள் சகாரன் அரபுக் குடியரசிற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளன. கடைசியாக அங்கீகாரம் வழங்கிய நாடு இந்தியாவாகும். சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசிற்கு அங்கீகாரம் வழங்கியதன் மூலம் இந்தியா மொறோக்கோவுடனான இராஜதந்திரத் தொடர்பை இரத்துச் செய்யவில்லை [illegible] குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு அங்கீகாரம் வழங்கிய நாடுகளில் அரைவாசிக்கு மேற்பட்டவை ஆபிரிக்க நாடுகளாகும். இதற்கு அடுத்தபடியாக 15 ற்கு மேற்பட்ட லத்தீன் அமெரிக்கா நாடுகள் அங்கீகாரம் வழங்கியுள்ளன. இவையெல்லாம் மூன்றாம் உலகநாடுகளாகும். உலகநாடுகளின் அங்கீகாரம் அரசியல் இராஜதந்திர ரீதியில் சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசு பெற்றுள்ள வளர்ச்சிக்கு சான்றாகும்.

### நிர்வாக அமைப்பு

சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசு ஒரு சாதாரண அரசு அல்ல. அகதிகள் முகாம்களிலேயே காலம் முழுவதும் வாழ்ந்து கொண்டு, மிகவும் கஸ்டமான நிலைமைகளுக்கு மத்தியில் விடுதலைப்போரை நடாத்திக்கொண்டிருக்கும் சகாரன் மக்களால் கட்டியெழுப்பப்படும் ஓர் அரசாகும். 9/10 பகுதியை இந்த அரசாங்கம் நிர்வகிக்கின்றது. சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசில் அடிமட்டத் தலைமை முதல் உயர்மட்டத் தலைமை வரை எல்லாவற்றிற்கும் தேர்தல் நடத்தப்படுகின்றது. சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசின் சட்டம் இயற்றும் அதிகாரம் சகாரன் தேசியசபைப் பிரதிநிதிகளிடம் இருக்கிறது. இத்தேசியசபை மக்கள் பொதுக் காங்கிரசால் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு தேர்வு செய்யப்படுகிறது. (இம்மக்கள் பொதுக்காங்கிரஸ் பிரதிநிதிகள், அடிமட்டமக்கள் காங்கிரஸ் பிரதிநிதிகளால் தெரிவுசெய்யப்படுகின்றனர்.) தேசிய சபை ஆலோசனை வழங்கும் சபையாகவே விளங்குகிறது.

பூரண ஆட்சியதிகாரம் மந்திரிகள் சபையின் கையிலேயே தங்கியுள்ளது. இம்மந்திரிசபை புரட்சிகர ஆட்சி சபையால் நியமிக்கப்படுகிறது. புரட்சிகர ஆட்சி சபை என்றும் போது பொலிசாறியோ முன்னணியின் நிர்வாகக் குழுவையே குறிக்கிறது. நிர்வாகக்குழுவில் 7 பேர் அங்கம் வகிக்கிறார்கள். புரட்சிகர ஆட்சிசபையின் தலைவர் பொலிசாறியோ முன்னணியின் நிர்வாகக் குழுவின் செயலாளர் நாயகமாகவும், குடியரசின் தலைவராகவும் விளங்குகிறார்.

மேலும் பாதுகாப்பு, உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரம், நீதித்துறை, வர்த்தகத்துறை போன்றவற்றுக்கும் அமைச்சர்கள் இருக்கின்றார்கள். சகாரன் அரசாங்கத்தில் மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய தேவைகளெல்லாம் நிறைவேற்றிக்கொடுக்கப்படுகின்றது. சகல பிள்ளைகளுக்கும் கல்வி வசதி வழங்கப்படுகிறது. இவைகளைவிட பலமான ஒரு மக்கள் இராணுவத்தைக்கட்டி எழுப்பவேண்டிய அவசியமும் சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசிற்கு இருக்கிறது.

மேற்கு சகாராவின் 1/10 பகுதியில் கிட்டத்தட்ட 20,000 ச.கி.மீற்றர் பிரதேசத்திலேயே தமது பூரணகட்டுப்பாட்டை கொண்டிருக்கும் மொறோக்கோ, அங்கு தன்னைப் பல்வேறு வழிகளிலும் பலப்படுத்திக் கொண்டு வருகிறது. சகாராவின் முக்கிய கனிவளப்பிரதேசங்களான [illegible] துறைமுகப்பிரதேசம், [illegible] துறைமுகப்பிரதேசம், [illegible], அம்காலா, [illegible] போன்ற பகுதிகளும் மொறோக்கோவின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள்ளேயே அமைகின்றன. இப்பிரதேசங்களைச்சுற்றியே பாதுகாப்பு மதில்களும் அமைக்கப்பட்டுள்ளன. முக்கியமாக இம் மதில்களின் உதவியுடனேயே மொறோக்கோ [illegible]யும், அடக்குமுறைகளையும் மேற்கொண்டுவருகிறது. மேலும் மொறோக்கோவின் இந் நடவடிக்கைகளுக்கு பின்னணியாக ஏகாதிபத்திய அமெரிக்கா உள்ளது. நீண்டகாலமாக சகாராப் பிரச்சினையில் அமெரிக்கா நடுநிலைமை வகித்துவந்தது. ஆனால் அமெரிக்காவில் கார்ட்டர் நிர்வாகம் தோற்கடிக்கப்பட்டு றீகனின் நிர்வாகம் ஆட்சிக்குவந்ததைத் தொடர்ந்து அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகள் மாற்றமடைய ஆரம்பித்தது. 1981 அக்டோபரில் கெல்ற்றா சேம்மூர்(GUELTA ZEMMUR) பிரதேசத்தில் இடம்பெற்ற சண்டையில் மொறோக்கோத் துருப்புக்கள் தோல்வியைத் தழுவியதைத் தொடர்ந்து அமெரிக்கா மொறோக்கோவிற்கு சாதகமாக மாறியது.

அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான "பென்டகனில்" உயர்மட்டத்தில் ஓர் இராணுவ சபை அமைக்கப்பட்டது. இச்சபையின் நோக்கம் மொறோக்கோவின் அவசர அழைப்பிற்கு உதவிசெய்வதும், சகாராப் பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள மொறோக்கோ இராணுவத் தளங்களின் தேவைகளை அறிந்து செயல்படுவதும் ஆகும். மேலும் மேற்கு சகாராவின் முக்கிய நகரங்களில் அமெரிக்கா ஆலோசகர்களின் செயற்பாட்டிற்கும் வழிவகுக்கப்பட்டது. அத்துடன் விடுதலை இராணுவத்தினரின் நடமாட்டங்களை கண்காணிப்பதற்கு நவீன மின் உபகரணங்களும், உளவு செய்மதிகளின் உதவிகளும் வழங்கப்பட்டன. பாலைவனப் பிரதேசத்திலுள்ள சகாரன் மக்கள் விடுதலை இராணுவத்தை அழிப்பதற்காக அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட கிளஸ்டர் வகைக்குண்டுகளும் (CLUSTER BOMBS) மொறோக்கோவிற்கு வழங்கப்பட்டன. இவைகளுடன் அமெரிக்கா மொறோக்கோவிற்கு பெருமளவு நிதியுதவியும், பொருளாதார உதவியும் அளித்துவருகிறது. இவற்றைத்தவிர பிரான்சும் பெருமளவு பொருளாதார, இராணுவ உதவிகளை மொறோக்கோவிற்கு வழங்குகிறது. குறிப்பாக பெருந்தொகை நவீன ஆயுதங்களும் மிராஜ் போன்ற போர் விமானங்களும் இவற்றுள் அடங்கும்.

மாட்டுமல்ல (உடன்படிக்கைக்கு) பின்னர் பல ஆண்டுகளாக பொலிசாறியோ முன்னணிக்கு லிபியா ஆயுத உதவி வழங்கி வந்த போதும், 1984 ம் ஆண்டு மொறோக்கோவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தபின், தனது உதவிகளை கடாபி நிறுத்தினார்.

### வெற்றிப்பாதையில்

வல்லரசுகளின் உதவியுடன் மேற்கு சகாராவை மொறோக்கோ ஆக்கிரமித்து காண்டபோதும், சகாரா மக்கள் தளர்ந்துவிடவில்லை. அவ்வப்போது மொறோக்கோ இராணுவத்தின் மீது பலத்த தாக்குதல்களை தொடுத்துவரும் சகாரன் மக்கள் இராணுவத்தின் விடுதலைப் போராட்டப் பலத்தை எதிர்கொள்ள முடியாது மொறோக்கோத் துருப்புக்கள் பின்வாங்கிக் கொண்டிருக்கின்றன. நிரந்தரமான சமாதானத் தீர்வுக்கான முயற்சி கொண்டிருக்கின்ற ஐக்கியநாடுகள் சபை, ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் என்பவற்றுடன் ஒத்துழைத்து வரும் சகாரன் மக்கள் மறுபக்கம் தமது ஆயுத நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தி வருகிறார்கள். மிகவும் பலம்வாய்ந்த பாதுகாப்பு மதில்களின் பெரும் பகுதிகளை பல சந்தர்ப்பங்களில் சகாரன் மக்கள் விடுதலை இராணுவம் தகர்த்துள்ளது. சகாரன் மக்களின் 10 வருடகால போராட்டம் அவர்களுக்கு பாரிய அனுபவங்களை வழங்கியுள்ளது. தமது போராட்டத்தை சாதாரண வேகத்துடன், ஆனால் தீர்க்கமான உறுதியுடன் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்ற சகாரன் மக்களை மொறோக்கோ மன்னர் இரண்டாம் கசன் எதுவும் செய்து விடமுடியாது. சகாரன் மக்கள் விடுதலை இராணுவம் எவராலும் அழிக்கமுடியாத ஒன்றாக நிலைத்து விட்டது. சகாரன் மக்களின் பூரண வெற்றி வெகுதூரத்தில் இல்லை. ■



# 'இயலிசை வாரிதி' திரு.ந.வீரமணிஐயருடன் ஓர் இனிய சந்திப்பு

**தமிழீழத்தில் மட்டுமல்ல, அகில இந்தியாவிலும் இசையுலகில் புகழ் பெற்றுள்ள 'இயலிசை வாரிதி' ந.வீரமணி ஐயருடன் 'சாளரம்' இதழுக்கென நிகழ்த்தப்பட்ட ஒரு 'நேர்காணலை' இங்கு முழுமையாகத் தருகின்றோம். -நேர்காணலை நிகழ்த்தியவர் -விவேக்.**

'சாளரம்' இதழுக்கென ஓர் 'நேர் காணலை' நிகழ்த்துவதற்காக பிரம்மசிறீ திரு. ந. வீரமணி ஐயர் அவர்களைச் சந்திக்க இணுவிலிலுள்ள அவரின் இல்லத்திற்குச் சென்றோம்.

மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர் எம்மை வரவேற்றார். அவரின் கலையுலக அனுபவங்களை அறிந்து கொள்வதற்காக நாம் கேள்விகளை தொடுக்கு முன்பு,

அவர் இல்லத்திற்குள் எம்மை அழைத்துச் சென்றார். சுவர்களை ஆக்கிரமித்துக் காணப்பட்ட பட்டங்களும், ஐயர் அவர்களுக்கு கிடைத்த சான்றிதழ்கள், வாழ்த்து மடல்கள், கைப்படங்கள் என்பனவும் அவரின் கலை அனுபவங்களையும், அவருக்கு கலையுலகில் கிடைத்த புகழ்ச்சிகளையும் எமக்குப் பறை சாற்றின.

**தாங்கள் ஆரம்பகல்வியை எங்கு கற்றீர்கள்? கலையுலகுடன் எவ்வாறு ஈடுபாடு வந்தது? எப்போது இந்தியா சென்றீர்கள்?** நாம் கேள்விகளைக் கேட்க அவர் பதிலளித்தார்.

"ஆரம்பக்கல்வியை இணுவில் அம்பிகைபாக வித்தியாசாலையிலும், சைவ மகாஜன வித்தியாசாலையிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பயின்றேன். எனது தந்தையார் மா. த. நடராஜ ஐயர் லண்டன் மெட்ரிக் படித்தவர். இணுவில் கிராமத்திலிருந்து இசைக் கல்வியை பரப்பியவர். வயலின் இசைக் கலைஞர். இந்தியக் கலைஞர்கள் செம்பை வைத்தியநாதர், முசிறி சுப்பிரமணியம் ஐயர், மகாராஜபுரம் விசுவநாத ஐயர் ஆகியோருடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணியவர்.

வேதாரணியம் உப்புச்சத்தியாக்கிரகத்தில் பங்கு பற்றியவர். ஆகவே, என்னுடைய குடும்பச் சூழல் இயல்பாக என்னுள் கலை ஆர்வத்தை உண்டுபண்ணியது.

1951ஆம் ஆண்டு உயர் கல்வி பயில்வதற்காக (B. Sc) இந்தியாவுக்குச் சென்றேன். இசை, நாட்டியம் என்பனவற்றில் அதிக ஈடுபாடு காரணமாக அடையார் கலாசேத்திரத்தில் முழுநேர மாணவனாகி திறமைச் சித்தி அடைந்தேன்."

நாம் அடுத்தக் கேள்வியை கேட்கத் தொடங்குமுன் உள்ளே சென்று சில கடிதக்கோவைகளை எடுத்து வந்து காட்டினார்.

அந்த கோவையினுள், ஐயர் அவர்களைப் பாராட்டி அனுப்பிய கடிதங்கள் கட்டுக்கட்டாக காணப்பட்டன. காலம் சென்ற இந்திய முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி போன்ற அரசியல் வாதிகள் தொடக்கம் ரி.எம்.-சௌந்தரராஜன், சீர்காழி எஸ்.-கோவிந்தராஜன் போன்ற பாடகர்கள் வரை பலர் எழுதிய பாராட்டுக்கடிதங்கள் அவை.

நாம் கேள்வி கேட்கும் அவசியம் இன்றி அவர் தொடர்ந்தார்;

"ருக்மணிதேவி அம்மையார் (அப்போதைய கலாசேத்திர அதிபர்) அவர்களிடம் பரதநாட்டியம் பயின்றேன். எம். டி. இராமநாதன் அவர்களிடம் சங்கீதம் கற்றேன். சிறீபாபநாசம் சிவம் அவர்களிடம் சாகித்யம் கற்றேன். தமிழை சா. கு. கணபதி ஐயர் அவர்களிடமும், பேராசிரியர் விஸ்வநாதஐயர் அவர்களிடமும் கற்றேன். கலாசேத்திரத்தில் மாணவனாக இருந்த போதே மயிலை குறவஞ்சி என்கின்ற நாட்டிய நாடகத்தை அரங்கேற்றினேன். இதனை அரங்கேற்றம் செய்து வைத்த கொத்தமங்களம் சுப்பு அவர்கள் 'His Masters Voice' நிறுவனத்திற்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். எனது சாகித்யங்களுக்கு அக்காலத்தில் பிரபல சங்கீத வித்துவான்களின் பேராதரவு இருந்தது. H. M. V. நிறுவத்தினர் என்னை சாகித்ய கர்த்தாவாகவும் இசை அமைப்பாளராகவும் அங்கீகரித்தனர்."

"தித்திக்கும் தேன் தமிழில் நவரசம் உடன் பக்திரசமும் ததும்ப இலக்கணச்சுவை குன்றாது மயிலை குறவஞ்சி என்ற சிறிய - அரிய நூல் இழைத்துக் கூடுகட்டியிருக்கும் அற்புதச்சிலத்தி நமது வீரமணி என்னும் அடையார் கலாசேத்திர மாணவர். - மயிலை குறவஞ்சிக்கு பாபநாசசிவம் அவர்கள் வழங்கிய ஆசிர்வாதம் இது."

**உங்களின் புகழ் பரப்பிய பாடலான கற்பகவல்லி பற்றி.....?**

"ஆம் சொல்கிறேன். H. M. V. நிறுவனத்துடன் நான் பணியாற்றிய போதுதான் எனக்கு சீர்காழி கோவிந்தராஜன், ரி. எம். சௌந்தரராஜன் ஆகியோரினது நட்பு ஏற்பட்டது. அப்போது நான் புனைந்த 'உன்னை நான் காண்பதெங்கே' என்ற பாடல் சீர்காழி பாடி ஒலிப்பதிவானது. அடுத்து ரி. எம். சௌந்தரராஜன் பாடிய 'கற்பகவல்லி நின் பொற்பதங்கள்' என்று தொடங்கும் எனது பாடல் பிரபல்யம் ஆனது. இப்பாடல் மயிலாப்பூர் கபாலீஸ்வரன் ஆலயத்தில் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் அறிகிறேன். பதினாறு இராகங்களை வைத்து ஓர் பாடல் புனைந்தேன். அது மகாராஜபுரம் சந்தானம் அவர்கள் பாடி புகழ் பெற்றது. இன்னும், அறுபத்து மூன்று நாயன்மார்களின் சரித்திரங்களை நாட்டியமாக (30 நிமி) செய்தேன். இக் கலைப் பொக்கிஸம் இந்திய ராணுவம் இங்கிருந்த காலத்தில் அழிந்து போய்விட்டது."

வீட்டினுள் சென்று சில ஒலிப்பதிவு நாடாக்களை கொண்டு வந்து எம்மிடம் காட்டி -"இது எனது மாணவி சிவசக்தி சிவநேசன் லண்டனில் இருந்து பாடி வெளியிட்ட நாடாக்கள் என்று பெருமையுடன் சொன்னார். அதிலே ஒரு நாடாவில் 'எனது குருவான பிரம்மசிறீ வீரமணி ஐயர் அவர்களுக்கு சமர்ப்பணம்' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. அதனை பாடல் கருவியில் போட்டுக்கேட்டோம். இனிமையான சங்கீதம். தொடக்கத்தில் 'சங்கீதத்துறையில் வீரமணி ஐயர் அவர்கள் ஒரு பெரிய மேதை' என அவரது மாணவி அவ்வொலி நாடாவில் கூறுகிறார்.

**தாங்கள் தற்போது சங்கீதம் பற்றிய நூல் ஒன்றை எழுதி வருவதாக அறிந்தோம்....**

"ஆம் கர்நாடக சங்கீத பாரம்பரிய பாடல்களை, பாரம்பரிய இராகங்களில், பாரம்பரிய தாளங்களில் அமைத்து நூறாக்கியுள்ளேன். பக்தி இரசப் பாடல்களாக 72 மேளகர்த்தா இராகங்களில் 72 பாடல்களை உருவாக்கி சுரப்படுத்தியுள்ளேன். 35 தாளங்கள், 175 தாளங்கள், போன்ற தான நுணுக்கங்களில் ஒவ்வொரு தாளத்திற்கும் ஒவ்வொரு பாடலாக [illegible] துள்ளேன். [illegible] பிரசுரத்திற்கு தயாராகவுள்ளது.

சுமார் 300க்கு மேற்பட்ட நாட்டிய நாடகங்கள் 800க்கு மேற்பட்ட சேத்திரங்களுக்கான 108கீர்த்தனைகளைக் கொண்ட, மூன்று பாகங்களைக் கொண்ட நூல்களை எழுதியுள்ளேன். தமிழீழத்திலுள்ள 387 திருக்கோவில்களுக்கு 200க்கு மேற்பட்ட திருவூஞ்சல்பாக்கள் நூற்களாக பிரசுரமாகியுள்ளன.

விஞ்ஞானமும் மெய்ஞானமும் ஒன்றையே குறிப்பதாகவும், அவை மனிதவாழ்வில் ஒரே இலட்சியத்தை தருவதாகவும் விளக்கி 'ஆத்மீக விஞ்ஞானம்' என்ற நூலை ஆக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளேன்."

வீரமணி ஐயர் அவர்களைப் பற்றியும், அவரது சாதனைகள், ஆற்றல்கள் குறித்தும் அவரின் கலையுலக அனுபவங்கள் பற்றியும் விரிவாக எழுதுவதானால் ஒரு பெரிய புத்தகம் எழுதலாம். 'இயலிசை வாரிதி, சாகித்ய சுரமணி, சாகித்ய சாகரம், கவிமாமணி, போன்ற சுமார் 17க்கு மேற்பட்ட பட்டங்கள் இவருக்கு தகமை சார் அமைப்புகளாலும், அறிஞர்களாலும் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளன.

சாகித்ய துறையில் மேதையான ஐயர் அவர்கள் எவ்வித பெருமையுமின்றி அனைவரோடும் சமனாகப்பழகும் இயல்புடையவர். குழந்தை மனமுடையவர். அவரின் துணைவியார் குடும்ப வாழ்வில் மட்டுமல்லாது கலை வாழ்விலும் அவருக்கு ஊக்கமளிப்பவராகவுள்ளார்.

"தமிழீழ சமுதாயம் பண்பாட்டு ரீதியாக உயர்நிலை எய்த வேண்டுமென்ற நோக்கில் அவ்வப்போது எத்தகைய உணர்ச்சி நிறைந்த பாடல்கள் வேண்டுமோ அத்தகைய பாடல்களை காலத்திற்கு காலம் வழங்கி வருகின்றேன். எமது நாட்டின் எதிர்கால சமூகம் வீரமும், தீரமும், நேர்மையும், நீதியும், கலையும், கல்வியும், பண்பும், பண்பாடும், நிறைந்து வளரவேண்டும் என்கிற எண்ணத்துடன் எனது சிற்றறிவுக்கு எட்டியவரையில், அவ்வப்போது கவிதைகளாக, இசை நாடகமாக, நாட்டிய நாடகமாக, தெருக்கூத்துக்களாக, வில்லுப் பாட்டுக்களாக, கிராமிய இசை வடிவங்களாக தந்துள்ளேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரத்தையும், தீரத்தையும் மக்களுக்கு எடுத்துக் காட்டும் பொருட்டும் அரச படையின் அக்கிரமங்களையும் அநீதிகளையும் விளக்குமுகமாகவும் யதார்த்த பூர்வமாக 'கொடியோரின் கொடுமை' என்னும் நாட்டிய நாடக ரூபமாக்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவினைச் சேர்ந்தோரை பாத்திரங்களாக்கி நடிக்க வைத்து, அதனை நெறிப்படுத்தி, இசையமைத்து நாட்டிய அமைப்பையும் செய்து தமிழீழ கலை பண்பாட்டு கழகம் நடத்திய முதலாவது முத்தமிழ் விழாவிலே அரங்கேற்றம் செய்தேன். தமிழீழ மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களை இது பெற்றது. புராண, சரித்திர, இதிகாச கதைகளையே நாட்டிய நாடகமாக அமைக்கும் மரபு ஒன்று இருந்தது. ஆனால் யதார்த்தபூர்வமான சமூக பின்னணிகளை வைத்து நாட்டிய நாடகமாக அமைத்த பாங்கு பழமையில் புதுமை காண்பதாக அமைகிறது. எமது மண் சுபீட்சம் அடைய வேண்டும். அது சுபீட்சம் பெற எவ்விதமான பணியினை நான் நல்க வேண்டுமோ, எதனைச் சாதிக்க வேண்டுமோ, அதனைச் சாதிக்க எவ்வேளையிலும் தயாராகவுள்ளேன்."

இவ்வாறு கூறி எம்மிடம் விடை பெற்றுக்கொண்டார் திரு. வீரமணி ஐயர் அவர்கள். ■

**நன்றி: 'சாளரம்'**
**தமிழீழம்**

---

## திரண்டு வரும் உலக...

முனைந்துவருகின்றது. மக்களோ அகதிகள். அவர்கள் வாழ்வதோ இடம்பெயர்ந்த வாழ்வு. சுற்றி நிற்கும் இராணுவம் தான் வேலி. இந்நிலையில் எப்படி சுதந்திரமான சர்வசன வாக்கெடுப்பை நடாத்தமுடியும்?

முடிந்த முடிபு

1976இல் ஆவரங்காலில் எடுக்கப்பட்ட தமிழீழத் தனியரசு என்ற தீர்மானத்திற்கு தமது அங்கீகாரத்தை அளிக்கும் குடியொப்பமாகவே, 1977 பாராளுமன்றத் தேர்தலைக் கருதி, தமிழ் மக்கள் வாக்களித்தனர். இதன் மூலம் சிங்கள பௌத்த பேரினவாத குடியரசின் இறைமையை நிராகரித்ததோடு தனிநாட்டுக்கு அங்கீகாரமும் அளித்தனர். எனவே வடக்கு-கிழக்கு இணைப்பு தானாகவே அமைந்துவிட்டது.

ஆதலால் மேற்கொண்டு, இன்னொரு சர்வசன வாக்கெடுப்பு தேவையற்றதாகவே கருதப்படுகின்றது. [illegible]

## தொழிலாளர்களும்...

கவே பெண்களுக்கு இருக்கின்றது.

பெண்கள் மூன்றில் இரண்டு பங்கு வேலையைச் செய்து பத்தில் ஒரு வீதத்தை ஊதியமாகப் பெறுகின்றார்கள் என்றால், ஏன் இப்படி என்று நாங்கள் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். பெண்கள் உதிரி உதிரியாக உழைப்பதால் அவர்கள் தங்கள் உழைப்பின் மகத்துவத்தை, பெறுமதியை உணர்வதில்லை. இன்று எமது பெண் [illegible] ■

## சர்வதேச சமாதா...

விடுதலைப் புலிகளின் தலைவர்களை இவர்கள் சந்தித்திருந்தது. [illegible] ■




# வரலாற்றுத் தவறிலிருந்து தப்பிக்க வேண்டாமா?

"ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை இலக்கிய படைப்பாளிகளின் பங்கு மகத்தானது. தேசிய சுய உணர்வைத் தட்டி எழுப்பி, தேசிய போராட்டத்திற்கு ஊக்க சக்தியினை ஊட்டுபவர்கள் கலைஞர்கள். தேசிய உருவாக்கத்திற்கு செழுமையும், முழுமையும் கொடுப்பவர்களும் அவர்களே" இவ்வாறு தலைவர் பிரபாகரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

முல்லைக் கலைஞர்களால் உருவாக்கப்பட்டுள்ள, "இது எங்கள் தேசம்" எனும் வீடியோ படக் கலைஞர்களைப் பாராட்டி விடுத்த செய்தியிலேயே தமிழீழத் தேசியத் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தலைவர், போராட்டத்தில் கலைஞர்களின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியுள்ளமை இது தான் முதற் தடவையல்லதலைவரின் கருத்தாற்றல்களை மேற்கோள்காட்டி முன்னர் ஒரு தடவையும் கலை, இலக்கியம் தொடர்பாக இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தேன்.

இன்றைய சூழலில் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழக் கலைஞர்கள், கலை முயற்சியாளர்கள் ஆகியோர் நிலைப்பாடு குறித்தும், எவ்வாறு தற்போதைய தலைமையுள்ளது என்பது குறித்தும் இன்று இப்பகுதியில் நோக்கலாம் என நினைக்கின்றேன்.

புலம் பெயர்ந்த தமிழீழக் கலைஞர்கள் பல்வேறு வகையான கலை முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றபோதும் சில விடயங்களை அவர்கள் உள்வாங்கிக் கொள்வது அத்தியாவசியமாகின்றது.

வெளிநாடுகளில் கலை இலக்கிய முயற்சியில் ஈடுபடுவோரை மூன்று வகையினராகப் பகுக்க முடியும்.

1. போராட்டம் சார்ந்து கலை இலக்கியம் படைப்போர்.
2. அரசியல் அற்ற கலை இலக்கியம் படைப்போர்.
3. போராட்டத்தினை எதிர்த்து கலை, இலக்கியம் படைப்போர்.

முதலாவது பிரிவினர், தமது கடமையை சரிவர ஆற்றி வருவதனால் அவர்கள் தொடர்பான கருத்துப் பரிமாற்றம் அவசியமானதாக எனக்குப்படவில்லை. மற்றைய இரு பிரிவினருடனும் இப்பத்தியினூடாக கருத்துப் பரிமாற விரும்புகின்றேன்.

இரண்டாவது பிரிவினரான 'அரசியல் அற்ற' கலை, இலக்கியம் படைப்போரை மேலும் இரு பிரிவினராக வகைப்படுத்த முடியும்.

1. அரசியல் தேவையற்றது என்ற எண்ணத்துடன் பொழுது போக்கிற்காகவும், ஆத்ம திருப்திக்காகவும் கலை, இலக்கியம் படைப்போர்.
2. போராட்டத்துடன் கொண்ட முரண்பாடு காரணமாக அல்லது விடுதலைப் புலிகளுடன் கொண்ட வெறுப்புணர்வு காரணமாக அரசியலை நீக்கி கலை இலக்கியம் படைப்போர்.

இவ்விரு பிரிவினரிலும் முதலாவது பிரிவினர், அரசியல் தேவையற்றது என்ற எண்ணத்துடன் காணப்படும் கலைஞர்களின் படைப்பு வெறும் பொழுது போக்கு என்ற அளவிலேயே மக்களோடு உறவாடக்கூடியது. இத்தகையவர்களால் உருவாக்கப்படும் படைப்புக்களின் சமூகப்பயன்பாடு என்ன என்னும் கேள்விக்குறி எழுப்பப்படுவது தவிர்க்க முடியாதது. ஒரு கலைக்கு சமூகப் பயன்பாடு இருக்கத்தான் வேண்டுமா? என்ற கேள்வியினை எழுப்புவர்களுக்கு எம்மால் சொல்லக்கூடிய இலகுவான பதில் 'ஆம்' என்பதே. இந்த வகையில் அரசியல் தேவையற்றது என்ற ரீதியில் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தளங்களை தொடமுடியாத கலைகள், இலக்கியங்கள் இன்றைய காலத்தின் தேவையினை தொட்டு நிற்பவையல்ல. அரசியலை தவிர்க்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களால் சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தளங்களை சரியாகக் கையாள முடியாது என்பதும் இங்குள்ள அடிப்படை உண்மையாகும் எனவே அரசியல் தேவையற்றது என்ற நோக்கினை படைப்பாளிகள் கைவிட வேண்டும்.

எமது வரலாற்றில் அரசியல் வாதிகளின் ஏமாற்றுத் தனங்களினால் அரசியல் என்பது ஒரு கெட்ட வார்த்தையாக பலராலும் வியாக்கியானம் கொள்ளப்பட்டிருக்கலாம். ஆனால் உண்மையில் அரசியலே ஏனைய துறைகளை தீர்மானிக்கும் அதிகாரத்தினை தன்னகத்தே கொண்டுள்ளது.

சமூக, பொருளாதார, பண்பாட்டுத்தளங்களில் ஏற்படக்கூடிய, ஏற்படுத்தக் கூடிய ஆக்கபூர்வமான, மாற்றங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கு எமக்கு அரசியல் அதிகாரம் தேவைப்படுகின்றது. எமது கையில் அரசியல் அதிகாரம் இல்லாமலிருக்கும் காரணத்தினாலேயே நாம் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். இதனால் எமது கையில், எமது தலைவிதியினை நிர்ணயிக்கும் உரிமையினை எடுத்துக் கொள்ள, நாமும் கௌரவமுள்ள மனிதர்களாக வாழ எம்மிடம் அரசியலதிகாரம் இருக்க வேண்டியது அத்தியாவசியமாகின்றது.

இந்த வகையில் நோக்கின் அரசியல் தேவையில்லை எனும் கருத்து அசட்டுத் தனமானது. எமது மக்களின் உரிமையினை வென்றெடுக்கும் போராட்டத்திற்குப் பலம் சேர்க்கும் வண்ணம் படைக்க வேண்டிய படைப்பாளிகள், 'அரசியல்' என்று கூறி ஒதுங்கி நிற்பது கவலைக்குரியது. சிலர் அரசியல் என்றால் பிரச்சினை என்ற எண்ணத்துடனும் தள்ளி நிற்பதனை உணரமுடிகின்றது. இங்கு இவர்கள் தங்கள் கடமையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் மனநிலையில் செயற்படுகின்றார்கள் என்றே கருதவேண்டியுள்ளது.

எமது எதிர்கால நல்வாழ்வுக்காக தமது இன்னுயிர்களை அர்ப்பணித்துப் போராடிக் கொண்டிருக்கும் போராளிகளுக்கும் மக்களுக்கும் உறுதுணையாக, பக்கபலமாக நாம் என்ன செய்திருக்கின்றோம்? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவேண்டிய தார்மீகக்கடமை புலம் பெயர்ந்த சகல படைப்பாளிகளுக்குமுண்டு.

'அரசியலற்ற கலை இலக்கியம்' படைக்கும் மறுசாரார் உண்மையில் [illegible] டவர்கள். ஆனால் இவர்கள் போராட்டத்துடனோ அல்லது விடுதலைப் புலிகளுடனோ உடன்பட முடியாதுள்ளவர்கள். உண்மையில் இவர்கள் குருட்டுத் தனமான பார்வையுடன் விடுதலைப் புலிகளை நிராகரிப்பவர்கள். ஆனால் கலை, இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவதில் மிகுந்த விருப்பம் கொண்டவர்களாகவும், பலரையும் இணைத்து தம் முயற்சிகள் ' நடுநிலையானவை ' எனவோ அல்லது ' பரந்த மனப்பான்மை உடையன ' எனவோ வெளிக்காட்டும் விருப்பம் கொண்டவர்களாகவும் காணப்படுவர். இதனால் 'கலை' என்ற ரீதியில் ஒன்று படுமாறும் அரசியலைத் தவிர்த்துவிடுவோம் எனவும் இவர்கள் கலைஞர்களுக்கு அழைப்பு விடுகின்றனர்.

மேலும் சிலர் அரசியலானது கலைஞர்களை இணைப்பதற்குத் தடையாக இருக்கின்றது எனக் கூறி, அரசியலற்ற கலைகளைப் படைக்க முயல்கின்றனர். இவர்களும் தங்களது நிலைப்பாட்டினை மறுபரிசீலனை செய்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

நான் மேலே குறிப்பிட்ட மூன்றாவது தரப்பினர் போராட்டத்தினை எதிர்த்து கலை, இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். தமது அரசியல் கருத்துக்களின் அடிப்படையில் மேற்கொள்ளும் இந் நடவடிக்கைகள் ஒரு வகையில் அதற்குச் சாதகமாக அமைகின்றது என்பதனை இவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். [illegible]

[illegible] கலைஞர்களின் பங்களிப்பு தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாக உள்ளது. [illegible] இன்றே கலைஞர்கள் முடிவுசெய்து கொள்ளல், வரலாற்றுத் தவறிலிருந்து அவர்களைக் காப்பாற்றும். ■

## 'தண்ணீரைக் கொடு ஆனால் ஆயுதத்தையல்ல'

'மூன்றாம் உலக நாடுகளின் குடிநீருக்கு வசதி செய். ஆனால் ஆயுதங்களை விற்று அந்நாட்டு மக்களை அழிக்காதே' என பிரித்தானியாவில் உள்ள Campaign against Arms Trade எனும் குழுவினால் 4-6-93 அன்று இலண்டன் Trafalgar Square இல் நடாத்தப்பட்ட புரட்சிகர வடிவத் அதிகாலை 6.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இப்பூச்சுப் புரட்சியில், பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரபல நடிகர்கள், முக்கிய பிரமுகர்கள் உட்பட பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

இலண்டன் வாழ் ஈழத்தமிழர்கள் பலரும் இதில் பங்குகொண்டு




தையே மேலுள்ள படம் காட்டுகிறது.

இக்குழு, இக்கோரிக்கையை முன்வைத்து 77 மீற்றர் நீளமான ஒரு துணியில் இதற்கான விளம்பரங்களை வர்ணப் பூச்சுப் பூசி, அதன் மூலம் தமது கொள்கையை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தியது.

[illegible] ■

விடுதலை மாலை

உணர்வும் உயிர்ப்புமாய்
எம் மண்ணின் யதார்த்தம் தோய்ந்த நிகழ்வுகளின்
கலை வடிப்புக்கள்

[illegible]

காலம்: 27.06.1993 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 5.30 மணி

இடம்: 80, Bd. Rochechouart, 75018 Paris.
Metro: Anvers.

விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம்
பிரெஞ்சுக் கிளை.
Tel: 43 58 11 42

# எங்கள் தேசியக் கொடியிது

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது - தமிழ்
மக்களைக்காத்த நம்மான மாவீரரை
வாழ்த்திடும் கொடியிது - புலி
வீரத்தின் கொடியிது
மாவீரனின் கொடியிது

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது - பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது -தமிழ்
ஈழத்தின் கொடியிது - புலி
ஏற்றிய கொடியிது

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது - பிர
பாகரன் என்றிடும் காவியநாயகன்
போற்றிடும் கொடியிது - தமிழ்த்
தேசத்தின் கொடியிது - எங்கள்
தேசியக் கொடியிது



U.T.O
211 Katherine Rd, London E6 1BU, UK
Tel/Fax: 081-470 8593

T.C.C
P.O.BOX 240251
GERMANY

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France

W.T.C.C
ZURICH
SWITZERLAND

T.C.C
AUSTRALIA

↑↑ புதிய முகவரி ↑↑

T.C.C
P.O.BOX 1693 VIKA
OSLO 1 NORWAY

LTTE
P.O.BOX 47, 7500 STRUER
DENMARK

T.C.C
Via MARIANO STABILE 24
PALERMO ITALY

T.C.C
Den Haag, Nederland

Printed by Observer Group Newspapers